

# ஞானச்சுடர்

ஆனி

மலர் 2008



ஓம்

முருகா

வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

உ

# குறள்வழி



**வானின்று உலகம் வழங்கி வருதலால்**
**தானமிழ்த மென்றுணரல் பாற்று**

**பொருள்:** மழை இடையே நின்றுவிடாது பெய்தலால் உயிர்கள் வாழ்கின்றன. ஆதலால் அம்மழை உயிர்களுக்குச் சாவா மருந்து என்று அறியத்தக்கது. (11)

**துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்**
**துப்பாய தூஉ மழை**

**பொருள்:** உண்பார்க்கு நல்ல உணவுகளை உண்டாக்கி அவற்றை உண்கின்றவருக்குத் தானும் உணவாய் நிற்பது மழை. (12)



# நற்சிந்தனை

## ஒழுக்கம் விழுப்பந்தரும் தம்பிமாரே

ஒழுக்கம் விழுப்பந்தருந் தம்பிமாரே
ஓமென்று சிந்தைசெய்வீர் தம்பிமாரே
அழுக்கா றவாவெகுளி தம்பிமாரே
ஆன்மாவைப் பந்திக்குந் தம்பிமாரே
வழுக்கி விழுந்தாலுந் தம்பிமாரே
மலரடியைச் சிந்தைசெய்வீர் தம்பிமாரே
பழுத்த வடியருடன் தம்பிமாரே
பாடிப் பணியவேண்டும் தம்பிமாரே
மூப்புவந் தடையமுன்னே தம்பிமாரே
முழுதும் அறியவேண்டுந் தம்பிமாரே
நாப்பிளக்கப் பொய்யுரைத்துத் தம்பிமாரே
நாட்டிற்பொருள் தேடவேண்டாந் தம்பிமாரே
ஆதியந்தம் நமக்கில்லைத் தம்பிமாரே
ஆன்மாவே நாங்கள்காணும் தம்பிமாரே
ஓதி யுணரவேண்டுந் தம்பிமாரே
உய்யவழி யதுகாணுந் தம்பிமாரே
சாதி சமயபேதந் தம்பிமாரே
சங்கற்ப மென்றறிவீர் தம்பிமாரே
வாழிவாழி சிவன்நாமந் தம்பிமாரே
மனசாரச் சொல்லுங்கள் தம்பிமாரே
வாழிசிவ னடியார்கள் தம்பிமாரே
மன்னவனுஞ் செங்கோலுந் தம்பிமாரே



# ஞானச்சுடர்



வெளியீடு - 2 சுடர் - 125

## 2008 ஆனி

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| ஆற்றங்கரையினிற்றுலங்கும்..... | வ. குமாரசாமி ஐயர் | 1 - 3 |
| கோமாதா எங்கள் குலமாதா | திருமதி அ. நிருபா | 4 - 6 |
| தொடக்கும் தொந்தரவும் | கோப்பாய் சிவம் | 7 - 11 |
| மீராபாய் | Dr V. பாலகிருஷ்ணன் | - 12 |
| சைவக் கிரியைகள் | பொன். சுகந்தன் | 13 - 14 |
| தென்தமிழ்ப் புலவரும்.... | முருகவே பரமநாதன் | 15 - 17 |
| இறப்பை எண்ணி..... | திருமதி சி. யோகேஸ்வரி | 18 - 20 |
| மனிதப் பிறவியின் மாண்பு | வி. விசாலாட்சி | 21 - 23 |
| மனித மனமே மூலகாரணம் | செல்வி S.K. சிந்து | 24 - 25 |
| விதியும் விதிப்பயனும் | நா. நல்லதம்பி | 26 - 30 |
| ஒளவையார் அருளிச் செய்த..... | | - 31 |
| காலத்தின் தேவை | இரா. செல்வவடிவேல் | 32 - 34 |
| அன்பு | வாரியார் சுவாமிகள் | 35 - 38 |
| துர்க்கா துரந்தரிக்கு...... | | - 39 |
| சந்நிதியான் | ந. அரியரத்தினம் | 40 - 42 |
| அருணகிரிநாத சுவாமி..... | | - 43 |
| நித்திய அன்னப்பணி.... | | 44 - 45 |
| திருச்செங்காட்டங்குடி | வல்வையூர் அப்பாண்ணா | 46 - 48 |


**அன்பளிப்பு:-**

**மலர் ஒன்று 30/= ரூபா**

**வருடச்சந்தா தபால்செலவுடன் 385/= ரூபா**

**சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை**

**தொலைபேசி இலக்கம்:- 021- 2263406, 060- 2219599**

**பதிவு இல. Q.D/60/NEWS/2008**

**அச்சுப்பதிப்பு:- சந்நிதியான் ஆச்சிரமம், தொண்டைமானாறு.**

உ

# ஞானச்சுடர்
# வைகாசிமாத வெளியீடு

**வெளியீட்டுரை:-**

வைகாசி மாதத்தின் 125ஆவது ஞானச்சுடர் மலருக்கான வெளியீட்டுரையை கிராமசேவையாளராகிய திரு சி. சிவபாலசிங்கம் அவர்கள் நிகழ்த்தினார்கள்.

வெளியீட்டுரையின்போது ஆற்றங்கரையோரம் எழுந்தருளி இருக்கும் சந்நிதி முருகனின் திருவருளினாலும், ஆலயத்திற்கு வரும் பக்தர்களின் அன்னப்பசி போக்கிக் கொண்டிருக்கும் சந்நிதியான் ஆச்சிரம சுவாமிகளின் குருவருளினாலும், சைவ சமயத்தவர்களாக வாழ்பவர்களின் ஞானப்பசியைப் போக்கிக்கொண்டிருக்கும் ஞானச்சுடர் மலரானது [illegible]யில்லாமல் வெளிவந்துகொண்டிருக்கும் 125ஆவது சஞ்சிகையினை நான் வெளியிட்டு வைப்பதோடு இம்மலரை வெளியிட்டு வைக்க எனக்கும் முருகனின் திருவருள் கைகூடியுள்ளதோடு இவ்வகையான பணிகள் சிறப்பாக விளங்கவேண்டும் எனவும், தொடர்ந்தும் மலர்களை வெளியிட்டு வைக்க முருகன் எனக்கு அருளவேண்டும் எனவும் வேண்டி சந்நிதிக் கந்தனுக்கு நன்றிகூறி வெளியீட்டுரையை நிறைவு செய்தார்கள்.

**மதிப்பீட்டுரை:-**

வைகாசி மாதத்தின் ஞானச்சுடர் மலருக்கான மதிப்புரையை சைவப்புலவரும், ஈவினை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை அதிபருமாகிய திரு செ. பரமேஸ்வரன் அவர்கள் நிகழ்த்தினார்கள். அவர்தம் உரையின்போது, ஞானச்சுடர் மலர் வெளியீட்டோடு மட்டும் நின்றுவிடாது அன்னதானக் கந்தனோடு இணைந்து சைவ உலகம் மக்களுக்காக என்னென்ன பணிகளைச் செய்து வருகின்றதோ அதைவிட ஒருபடி உயர்வானதாகவே சந்நிதியான் ஆச்சிரமம் ஆற்றிவருகின்றது. அப்பணிகள் எல்லாவற்றையும் எதை, எப்படி, யாருக்கு, எந்த நேரத்தில் செய்யவேண்டும் என்பதை அறிந்து அதனைச் செயற்படுத்தி வருவது சிறப்பானதாகும்.

தொடர்ந்து இச்சஞ்சிகையில் இடம்பெறும் நற்சிந்தனைகள், திருக்குறள், சுடர் தரும் தகவல், கருத்துக்களுடன் கூடிய கட்டுரைகள் என்பன மனிதனை விழித்தெழவும் சிந்திக்க வைப்பதாகவும் அமைந்து விளங்குவது போற்றுதற்குரிய விடயமாக அமைகின்றன. சைவசமயத்திற்கும் சமூகத்திற்கும் தொண்டு செய்யும் எந்த மனிதப்பிறவியும் சுயநலத்தோடு வாழவும் போற்றவும் வேண்டியவர்களே என்பதை இம்மலரில் நாம் காணக்கூடியதாக உள்ளது.

இறுதியாக மலரில் இடம்பெற்ற கட்டுரைகள் யாவும் சைவக்கருத்துக்கள் பொதிந்துள்ளதுடன் தலையங்கத்திற்கும் முடிபுக்கும் பொருத்தமாக அமைந்திருக்கும் சிறப்புத் தன்மையினை சபையில் கூடியிருந்த அடியார்களுக்கு விளக்கிக்கூறியதோடு தற்கால சூழலில் மாணவரிடையே வாசிப்புப் பழக்கம் அருகிவருவதையிட்டும் இம்மலரானது எல்லோர் வீடுகளிலும் இருக்கவேண்டும் என்பதை வலியுறுத்தித் தனது மதிப்பீட்டுரையினை நிறைவு செய்தார்.

உ



## சுடர் தரும் தகவல்

# சரசாலை நுணுவில் சிதம்பர விநாயகர் ஆலயம்

தென்மராட்சிப் பகுதியில் சரசாலை என்னும் ஊரில் அமைந்து அருள் கொளிக்கும் நுணுவில் சிதம்பர விநாயகர் ஆலயம் ஈழத்தில் அமைந்துள்ள விநாயகர் ஆலயங்களில் சிறந்த ஆலயமாக திகழ்வது யாவரும் அறிந்ததே. விநாயகரை நோக்கி தினந்தோறும் வருகை தருகின்ற பக்தர்களில் தீவினையால் துன்புறுவோர்க்கும் வாழ்வின்றி தவிப்பவர்கட்கும் அபயகரம் நீட்டி அருள்பாலிக்கின்றார் விநாயகப்பெருமான்.

பன்னிரண்டு வருடத்திற்கு ஒருமுறை செய்யவேண்டிய கும்பாபிஷேகத்தினை செய்வதற்காக கடந்தவருடம் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு திருப்பணி வேலைகள் நடைபெறுகின்றன. அந்தவகையில் ஸ்நபன மண்டபம் பூர்த்தியடைந்துள்ளது. உட்பிரகார வீதி மண்டபம் வாகனசாலை மற்றும் மடப்பள்ளித் திருத்தவேலை, வசந்தமண்டப திருத்தவேலை போன்ற திருப்பணிவேலைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

சைவத்தையும் தமிழையும் தமது இரு கண்களாகப் போற்றும் இந்து மக்களுக்கு ஆலயங்களே நிலைக்களங்களாக உள்ளன. ஆலயங்களை மையமாகக் கொண்டே எமது சமூக மேம்பாடுகள், கலாச்சார வளர்ச்சி, ஆன்மீக வளர்ச்சி என்பன நடைபெறுகின்றன. ஆலயம் சிறப்புற அமைந்து நித்திய நைமித்திய பூசைகள் முறையாக நடைபெறும்போது ஆலயத்தைச் சூழவுள்ள மக்கள் வளம்பெறுகின்றன. இத்தகைய பாரம்பரியத்தை நிலைநிறுத்திக்கொள்வது மிகவும் அவசியமாகும்.

சரசாலை நுணுவில் சிதம்பர விநாயகர் ஆலய வளர்ச்சிக்காக இந்துப் பெருமக்களாகிய தாங்கள் தயாள சிந்தனையுடன் நிதியுதவி வழங்கி நுணுவில் சிதம்பர விநாயகரின் அருளைப் பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.

ஆலய பரிபாலன சபையிடமோ திருப்பணியிடமோ நேரடியாக வழங்குபவர்கள் வழங்கி பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொள்ளவும். வெளியிடங்களில் வசிப்போர் வங்கிக்கு அனுப்பவும்.

**சரசாலை நுணுவில் சிதம்பர விநாயகர் ஆலய பரிபாலனசபை சேமிப்புக் கணக்கு இலக்கம் 21797 சாவகச்சேரி மக்கள் வங்கி கிளை.**

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

ஆலய பரிபாலன சபை சார்பில்

**க. சிவசங்கரநாதன்**

***பரிபாலன சபைத் தலைவர்.***

உ

# அகம் குழைந்துவாடும் அடியார்களே!

அன்னையென்று வரும் பிள்ளைக்குத் தாய் சொல்லி
ஆற்றுவதைப் பாரீர்
அப்பனிருக்கின்றான் எம்மை யவன் பார்ப்பான்
அவதிப் படாதீர் என்பாள்

தன்னையே நம்பிடும் சார்ந்த அடியாரைச்
சந்நிதி யான்மறவான்
தாங்கும் பொறுப்பினைத் தள்ளி விடமாட்டான்
தயங்காதீர் என்று சொல்வான்

முன்னமே தருமத்தைத் தாபிக்கப் பிறந்தவன்
முக்கணான் திருமகனே - பெரிய
மூர்த்தி தலம் தீர்த்தம் மூன்றும் அவனாலே
முன்னிற்கும் சந்நிதியே

சின்னவ னென்றன்று அன்னவனை எண்ணிச்
செயற்பட்ட அச்சூரனை
செல்வச்சந்நிதிதனை இடமாகக் கொண்ட அச்
செல்வன் மடக்கி விட்டான்

தருமத்தை நன்கு கடைப்பிடித்தால் பெரிய
கருமத்தை வென்றிடலாம் - இந்தத்
தன்மைகள் யாவும் விளங்கிடக் கச்சியார்
காட்டினார் புராணத்திலே

சத்தியத் தைக்கொண்டு சாதித்துக் காந்திஜி
சித்திபெற்றதை யறிவீர் - அதைத்
தளராது கைக்கொண்டு சந்நிதிச் செல்வனைச்
சந்தித்தாற் சாந்தி தானே.

*முதுபெரும் புலவர்*
*கலாபூஷணம், ஆசிரியர்*
*வை. க. சிற்றம்பலம் [redacted]*

# ஆனிமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

**திரு N. ஜவர்கலால்நேரு**

(லண்டன்)

**திரு பொ. மாணிக்கவாசகர்**

(நியூசிலாந்து)

**திரு ஜென்ஸ் K. சிவஞானம்**

(பிரான்ஸ்)

**திரு K.M. நேரு**

(கொழும்பு)

**திரு வ. பாலசிங்கம்**

(கிராமசேவையாளர் கரணவாய்)

**திரு ப. சிவராசா**

(தூதாவளை கரணவாய்)

**திரு சி. இராமகிருஷ்ணா (ஆசிரியர்)**

(வடமராட்சி கணிதக்கல்வி மூலவள நிலையம் கரணவாய்)

**திரு சி. நவரெத்தினம்**

(துவாரகை கரணவாய்)

**திரு ம. ஸ்ரீகாந்தன்**

(அச்சுவேலி தெற்கு அச்சுவேலி)

**அதிபர்**

(அச்சுவேலி மத்திய கல்லூரி அச்சுவேலி)

**திரு M.P. தர்மலிங்கம்**

(பத்திரிகை முகவர் உடுப்பிட்டி)

**திரு பொ. வியாகேஸ் J.P**

(நிர்வாகி பீக்கொன் கல்வி நிறுவனம்)

**திரு மு. வைகுந்தவாசன்**

(இலங்கைவங்கி அச்சுவேலி)

**திரு இ. சண்முகலிங்கம் J.P**

(பிரதானவீதி தொண்டைமானாறு)

**திரு S. விக்னேஸ்வரராசா**

(சுப்ராங் தொலைத் தொடர்பு சேவை கதிரிப்பாய்)

**திரு பொ. வெங்கடேஸ்வரன்**

(நகரசபை பருத்தித்துறை)

**திரு செ. தேவேந்திரநாதன்**

(கணபதி வெதுப்பகம் உரும்பராய்)

**உரிமையாளர்**

(அம்பிகா நகை மாளிகை 121, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்)

**திருமதி அருள்நங்கை சண்முகநாதன்**

(புதிய உயர்கலைக் கல்லூரி யாழ்ப்பாணம்)

**திரு S. குணராசா**

(தாளையடி லேன் திருநெல்வேலி)

**அதிபர்**

(யாழ் இந்து ஆரம்பப் பாடசாலை கஸ்தூரியார் வீதி)

**திரு செ. சிவானந்தம் G.S**

(கிராம அலுவலர் புன்னாலைக்கட்டுவன் வடக்கு)

**உரிமையாளர்**

(கல்ப்பனா ஸ்ரோர்ஸ் அச்சுவேலி)

**உரிமையாளர்**

(வேலழகன் இரும்புக் களஞ்சியம் சுண்ணாகம்)

**திரு கந்தையா ஏகாம்பரம்**

(புறூடி லேன் அரியாலை)

**திரு P. பாலகிருஷ்ணன்**

(நல்லூர் U.N.H.E.R)

**திரு வை. கமலநாதன்**

(வர்த்தக முகாமையாளர், மானிப்பாய் கோ. பற்று. ப.நோ.கூ. சங்கம்)

**திரு இ. சரவணபவன்**

(இந்துசமய விருத்திச் சங்கம் ஆனைக்கோட்டை)

**திரு பொ. பாஸ்கரன் J.P**

(சோமசுந்தரம்வீதி, ஆனைக்கோட்டை)

**திரு க. யோகலிங்கம்**

(கிளை முகாமையாளர் புத்தூர்)

உ

# ஆற்றங்கரையினிற்றுலங்கும் அமுதசுரபி

சிவத்திரு வ. குமாரசாமி ஐயர் அவர்கள்

ஈழமணித்திருநாட்டின் வடபால் அமைந்த யாழ்ப்பாண மாவட்டம் சைவத்தின் இருப்பிடமாய்ப், பண்பாட்டின் களநிலமாய், சைவ பாரம்பரியத்தைத் தம் உயிர் நாடியாகக் கைக்கொண்டொழுகும் புனித ஜீவன்கள் வாழும் புண்ணியப் பகுதியாகும். இம் மாந்தர் தம் வாழ்வை மேன்மைப்படுத்தவல்லதான சீரிய பண்பாட்டு விழுமியங்களைக் கட்டிக்காத்து வருவன அவர்களின் சமயப் பண்பாட்டுக் கலாச்சாரங்களாகும். சமய வாழ்வைத் தம் உயிர் நாடியாகக் கைக்கொண்டு வாழ்வதற்கு இவர்களுக்கு வழிகாட்டிகளாக விளங்குவன சைவாலயங்களும் அவற்றில் முன்னெடுத்துச் செல்லப்படும் நடைமுறைப் பாரம்பரியக் கொள்கைகளுமாகும். ஆலய வழிபாடு யாழ் மாவட்டத்தில் வாழும் சைவர்களின் வாழ்வியலுடன் ஒன்றுபட்டுள்ளது. "கோயில் இல்லா ஊரிற் குடியிருக்க வேண்டாம்" என்ற பண்டைய முதுமொழிக்கமைவாகத் தமிழர்தம் வாழ்விடங்கள் அனைத்தும் ஆலயத்தை மையமாக வைத்தே அமைக்கப்பட்டுள்ளன.

இதற்கமைவாக ஈழமணித்திரு நாட்டில் வரலாற்றுச்சிறப்பு மிக்க ஆலயங்கள் பல அமைந்துள்ளன. தொன்மையும் மேன்மையும் மிக்கதான சிவாலயங்கள், அம்பிகை ஆலயங்கள், முருகஸ்தலங்கள், விநாயகர் ஆலயங்கள் இன்னும் பல தெய்வத் திருக்கோயில்களும் ஆங்காங்கே அமைந்துள்ளன. இவ்வண்ணம் கலியுகத்தின் கண்கண்ட தெய்வமாக விளங்கும் சிவகுமாரனாம் சிவசுப்பிரமணியனுக்கு ஈழத்தில் பிரசித்திபெற்ற பல ஆலயங்கள் அமைந்துள்ளன. தென் பகுதியில் அமைந்துள்ள கதிர்காமம் போன்று வரலாற்றுப் புகழ்பூத்த பல ஆலயங்களும் வடபால் அமைந்துள்ளன. இவற்றுள் தொன்மையும் மேன்மையும் அருட்பொலிவும்மிக்கதாய் அப்பன் முருகனின் அருளாட்சி நிறைந்ததாய் மிளிர்வது "செல்வச்சந்நிதி" என்று முருகனடியார்களால் வாயார அழைக்கப்படுவதான தொண்டைமானாற்றில் அமைந்துள்ள முருகஸ்தலமாகும்.

பண்டையநாளில் திருவல்லியாறு என்று அழைக்கப்பட்ட ஆற்றினை, தொண்டைமான் என்ற தென்னகத்து மன்னன் வர்த்தக நோக்கோடு அகழ்வித்தமையால் தொண்டைமானாறு என்று அழைக்கப்பட்டது. வல்லியாற்றுப் பகுதியும் காலப்போக்கில் தொண்டைமானாறு என்ற பெயர் கொண்டு அழைக்கப்படலாயிற்று. இவ்வாற்றங் கரையருகே செவ்வேட்குமரன் கோயில்கொண்ட வரலாறு கந்தபுராண காலத்துப் பழைமை வாய்ந்தது.

முருகப்பெருமானார் சூரனாதி அவுணர்தமை அடக்கியொடுக்கப் படைகொண்டு வீரமகேந்திரபுரி நோக்கி எழுந்தருளி, ஈழத்தின் வடபால் வந்தபோது சந்திக்காலம் கூடிய புனிதவேளையில் முருகனுக்குச் சந்திப்பூஜை செய்து வீரவாகுதேவர் முதலானோர் வழிபட்ட இடத்தில், தமது திருவடிகளைப் பதித்து

அருள்மழை பொழிந்தார். அப்பன் முருகனின் திருவடிகள் பட்டதனால் அதி புனிதம் வாய்ந்து விளங்கிய இத்தலம் தேவர்கள், முனிவர்கள், அடியவர்களின் வழிபாட்டுத்தலமாக விளங்கியது. கந்தக் கடம்பனின் அருளாட்சி இங்கே பொங்கித் ததும்புகின்றது.

குருபகவானுடைய அருள் மொழியை நிந்தித்த "ஐராவசு" எனும் கந்தர்வன் அவரின் சாபம்பெற்று மதம் பிடித்த யானையாக மாறிக் கதிர்காமக் காட்டில் அலைந்து அங்கு கந்தனை வழிபடவரும் முனிவர்கள் மற்றும் அடியார் களைத் துன்புறுத்தி வந்தான். இந்நிலையில் பாரதபூமியிலிருந்து சிகண்டி முனிவரும் சிஷ்யர்களும் கதிர்காமக் கந்தனைத் தரிசிக்கவந்தபோது இக் கொடூர யானை அவர்களையும் தாக்கமுற்பட்டது. அப்பொழுது முனிவர் ஒரு வெற்றிலையைக் கையில் தாங்கி முருகநாமத்தை ஓதி யானையை நோக்கி ஏவினார். அவ் வெற்றிலை வேலாக மாறி யானையை மாய்த்தது. அக்கந்தர்வன் சாபம் நீங்கித் தன் பழைய நிலையை அடைந்தான். அக்கந்தர்வன் முருகனின் ஆக்ஞைப்படி மானுட உடல் தாங்கி இத்தலத்துக்கு வருகை தந்து முருகனைப் பூஜித்து நிஷ்டைகைகூடி மகாசமாதி கைகூடும் நிலையை அடைந்தான். இச்சமாதித் தானத்திலே தானாக ஒரு பூவரச விருட்சம் தோன்றி இன்றளவும் அடியார்களுக்கு அருள் நிழலாக விளங்குகின்றது. இதுவே இத்தலத்தின் தலவிருட்சமாகப் போற்றப் பட்டுவருகின்றது. இப்பூவரச நிழலின்கீழ்த் தான் முருகபக்தராகிய மருதர் கதிர்காமரை வேற்பெருமான் ஆட்கொண்டார் என்ற திவ்விய வரலாற்றை நாம் அறிகின்றோம்.

பரதவகுலத்தில் தோன்றிய பூர்வீக நற்றவம் பொருந்திய மருதர் கதிர்காமர் என்ற பெருந்தகை தமது தொழில் நிமித்தம் இவ்வாற்றங்கரையோரம் வருவது வழக்கம். அக்காலங்களில் அவர் தொழில் வருவாய் குன்றியிருந்தமையால் அவர் மிகவும் வறுமையின் பிடியிற் சிக்கியவராய் வாழ்ந்து வந்தார். அக்காலங்களில் அத்தெய்வீகப் பூவரச மரத்தடியில் பற்பல முருகனின் திருவிளையாடல்கள் இடம்பெற்று வந்தன. கதிர்காமரை யாரோ கைதட்டி அழைக்கும் குரல் கேட்கும். திரும்பிப்பார்த்தால் யாரையும் காணமுடிவதில்லை. மயில் அகவும் சத்தமும் சேவல் கூவும் ஒலியும் கேட்கும். இப்படிச் சில நாட்கள் கழிந்தபின் ஒருநாள் இடைச் சிறுவன் ஒருவன் பூவரச மரத்தடியில் நின்று தன்னிடம் வரும்படி கதிர்காமரை அழைத்தான். கதிர்காமர் அச்சிறுவனை அணுகியதும் கதிர்காமரின் திருமுகத்தை உற்றுநோக்கி "மிகவும் பசித்தனை போலும்" என்றுகூறி அரிசி, காய்கறி பாத்திரங்களைக் காட்டிச் சமையல் செய்யும்படி பணித்தான். சமையல் முடிந்தபின் அச்சிறுவன் 65 ஆலம் இலைகளைப் பறித்துவந்து அந்த இலைகள் முழுவதிலும் அமுதைப் படைக்கும்படி புன்சிரிப்புடன் பகர்ந்தான். "தம்பி நாங்கள் இருவர் மட்டும்தான் இருக்கின்றோம் ஏன் 65 இலைகளில் படைக்கவேண்டுமெனத் தவச்செல்வன் கதிர்காமர் வினவினார். இங்கு 63 அடியார்கள் வருவார்கள் என இடைக்குமரன் கூறினான். படைத்ததன்பின் அடியவர்களைக் காணவில்லையே எனக் கதிர்காமர் சிறுவனை வினவியபோது அவன் கிழக்குத் திசையைக் காட்டி அதோ வருகிறார்களெனக் கூறினான். அங்கு அத்திசையில் ஒருவரையும்

காணவில்லை. ஆனால் 63 ஆலம் இலை அமுதும் மறைந்துவிட்டன. அவ்வேளை யில் இடைச்சிறுவனும் மாயமாக மறைந்து விட்டான். பூர்வீக நற்றவம் வாய்ந்த கதிர்காமர் அது முருகன் செயலென உணர்ந்து உள்ளமுருகக் கண்ணீர் ததும்ப முருகா முருகா என்று அழைத்து மீண்டும் தமக்குக் காட்சி தரவேண்டுமென்று இரந்து வேண்டினார்.

கதிர்காமர்மீது கருணைகொண்ட வள்ளல்முருகன் அவருக்குக் காட்சி கொடுத்து வேலொன்றை அளித்துத் தான் கதிர்காமக்கந்தன் என்பதை உணர்த்தித், தனது பாதச்சுவடுபதிந்த இவ்விடத்தில் இவ்வேலாயுதத்தைப் பிரதிஷ்டை செய்து பூசனைபுரியும்படி கருணைமழை பொழிந் தார். முருகப்பெருமானின் திருவாய் மொழி யைச் செவியுற்ற கதிர்காமர் தன்னை மறந்தவராய் "அப்பனே பூஜை வழிபாட்டு முறையை அறியாத பாமரனாகிய நான் எப்படி உனக்குப் பூசனை புரிவேன்" என்று கேட்டபொழுது கதிர்காமருக்குக் கதிர் காமத் தரிசனையைக்காட்டி அங்கு குறவர் இனம் வெண்துகிலால் வாய்கட்டி மௌனமாகப் பூசனைபுரிவதுபோல் நீயும் என் பூஜையைப் பக்தியுடன் செய்து வரு வாய்" என்று பணித்தார். அன்று கதிர்காம ருக்கு அருளியபடி படைத்த ஆலமிலை அமுது அன்னமலையாகிப் பசித்தோர் பிணி நீக்கும் அமுதசுரபியாக நிறைவைத் தந்தவண்ணம் இன்றுவரை விளங்கி வருகிறது. அப்பன் முருகன் உவந்தளித்த அமுதாகையால் அது உடற்பசியை மட்டுமன்றி உயிர்ப்பிணியையும் நீக்க வல்ல அருமருந்தாயிற்று.

வெற்றிவேற் பெருமான் கதிர் காமரை ஆட்கொண்ட புனிதமான பூவரச மரத்தடி இன்றும் அருட்பிரவாகம் பெற்று விளங்குகிறது. அம்மரத்தடியில் அமர்ந்து முருகனைப் பூஜிப்பவர்கள் சகல புண்ணிய தீர்த்தங்களிலும் நீராடிய பலனையும் சகல திவ்விய ஷேத்திரங்களைத் தரிசித்த பலனையும் அடைகிறார்கள். பூவரச மரத்தடியிலமர்ந்து தியான வழிபாடுகளில் ஈடுபடுவோர் பெரும் ஆன்ம லாபத்தைப் பெற்று இன்புறுகின்றனர்.

முருகன் அருள்பெற்று முருக நாமத்தைத் தம்முயிராகக் கொண்டு வாழும் முருகன் அடியார்கள் பெறும் பேறுகள்தாம் என்னே! என்று சிந்திக்கும் வண்ணம் அவனின் அருளாட்சி தொண்டைமானாற் றோரம் நடைபெறுகிறது. முருகா முருகா என்று ஊனுருக, உள்ளம் உருக அழைக் கும் அடியார்கள், ஆடுவதும் பாடுவதும் சிரிப்பதும் களிப்பதுமான பேரானந்தச் சூழலே இன்றும் இங்கு காணப்படுகின்றது. முருகனைச் சரணடைந்தோர்க்குத் துன்ப மேது? துயரமேது? தொல்லைதானேது? மரணபயமேது? என்றவகையில் சந்நிதி யானைச் சரணடைந்தவர்கள் வாழ்வு அமைந்திருப்பது கண்கூடு.

இவ்வாறு அடியார் மிடி பொடியாக் கும் அப்பன் முருகன் பசித்தவர்க்கு அன்ன மளிப்பான், பொருள் வேண்டுவார்க்குப் பொருள் தருவான், அருள் வேண்டுவார்க்கு அருள் தருவான், தன்னை மறந்தவரையும் நினைக்க வைப்பான், நித்தம் நினைத்த வரைக் காத்தருள்வான், காத்தருளுதற் குரிய அன்பர்களைக் கடைத்தேற்றுவான். கலியுகத்தின் கண்கண்ட தெய்வமாக விளங்கும் ஆற்றங்கரையோனின் அருட் பிரவாகத்தைச் சிறிதளவேனும் அனு பவிக்க அடியேன் என்னதவம் செய்தே னென்று எண்ணத் தோன்றுகிறது.

எல்லாத் தீமைகளுக்கும் வேர் பண ஆசை.

உ

# கோமாதா எங்கள் குலமாதா

திருமதி அ. நிருபா அவர்கள்

எமக்கெல்லாம் பாலூட்டி வளர்ப்பவளை நாம் தாய் என்று அழைக்கின்றோம். உலகில் உயிர்களுக்கெல்லாம் பாலை அருளோடு கலந்தூட்டும் அன்னையாம் பசுவைக் "கோமாதா, "ஜகன்மாதா" என்று அழைக்கலாம்தானே.

பண்டைக்கால முதல் ஆசாரசீலமுடைய இந்துக்கள் பசுவை விலங்காகக் கருதவில்லை. அதனைத் தெய்வமாகவே கருதினர். சாஸ்திரங்கள் பலவும் "எள்ளைத் தானியமென்றும், பசுவை விலங்கென்றும் கொள்ளக்கூடாது" என்று எடுத்துக்கூறுவது இங்கு மனங்கொள்ளத்தக்கது.

**மாட்டுச் செல்வம்**

பொன்னுக்கும், பொருளுக்கும் அதிக முக்கியத்துவம் வழங்கப்படாத காலத்தில் கால்நடைகளே ஒருவனது உண்மையான செல்வமாக மதிக்கப்பட்டன. மாடு இல்லாத வீடே பழைய காலத்தில் இல்லை. நாட்டின் பொருளாதாரத் துறையில், தனிச்செல்வமாக மாடு விளங்கியது. இதனால் செல்வத்தை 'மாடு' என்ற சொல்லால் குறிப்பிட்டு வந்தனர். வள்ளுவனும் தன் குறளில்

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடு அல்ல மற்றையவை"

என்று செல்வத்தை மாடு என்ற சொல்லாலேயே வெளிப்படுத்தியது இங்கு நோக்கத்தக்கது.

**நீதிநெறியும் பசுவளமும்**

நமது மூதாதையர் மட்டுமன்றி அவர்களை ஆண்ட மன்னரும் பசுவை வளர்ப்பதிலும், அதனைப் பாதுகாப்பதிலும் அதிக கவனம் செலுத்தினர். நீதிநெறி தவறாது ஆட்சிநடைபெற்ற தேசத்தில் பசுவளம் கொழித்ததாகவும், அதன் பேறாகப் பால்வளம் செழித்து மக்கள் சீரும் சிறப்புமாக வாழ்ந்ததாகவும் அறியமுடிகின்றது.

அரசன் அதர்மவழியிற் செல்வான் ஆயின், பசுக்களினால் உண்டாகும் பயன் குறைவடையும்.

"ஆ பயன் குன்றும் அறுதொழிலோர் நூல் மறப்பர்
காவலன் காலான் எனின்"

என்கிறார் வள்ளுவப் பெருந்தகை.

**சம்பந்தர் போற்றும் பசு**

"வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண் புனல் வேந்தனும் ஓங்குக"

என ஆனினம் பெருக்குவதன் அவசியத்தை ஞானசம்பந்தரும் எடுத்துக் காட்டியுள்ளார்.

**பசுவைப் போற்றும் கண்ணன்**

கண்ணபிரான் கோகுலத்தில் பசு மேய்த்தான் என்றும், அவன் வாசிக்கும் புல்லாங்குழல் இசையில் பசுக்கள் மயங்கி நின்றன என்றும் பெரியாழ்வார் கண்ணனைப் போற்றிக் கூறுகின்றார்.

பெருமழையில் அவதியுற்ற பசுக்களைக் கண்ணன் கோவர்த்தன மலையைக் குடையாகப் பிடித்துக் காத்ததாகவும் நாம் அறியமுடிகின்றது.

**பசுக்களின் அன்பால் உதித்த திருமூலர்**

பசுக்களை மேய்க்கும் இடையர் குலத்தில் பிறந்த மூலன் என்பவன் பசுக்களுடன் அன்புடன் பழகி அவற்றை மேய்த்து வந்தான். ஒருநாள் அவன் உயிரைக் காலன் காவு கொள்ளவே அவன் பிரிவால் பெருந்துயருற்ற பசுக்கள் கதிகலங்கி நின்றன. அவ்வேளை கைலயங்கிரியில் இருந்து வந்த சுந்தரநாத முனிவர் அதைக் கண்டு மனம்புழுங்கி இறந்த மூலனின் உடலிற் புகுந்து பசுக்களை மகிழ்ச்சிப் படுத்தியதுடன் இந்துக்களின் அரும் பொக்கிஷமான திருமந்திரத்தையும் தந்து திருமூலராக 3000 ஆண்டுகள் வாழ்ந்தார்.

**இசையால் பசுக்களை மகிழ்வித்தவர்கள்**

கண்ணபிரான் புல்லாங்குழல் இசையால் பசுக்களை மகிழ்வித்ததுபோல, ஆனாய நாயனாரும் வேய்ங்குழலால் திருவைந்தெழுத்தை இசைத்துப் பசுக்கள் எல்லாவற்றையும் இசையால் மயங்கச் செய்வாராம். இன்றைய நவீன விலங்குப் பரிபாலன விஞ்ஞானிகள் பசுக்கள் இசையில் மயங்கும் வல்லமை உடையன என்றும், இசை கேட்கும் பசுக்கள் அதிகம் பால் சுரப்பதாகவும் எடுத்துக்கூறியமை இங்கு நோக்கத்தக்கது.

**பசுவைக் காத்த இந்துக்கள்**

பசுவின் கன்றைக் கொன்ற குற்றத்திற்காகத் தன் மகனையே தேர்ச்சில்லால் இட்டுக் கொல்லத் துணிந்த மனுமன்னன் காளிதாசனின் ரகுவம்சத்தில் ரகுவின் தந்தையான திலீபன் சிம்மத்திடமிருந்து பசுவைக் காக்கத் தன்னுயிரைத் தியாகிக்க முன்வந்தமை போன்ற செயல்கள் இந்துமதம் பசுமீது வைத்திருந்த பெருங்கருணையைக் கோடிட்டுக் காட்டி நிற்கின்றன.

**நந்தி வழிபாடு**

இந்து ஆலயங்களில் நந்தி வழிபாடு முதன்மை இடம்பெறுகின்றது. நந்தி தர்மத்தின் சொருபமாகப் போற்றப்படுகின்றது. சிவபிரான் தனது வாகனமாக நந்தியையே கொண்டுள்ளார். பல்லவரின் கொடியிலும் நந்திதேவர் இருப்பது மனங்கொள்ளத்தக்கது. எமது இந்து கலாச்சாரக் கொடியிலும் யாழ் பல்கலைக்கழக இலச்சினையிலும் நந்தியிருப்பது நோக்கத்தக்கது.

**சிந்துவெளிக்காலத்தில் ஆவினம்**

உலகின் பண்டைய நாகரிகங்களில் ஆதியானது எனக்கருதப்படும் சிந்து நதிக்கரையில் அக்காலத்தில் இந்துக்கள் வாழ்ந்திருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

இந் நதிக்கரையில் உள்ள இரு சிறந்த நகரங்களான மொகஞ்சதாரோ, ஹரப்பாவில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகளின்போது திமில் பெருத்த எருது முத்திரைகள் பல கண்டெடுக்கப்பட்டுள்ளன. இதிலிருந்து பண்டைக்காலத்திலேயே எருதுக்கு (பசுவின் ஆண்பால்) நம்மவர் கொடுத்த மதிப்பினை நன்கு உணரமுடிகின்றது.

**குருகுலக்கல்வியில் ஆநிரை**

பண்டைக்காலத்தில் இந்துக்கள் குருகுலமுறையில் கல்விபயின்றனர். குருகுலத்தில் ஆரம்ப காலத்தில் ஆநிரைகளை மேய்ப்பதும், பராமரிப்பதும் சீடர்களின் முக்கிய கடமைகளாக இருந்தன.

**புண்ணிய கைங்கரியம்**

"யாவர்க்காயினும் பசுவிற்கொரு வாயுறை" என்கிறார் திருமூலர். அதாவது பசுவிற்குத் தினமும் ஒருபிடி புல்லையாவது கொடுக்கவேண்டும் என்பது இவர் கருத்து. இதேபோல் மாடு குடிப்பதற்கு நீரும், ஆவுரோஞ்சு கல்லும் (பசு உராயும் கல்லு) வைப்பது புண்ணிய கருமமென இந்துக்கள் நோக்குகின்றனர்.

**ஆநிரை கவர்தல்**

ஒருநாட்டின்மீது படையெடுக்கு முன்னர் பகைகொண்ட மன்னன் முதலில் அந்நாட்டுப் பசுக்களைக் கவர்ந்து வருவான். அவ்வாறு கவர்ந்து வருவதன் நோக்கம் ஆவினத்தைப் பெரும்போர் நடவடிக்கையிலிருந்து காப்பதற்குப் போலும்.

**மகாலட்சுமியின் மறுஅவதாரம்**

மக்கள் உண்பதற்கு உணவுபெற வயலை உழுபவை மாடுகள். இவை மக்கள் உண்டுபோக எஞ்சியிருக்கும் வைக்கோலை உண்டு பாலாகிய அமுதத்தைத் தரும் தியாகிகள். எனவேதான் மாடுகளை மகாலட்சுமியின் மறு அவதாரமாகப் பூசிக்கின்றோம். தைப்பொங்கலின் மறுநாள் பட்டிப்பொங்கல் விழா கொண்டாடப்படுகின்றது. இவ்விழாவின்போது மாடுகளை நீரினால் நன்கு குளிக்கவார்த்து அவற்றை மகாலட்சுமியாக மனத்தில் எண்ணி அவற்றின் நெற்றியில் விபூதி இட்டு சந்தனம், குங்குமம் சாத்தி மாலையிட்டு இஞ்சியிலை, மஞ்சளிலை என்பவற்றைக் கோவையாகக் கழுத்தில் இட்டுக் கொம்புகளுக்கு வர்ணக்கலவை பூசி மாட்டின்முன் பொங்கலிட்டுப் படைத்து, ஆராத்தி எடுத்து, அவற்றை வணங்குதல் அன்றைய நாளின் சிறப்பாகும்.

**பசுவின் பால்**

பசுவின்பால் இந்துக்களின் சமய, கலாச்சார நிகழ்வுகளில் முக்கிய பொருளாகக் கருதப்படுகின்றது. இறைவனை அபிஷேகிக்கப் பாலும், பாற் பொருட்களும் பயன்படுத்திப் பல்வேறு நன்மைகளை அடையலாம். பால்கொண்டு இறைவனை அபிஷேகித்து ஆயுள் விருத்தியையும், தயிர்கொண்டு அபிஷேகித்து நற்புத்திர பாக்கியத்தையும், நெய்கொண்டு அபிஷேகித்து மோட்சமும் அடையமுடியும் என்ற நம்பிக்கையுண்டு.

இவ்வாறாகப் பண்டைக்காலமுதல் புனிதமாகப் பேணிவளர்க்கும் பசுவை நாமும் புனிதமாகப் பேணிவளர்த்து எம் வாழ்வை வளம்படுத்திக்கொள்வோமாக.

**இறைவன் தூய பக்தர்களிடம் அதிக அளவில் பிரகாசிக்கிறான்.**

உ

# தொடக்கும் தொந்தரவும்

கோப்பாய் சிவம் அவர்கள்

தொடக்கு என்ற ஒரு விடயம் இந்துக்கள் மட்டுமே பெரிதும் கவனிக்கின்ற ஒன்று. ஆசௌசம் எனக்கூறப்படும் இந்த விடயம் இந்துக்களின் அனுட்டானத்தில் இருப்பதால் அவர்கள் மிகவும் நுணுக்கமாகப் புனிதம் பேணுபவர்களாக விளங்குகிறார்கள். அதேநேரம் இன்று இந்தத் தொடக்கு என்பது பலருக்குப் பெரும் தொந்தரவான ஒன்றாகவும் புரிந்து கொள்ளமுடியாத ஒன்றாகவும் உள்ளது.

தொடக்கை யார் எந்தெந்த நேரத்தில் எவ்வளவு காலம் பேணவேண்டும் என்ற தெளிவு பலரிடம் இல்லாமலுள்ளது. இது பலருக்குச் சிரமம் தருவதாக இருப்பதுடன் சிலருக்கு வசதியாகவும் உள்ளது. "தேவைக்கேற்ப விரும்பியபடி தொடக்கைப் பேணலாம். விரும்பிய நாளில் தொடக்கைக் கழிக்கலாம்" என்ற அளவுக்கு அது ஒரு கேலிக்கூத்தாகவும் ஆகி வருகிறது.

நமது சமய நம்பிக்கைகள், சடங்காசாரங்களின் நடைமுறை என்பனபற்றி நமது அடுத்த தலைமுறையினரிடம் இயல்பாகவே கேள்விக்குறிகள் தோன்றிவரும் இன்றைய நாளில், தொடக்கு பற்றிய அவர்களின் கேள்விகளுக்குப் பதில் கூறமுடியாமல் நம்மவர்கள் திகைக்கின்ற நிலைமை அவதானிக்க முடிகிறது. இதனால் தொடக்கு என்பது தேவையற்ற ஒன்று என்னும் அலட்சியப்போக்கும் தோன்றக் காண்கிறோம்.

எனவே, பழைய தலைமுறையினருக்கும் புதிய தலைமுறையினருக்கும் பாலமாக நிற்கும் இடைநிலையினரான நாம் நன்கு சிந்தித்து ஒரு தெளிவைப் பெறவேண்டியவர்களாக இருக்கிறோம். மரபுவழிப்பட்ட இதன் ஆரம்ப விளக்கங்களையும் காலதேச வர்த்தமானங்களுக்கிணங்க நாம் மேற்கொள்ளக் கூடிய பொருத்தமான நடைமுறைகளையும், முடிந்த அளவில் அறிவியல்- விஞ்ஞான இரீதியாக இவ்விடயம் தொடர்பாக நாம் எடுக்கக்கூடிய தீர்மானங்கள் என்பனவும் இங்கு முக்கியத்துவம் பெறுகின்றன.

முதலில், ஒரு விடயத்தில் நாம் உறுதியாக இருக்கவேண்டும். வேதம், சிவாகமம், தர்மசாஸ்திரங்கள், இதிகாச, புராணங்கள் முதலியவற்றை நாம் நம்பி அவற்றிற் சொல்லப்பட்ட விடயங்களை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும் என்ற நிச்சயம் நமக்குள் ஏற்பட வேண்டும். கடவுள் ஒருவர் இருக்கிறார், அவர் ஆன்மாக்கள் கடைத்தேற அருளுகிறார், அதற்கு இந்த நூல்கள் உதவுகின்றன என நம்பி முன்னோர்கள் வழியில் நாமும் நடந்து, நல்லொழுக்க நெறியில் வாழ்ந்து, தர்மம் பேணி, இவ்வுடலையும் மல அழுக்குக்களையும் நீக்கி, இறைவனுடன் ஐக்கியமாக வேண்டும் என்ற அசையாத நம்பிக்கையும் விசுவாசமும் இருந்தால்த் தான் நாம் தொடர்ந்து இவ்விடயங்களை ஆராய்வதிற் பலனுண்டு. அரைகுறை நம்பிக்கையுடன் இவற்றிலீடுபட்டு ஐயங்கள் பலவற்றை வளர்த்துக்கொண்டு அக்கறையில்லாமல் ஆசாரங்களைக் கைக்கொள்வதைவிட முற்றாக இந்த நம்பிக்கைகளைக் கைவிட்டுப் "பகுத்தறிவு வாதி" என்ற பெயருடன் நவீன

ஒழுங்காக வாழ்பவன் சிறந்த போதகன்.

வாழ்க்கையை முழுமையாக ஏற்றுக் கொள்வதுமேல்.

பெண்கள் தீட்டுக் காலங்களில் சேவைகளில் ஈடுபடுவதால் அவள் சேவை யாற்றும் பல நிறுவனங்களில் உள்ள இயந்திரங்கள் முதலியவற்றில் கோளாறு கள் ஏற்பட்டிருப்பதையும் உற்பத்திக் குறைவு ஏற்பட்டிருப்பதையும் மேலைத் தேய விஞ்ஞானிகள் சிலர் ஆராய்ச்சிகள் மூலம் கண்டறிந்துள்ளார்கள். தீட்டு, தொடக்கு முதலிய ஆசாரக் குறையுடை யோர் கலந்துகொள்ளும் வைபவங்கள் பல ஏதாவது குழப்பங்களுடன் முடிந்துள் ளதை அனுபவத்திற் பலர் கண்டுள்ளனர். உடல் சம்பந்தமாக மட்டுமல்லாமல், மனம் சம்பந்தப்பட்டதாகவும் இவ்விடயம் இருப்பதால், மனோதத்துவ இரீதியாக இவ்விடயம் பல பாதிப்புக்களை ஏற்படுத்த வல்லது என்பதை மேலைத்தேய விஞ் ஞானிகள் பலர் இன்று ஒப்புக்கொள்கின் றனர். இவ்விடயங்களை நம்மவர்கள் முதலில் கவனத்திற் கொள்ளவேண்டும்.

தொடக்குக் காலத்தில் ஆலயத் துக்குச் செல்லுதல், கிரியைகளிற் பங்கு கொள்ளுதல், விரதமிருத்தல், சுபகாரியங் களிற் கலந்துகொள்ளல் என்பன தவிர்க் கப்பட வேண்டும். இங்கு மிகமுக்கியமான ஒரு விடயம் கவனிக்கப்பட வேண்டும். **ஆசௌசியின் அன்னம் புசித்தவனுக்கும் ஆசௌசம் நேரும். அறியாது புசித்தால் அவ்வுணவு சீரணிக்கும் வரை ஆசௌசம். அறிந்து புசித்தால் ஆசௌசியின் ஆசௌ சக் கழிவு நாள்வரை அவ்வுணவு புசித்த வரும் ஆசௌசம் காக்கவேண்டும்.**

சில ஊர்களில் மரணச்சடங்கு நிகழ்ந்த மறுநாள் ''உரிமைச்சோறு உண்ணுதல்" என்று அயலவர்கள் யாவரை யும் வருந்தி அழைத்து, உணவு கொடுப் பார்கள். "குறை நினைப்பார்களே" என்று அயலவர்களும் அங்கு சென்று வயிறு புடைக்கத் தொடக்குச்சோறு உண்பார்கள். இதேபோல் "எட்டுச்செலவு" என்ற பெயரி லும் ''மற்சப்படையல்'' என்ற பெயரிலும் நடைபெறும் விருந்துபசாரங்களிலும் யாவ ரும் கலந்துகொள்வார்கள். ஆனால், அதனால் தங்களுக்கும் தொடக்கல்லவா என்ற எண்ணம் சிறிதுமின்றி அடுத்தநாளே ஆலயம் சென்று சங்கற்பம் செய்தல் முதல், சுவாமி காவுதல்வரை சகல சுபகாரியங்களிலும் பங்குபற்றுவார்கள். இது அறியாமையின் விளைவா? அல்லது அலட்சியத்தால் வரும் ஆணவச் செயலா?

இங்கு மிகமுக்கியமாக விளங்கிக்கொள்ளவேண்டிய சில விடயங்கள் உள்ளன.

1. உரிமைச்சோறு என்பது தொடக்குரிமை உள்ளவர்களுக்கு மட்டுமே உரியது. மற்றவர்கள் அதிற் கலந்துகொள்ளாமல் இருக்கவேண்டும். கலந்துகொண்டால் முப்பது நாளும் தொடக்குக் காக்க வேண்டும்.

2. இறந்தவர்கள் தெய்வநிலைக்குப் போய்விட்டார்கள் என்பதே நமது நம்பிக்கை. அவர்களுக்கு மற்சம், மாமிசம் படைப்பது என்பது சற்றும் பொருத்தமில்லாத ஒன்று. பிரேத நிலையிலிருக்கும்போது அவர்களுக்கேற்படும் பெரும்பசி, பெருந்தாகம் என்பன தீருவதற்காகப் பெரும்படையல் (பிரபூதபலி) ஒன்று அவசியம் செய்யப்படவேண்டும் என்பதற்காகவே ''எட்டுச்செலவு'' நிகழ்கிறது. இந்தப் படையல் அனைத்து உணவுப்பொருட்களையும் கொண்டதாக அதிகமாக இருக்கவேண்டும் என்பதே முக்கியமல்லாமல் இறந்தவருக்குப் பிரியமான அனைத்தையும் கொடுத்தல் எனப் பொருள்படாது. சுத்த போசனமே இங்கு படைக்கப்படவேண்டும். அதனைத்

தொழும்புக்காரர் (முன்னாளில்) எடுப்பது அல்லது கடலில் சேர்ப்பது என்பதே முறை. உறவினரும் அயலவரும் அதனை ஒரு விருந்தாக உண்டு மகிழ்வது பாப காரியம். இன்று பல இடங்களில் மற்ச மாமிசத்துடன் மதுவும் சேர்த்து, அமைதியாக ஆன்மீக ரீதியில் நடாத்தவேண்டிய நிகழ்வு, பிறந்தநாட் கொண்டாட்டம்போலக் கேளிக்கைகளுடன் நடைபெறும் கேலிக்கூத்தைக் காணலாம்.

(அந்தணர்கள் வீடுகளில் நடக்கும் தசாகம் என்னும் கல்லெடுப்புக் கிரியையில் இறந்தவரை நினைத்துப் படைக்கப்படும் உணவு கல்லோடு சேர்த்துக் கடலிற் போடப்படுகிறது. அதை உறவினர்கள் உண்பதில்லை)

3. ஜனன மரணம் நடந்த வீட்டிற்குள் செல்லுதலும் அவர்களுடன் கலந்து பழகுதல், அவர்களிடம் நீர் பருகுதல், உணவுண்டல் என்பனவும் தவிர்க்கப்பட வேண்டும்.

4. இன்று பலரும் தெரிந்துகொள்ளவேண்டிய இன்னொரு முக்கிய விடயம் உண்டு. உரிமைச்சோறு சாப்பிடுதல் என முன்னர்க் குறிப்பிட்டதுபோல தொடக்குரிமையுடையோர் மட்டுமே வாய்க்கரிசி போடுதல், குளிப்பாட்டுதல், சவம் தூக்குதல் முதலியவற்றில் ஈடுபடவேண்டும். அச்செயல்களும் தொடக்கு என நூல்கள் விதிக்கின்றன.

31ஆம் நாளில் வீட்டிற்குப் புரோகிதர் (குருக்கள்) வந்து தொடக்குக் கழித்தல் என்ற கிரியை செய்த பின்பே தொடக்குக் கழிகிறது. இங்கு முக்கியமாகக் கவனிக்கவேண்டியது, தொடக்குக் கழித்தலில் இரு அம்சங்கள் சரியாக அமைய வேண்டும். அதற்குரிய நாட்கள் நிறைவு பெறவேண்டும். அதற்குரிய கிரியை நடைபெறவேண்டும். உரிய நாளின்முன் கிரியை செய்துவிட்டுத் தொடக்குக் கழிந்துவிட்டது என நாம் திருப்தி கொள்ள முடியாது. உரிய நாள் கழிந்துவிட்டது தானே என்பதால் கிரியை செய்யாமலே தொடக்குக் கழிந்துவிட்டது என எம்மை நாம் ஏமாற்றிக்கொள்ள முடியாது. இரண்டும் சரியாக அமையவேண்டும்.

இன்னும் சில தவறான நடைமுறைகள் நம்மவர்கள் மத்தியில் இன்று காணப்படுகின்றன. "நான் இப்போது கொஞ்சநாள் மற்சம் சாப்பிடுவதில்லை" என்றும், நான் "தீட்சை கேட்டனான்" என்றும், "தூரத்துச் சொந்தம் தானே" என்றும், "வெளிநாட்டில்தானே நடந்தது. கடல் கடந்தால் தொடக்கில்லைத்தானே" என்றும் குறித்த நாளிற்குச் சில நாட்கள் முன்ன தாகவே தொடக்குக் கழிப்பவர்கள் பலர் உள்ளனர். இவை யாவும் சாஸ்திர விதிப் படி பாவகாரியங்களே. குறைந்த நாளில் தொடக்குக் கழிக்கும் உரிமை பெற்றோர் பரம்பரை பரம்பரையாகச் சுத்த போசன ராக உள்ள, சைவாசாரம் மிக்க, தீட்சை பெற்ற குடும்பத்தவர் மட்டுமே.

ஆசௌசம் பற்றிய அடிப்படை நியதிகளை வீழிநாதர் இயற்றிய அகபஞ்ச சஷ்டி நூல் வரையறுக்கிறது. **வைத்திய நாத தீட்சிதீயம், ஆசௌச தீபிகை, யஜுர்வேதீய ஆபஸ்தம்ப அபரப்ரயோகம் முதலிய நூல்களும் காமிகாகமம், சுவாயம்புவ ஆகமம்** என்பனவும் இந்த விபரங்களைத் தெளிவாகத் தருகின்றன.

**காமிகாகமத்தில்,**

"விப்ரே சுத்திர் தசாஹஸ்யாத் க்ஷத்ரியெ த்வாதசாஹ்நிகாத்

தச பஞ்சாஹ்நிகாத் சுத்தி வைஸ்யே, சூத்ரேச மாசிகாத்" என ஆசௌச நியமம் கூறுகிறது.

நீரினால் உடல் சுத்தமாகிறது சத்தியத்தால் மனம் சுத்தமாகிறது.

அந்தணர்களுக்குப் பத்து நாட்களிலும் க்ஷத்திரியர்களுக்கு 12 நாட்களிலும் வைஸ்யர்களுக்கு 15 நாட்களிலும் சூத்திரர்களுக்கு ஒரு மாதத்திலும் தொடக்கு நீங்குகிறது என்பது இதன் பொருள். இதே கருத்தைச் சுவாயம்புவ ஆகமமும் கூறுகிறது.

இந்நாளில் க்ஷத்திரியர், வைஸ்யர் என்ற .வகுப்பினரை உரிய முறைப்படி காணடலரிது. மாமிச போசனம் நீக்கிச் சமய, விசேட தீக்ஷைகளைப் பெற்று, நித்ய சிவபூஜை வழிபாட்டுடன் இருக்கும் சைவக்குருமாரும் வேறுசிலரும் வைசிய வகுப்பார்போல் நோக்கப்படலாம். ஏனையோர் யாவரும் அந்தணர், சூத்திரர் என்னும் இரு வகுப்பில் அடங்குவர்.

பூரண ஆசௌசம் என்பது அந்தணர்களுக்குப் பத்துநாள். மற்ச மாமிச போசனமின்றிச் சைவசமய ஆசாரப்படி ஒழுகும் சற்சூத்திரருக்கு 15 நாளும் ஏனையோருக்கு 30 நாளும் ஆசௌசம் என்பது யாவரும் ஒப்புக்கொள்ளும் நியதிகள்.

ஆலயங்களில் தொண்டுபுரியும் சிவகன்மருக்கு 20 நாளும் திராவிடகானம் பாடவல்லாருக்கு 15 நாளும் ஆசௌசம் என்ற ஒரு குறிப்பும் உண்டு. இவ்வெல்லை அவர்கள் சுத்த சைவர்களாக ஒழுகுவதால் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படுகிறது. இன்று ஆலயத்தில் தொண்டு செய்யும் பலர் காலையில் இறைச்சிக் கடையிலும், மாலையில் ஆலயங்களிலும் காணப்படும் நிலையில் பழைய வழக்கம் எனக் காரணம் காட்டி அவர்கள் பதினாறு அல்லது இருபது நாளில் தொடக்குக் கழிக்கலாமா என்பது அவர்கள் தம்மைத் தாமே கேட்கவேண்டிய கேள்வி.

பாரதத்தின் சில பிரதேசங்களில் 21ஆம் நாள் தொடக்குக் கழிக்கும் வழக்கம் நிலவுகிறது. யாழ்ப்பாணத்தில் சிலர் 16ஆம் நாள் தொடக்குக் கழிக்கின்றனர். மேலே குறிப்பிட்ட விதிவிலக்கைத் தமக்குச் சாதகமாகச் சிலர் எடுத்துக்கொள்கின்றனரேயன்றி இதற்குச் சாஸ்திரப் பிரமாணம் இல்லை.

பிறப்பு, இறப்புத் தொடர்பாகத் தொடக்குக் காத்தல் என்ற பாரம்பரிய மரபு உடல் சம்பந்தமாக மட்டுமன்றி மன உணர்வு தொடர்பாகவும் கைக்கொள்ளப்படுவது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

உயிர் அல்லது ஆன்மா உடலோடு தொடர்புகொண்டு பூமியிற் பிறக்கின்ற நிகழ்வும் மறுதலையாக உடலை விட்டு உயிர்பிரிந்து போகின்ற நிகழ்வும் மிக முக்கியமானவை. ஒன்று இன்பமானது. மற்றது துன்பமானது. இரண்டுமே மன உணர்வுகளை அதிகம் பாதிக்கத்தக்கவை. நேரெதிரான இவ்விரு சம்பவங்களிலும் ஒரு பொதுமை காணப்படுகிறது. அடுத்துவரும் வாழ்க்கை நன்றாக அமையவேண்டும் என எதிர்பார்த்து நல்ல அடிப்படைகளை ஏற்படுத்தித் தெய்வீக நிலையில் ஆசிவேண்டுதல் என்பதே அந்தப் பொது இயல்பு.

இந்நிகழ்வுகள் அந்தச் சுற்றாடலிலும், மிக நெருங்கியவர்கள் தொலைவில் இருந்தாலும் அவர்களையும் பாதிக்கக் கூடியவை. நுண்மையான சில அதிர்வுகள் அல்லது அருளுணர்வுகள் தொடர்பானவை என இதனை விளங்கிக்கொள்ள வேண்டும்.

ஒருமாதகாலம் இந்தத் தொடக்கு நீடிக்கிறது. குழந்தை பிறந்தால் அக்குழந்தையின் தாய் தந்தையர்க்கும், தந்தையின் சகோதரர்கள், பெற்றோர்

மற்றும் ஆண்வழி உறவினர்களுக்கும் இத்தொடக்கு உண்டு. இதேபோல ஒருவர் இறந்தால், இறந்தவரின் ஆண்வழி உற வினர்களுக்கு அத்தொடக்கு உண்டு.

ஒரு பெண் திருமணமானபின் கணவன் வீடு செல்லுதல் என்ற பழைய முறை இன்று யாழ்ப்பாணத்தில் அதிகம் பின்பற்றப்படுவதில்லை. கணவன்தான் மனைவியின் வீட்டில் மாமன் மாமியுடன் வாழ்கிறார். இந்நிலையில் தொடக்குக் காத்தலை உரியமுறையிற் பேணுவதிலும் சிக்கல் நேருகிறது. குழந்தை பிறந்ததும் ஒரேவீட்டில் வாழ்கின்ற காரணத்தால் குழந்தை பெற்ற பெண்ணின் பெற்றோர் ஆண்வழித் தொடர்பு இல்லாவிட்டாலும் தொடக்குக் காக்க நேருகிறது. ஆனால் குழந்தையின் தந்தையுடைய பெற்றோரும் சகோதரர்களும் உண்மையான தொடக் குக்காரர்கள். இன்னொரு விதமாகப் பார்த் தால் அந்த ஆண்மகனது சகோதர னுக்குக் குழந்தை பிறந்தால் அந்தத் தொடக்கு அவனுக்கு மட்டுமல்லாமல் அவனது மனைவிக்கும் உண்டு எனப் புரிந்துகொள்ளவேண்டும். “என்ரை மனி சன்ர தம்பிக்குத்தானே தொடக்கு” என எண்ணும் பெண்களும் தமது தந்தையின் தொடக்கைக் காக்கும் பெண்களும் உள்ளனர். திருமணம் செய்த ஒரு பெண்ணுக்கு அவளது பெற்றோர், சகோதரர்களின் தொடக்கு இல்லை என் பதும் அவளது கணவனுடைய பெற்றோர், சகோதரர்களின் தொடக்கே உண்டு என்பதும் கவனிக்கவேண்டும்.

பெண்கள் ருதுவாகும்போதும் தீட்டு ஒன்று உண்டு. ஆனால் அது அந்தப் பெண்ணை மட்டுமே சாரும். பூப்புத்தீட்டு குடும்பத்தவரையோ உறவினர்களையோ பாதிப்பதில்லை. பருவமடையும்போதும் பின்னர் மாதவிலக்காகும் போதும் அப்பெண் தனித்து இருக்குமாறு வைக்கப்பட்டுக் குடும்பத்தின் ஏனைய அங்கத்தவர்கள் அவளுடன் தொடர்பின்றி இருந்தால் அவர்களுக்குத் தீட்டு இல்லை. ஆனால் அதிகமான குடும்பங்களில் அப் பெண் வீட்டின் சகல பகுதிகளிலும் நடமாடுவதாலும் மற்றவர்கள் அவளோடு தொட்டுப் பழகுவதாலும் ஆடைகள் ஒன்றோடொன்று தொடர்புபடுவதாலும் தொடக்கு ஏனையோரும் காக்கப்பட வேண்டி நேர்கிறது.

பெண் ருதுவாகி 7ஆம், 9ஆம் அல்லது 11ஆம் நாள் அவளுக்குத் தோயவார்த்து வீட்டில் தொடக்குக் கழித்தல் செய்ததும் தொடக்கு நீங்கி விடுகிறது.

மாதவிலக்குக் காலத்தில் ஒரு பெண் நான்கு நாட்களும் பூரணமாக விலக்கப்பட்டவளே. அந்த நாட்களில் அவள் சுபகாரியங்கள் எதற்கும் தகுதி யற்றவளாகிறாள். அவள் தனியே ஒதுங்கி இருப்பது அவசியம். ஐந்தாம் நாள் எண்ணெய் ஸ்நானத்தின் பின்னரே அவள் நற்காரியங்களிற் கலந்து கொள்ளலாம்.

20 நாளின்மேல் பூப்புவரின் மேற் கூறிய முறையிற் கடைப்பிடிக்கலாம். 20நாளின் முன் பூப்புவரின் ஸ்நானத்தி னால் சுத்தமாகும். அதை மாதவிலக் காகக் கொள்வதில்லை.

ஆசௌசம் பற்றிய மேலதிக விபரங்களையும் சிறப்பு விதிகளையும் விபரம் தெரிந்தோரிடம் கேட்டும் நூல் களிற் படித்தும் நன்கு அறிந்து தவறின் றிக் கைக்கொண்டு நமது பாரம்பரிய ஆசார ஒழுக்கங்களைப் பேணுவோமாக.

ஒருவன் ஏழையாக இருந்தால் தவறு அவனுடையதுதான்.

உ

# மீராபாய்

Dr V. பாலகிருஷ்ணன் அவர்கள்

மனம் அமைதி பெறுவதற்காகத் தியானம் தினசரி செய்துவந்தால், நாம் நினைத்ததை அடையலாம். வீட்டில் எங்களுக்கு விரும்பிய குலதெய்வத்தைத் தரிசனம் செய்வதற்காகப் படமாகவோ, சொரூபமாகவோ வைத்து வணங்கிவருவது சாலச்சிறந்ததாகும்.

இந்தத் தியானமூலம் பலர் சித்தி யடைந்துள்ளனர். செல்லப்பாச்சுவாமி, யோகர்சுவாமி, கடையிற் சுவாமி முருகன் சிவன் தரிசனம் செய்து பல சித்துக்களைச் செய்து வெற்றிகண்டுள்ளனர். இந்நிலையில் எனக்கு ஒருகதை ஞாபகம் வருகிறது.

மீராபாய் என்ற ஒரு யுவதி தன் வீட்டில் கண்ணன் சிலையை வைத்து அமுது படைத்து வணங்கி கண்ணீர் மல்கித் தியானம்செய்து, பின்பு அந்த அமுதைச் சாப்பிடுவாள். மீராபாய்க்குப் பல சிநேகிதிகள் இருந்தார்கள். மீராபாய்க்குப் பைத்தியம். எந்த நாளும் கண்ணன் சிலைக்கு அமுது படைக்கிறாள். பின்பு அதைத் தான் சாப்பிடுகிறாள் என்று பேசிக் கொள்வர்.

ஒருநாள் அவர்கள் ஒன்றுகூடி மீராபாயிடம் சென்றார்கள். மீராபாய் அவர்களை வரவேற்றாள். ஒவ்வொருநாளும் கண்ணன் சிலைக்கு அமுது படைக்கிறாயே! என்ன நன்மை அடைகிறாய் என்று இழிவாகக் கேட்டார்கள். மீராபாய் தோழியரே கண்ணனை நினைக்காத நாளே இல்லை. அவருக்கு விருப்பமான அவலும், அமுதும் படைத்து அவர் சாப்பிட்ட பின்புதான் நான் சாப்பிடுவேன். தோழியர்கள் பலமாகக் கேலிச்சிரிப்புச் சிரித்து அவமானப்படுத்தினார்கள். மீராபாய், கடவுள் நம்பிக்கை இல்லாத உங்களுடன் என்னகதை என்று சாந்தமாகக் கேட்டாள். உடனே தோழியர்கள் சரி உன்னை நம்புகிறோம். இதை நிரூபித்துக் காட்டுவாயா? இந்தக் காலத்தில் சிலை எங்கே சாப்பிடப்போகுது! மீராபாய் உடனே நான் நிருபித்துக் காட்டுகிறேன். நாளைக் காலை இங்கேவந்து என் தியான அறையின் யன்னல் ஊடாகப் பார்த்துக் கொண்டு இருங்கள். கண்ணன் சாப்பிட்ட மிகுதி உணவை உங்களுக்குக் காட்டி நான் சாப்பிடுகிறேன் என்று கூறினாள்.

மறுநாள் மீராபாய் தியான அறையில், அமுது படைத்துவிட்டுக் கண்ணனைத் தியானித்தபடியே இருந்தாள். தோழியர்கள் சொன்னமாதிரி யன்னலூடாகப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். (தியானத்தில்) கண்ணா உண்மையாக இந்த ஏழை மீராபாயை நீங்கள் இன்று காப்பாற்றவேண்டும். இல்லையேல் என்னை முடித்துவிடுங்கள். கண்ணீர் மல்கத் தியானித்து வணங்கினாள்.

கண் திறந்து பார்த்தபோது அரைவாசி அமுது அங்கே குறைந்து காணப்பட்டது. இதனைப் பார்த்த தோழியர்கள், பயந்து, வியந்து மீராபாயின் காலடியில் விழுந்து வணங்கினார்கள். இன்று தொடக்கம் எங்களுக்கும் தெய்வ நம்பிக்கை வந்து விட்டது. உன் மகிமை இன்றுதான் புரிந்து கொண்டோம். “கடவுளை நம்பினோர் கைவிடப்படார்” என்று போற்றினர்.

உ

# சைவக் கிரியைகள்

## தமிழ்ஞான வித்தகர் பொன். சுகந்தன் அவர்கள்

சைவசமயத்தவர்கள் கடைப்பிடிக்கும் கிரியைகளில் மக்களின் வாழ்வியலைப் பொறுத்தமட்டில் முக்கியமானதாக அமைவது பூர்வக்கிரியைகளும் அபரக் கிரியைகளுமாகும். இதனை முறைப்படி முறையாகக் கடைப்பிடிக்கும் பட்சத்தில் தான் அக்கிரியைகளின் பலாபலன்கள் நமக்குக் கிடைக்கப்பெற்று நலம் பெறுகின்றோம்.

இன்றைய நிலையில் இக்கிரியை முறைகள் மக்கள் மத்தியில் அதன் விளக்கங்களோடு சென்றடையாத காரணங்களினாலும் பலர் இக்கிரியைகளின் மகத்துவ மாண்புகளை மனங்கொள்ளாதுள்ளார்கள். உலகச் சுருக்கத்திற்கேற்ப சில இடங்களில் கிரியை முறைகள் சுருங்குகின்றன. இதனால் சைவ சமயத்தவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றார்கள்.

சில பிரதேசங்களில் கிரியை முறைகள் திரிபுறுகின்றன. இதன் காரணமாக எதிர்காலச் சந்ததியினர் சைவக் கிரியைகளில் இருந்து விலகிவிடுவார்களா என்ற அச்சமும் தலை தூக்குகிறது. இவ் ஆபத்தை தவிர்த்து சமய சீலர்களாக சைவக்கிரியைகளைப் போற்றிப் பாதுகாத்து வளர்த்தெடுக்கும் சமூகப் பணியொன்று சைவ சமயத்தவர் யாவரிடமுமே தங்கியுள்ளது.

முன்னோர்கள் பல இன்னல்களுக்கும் இடர்களுக்கும் மத்தியிலே வளர்த்தெடுத்த சைவ சமயத்தை அதன் கிரியைகளின் தனிச்சிறப்பினைக் கட்டிக் காத்து வளர்த்து எதிர்காலச் சந்ததியினர்க்கு அளிக்கவேண்டிய கடமை இன்று வாழ்கின்ற சைவ சமயத்தவர்களைச் சார்ந்துள்ளது. கால வெள்ளத்தால் கிரியைகள் அள்ளப்படவிடாது. அதனை அணைத்துக் காக்கப்பட வேண்டிய கடமை உணர்வு சைவசமயத்தவர்களாகிய ஒவ்வொருவர்க்கும் இருக்க வேண்டும். அந்த வகையிலே மக்களின் வாழ்வியலோடு தொடர்புடைய சைவக் கிரியைகளான பூர்வக் கிரியைகளும் அபரக் கிரியைகளும் அறிந்துவைக்கப்பட வேண்டிய அரிய பொக்கிஷங்களாயுள்ளன. ஏனெனில் அது சைவக்கிரியைகள் சுருங்குவதனையோ அல்லது திரிபுபடுவதனையோ தடுத்து நிறுத்தும் தன்மையினைக் கொண்டிருக்கும்.

மக்களின் வாழ்வியலோடு தொடர்புடையதாய் பூர்வக்கிரியை, அபரக்கிரியை என்னும் இரண்டு கிரியைகள் அமைந்துள்ளன. இதில் பூர்வக்கிரியை என்பது மனிதனுக்கு ஏற்படுகின்ற மரணகாலத்திற்கு முன்பாக வழங்கப்பட்டு வருவதன் காரணமாக பூர்வக்கிரியைகள் எனப்படுகின்றது. பூர்வம் என்றால் "முன்" என்பதனைக் குறிப்பதன் காரணத்தால் இது மரணத்திற்கு முன்பான கிரியையாகவே அமைகின்றது. இதேபோன்று அபரம் என்றால் "பின்" என்று பொருள்படுகின்றது. எனவேதான் மரணத்திற்குப் பின்னுள்ள கிரியை அபரக்கிரியையாகக் கொள்ளப்படுகின்றது.

இந்தப் பூர்வக்கிரியைகள் தன்ன

கத்தே பல வகைகளைக் கொண்டுள்ளது. அவையாவன ருதுசங்க மனம், கருப்ப தானம், பும்சவனம், சீமந்தம், ஜாதகா்மம், கா்ணவேதனம், உத்தாபனம், நாமகரணம், உபநிஷ்கிரமணம், அன்னப் பிராசனம், பிண்ட வா்த்தனம், சௌனம் வித்தி யாரம்பம், உபநயனம், காண்டோபகரணம், காண்ட மோசனம், சாமவா்த்தனம், விவா கம், தீட்சை, சந்தியா வந்தனம், சிவபூசை, சிவாசிரமம் என்ற பெயா்களில் வழங்கப் படுகின்றன.

சிவமின்றி எதுவுமசையாது என்பது உண்மை. இதன் காரணமாக இக் கிரியைகளின் பொதுப் பண்பும் சிவ கும்பம், சிவாக்கினி, சிவமந்திரம், சிவ மூலமந்திரம் என்பவற்றுடன் தொடா்பு பட்டனவாகவே அமைகின்றது.

இக்கிரியைகள் வேதத்தில் உள்ளபடியும் கடைப்பிடிக்கப்படுகின்றது. அதேபோன்று சைவசித்தாந்தத்தில் உள்ளவாறும் கடைப்பிடிக்கப்படுகின்றது. இதனைக் கடைப்பிடிப்பவா்கள் ஸ்மிருதி யாளா், வைதீகா், சைவா் என்னும் மூவரு மாவாா்கள். இவற்றுள் ஸ்மிருதியாளா் களும், வைதீகா்களும் வேதத்தில் உள்ள அமைப்பின்படியே அவற்றினைக் கடைப் பிடிக்கின்றாா்கள். ஆனால் சைவா்கள் சிவாகமத்தில் உள்ளபடியேதான் கிரியை களைக் கடைப்பிடிக்கின்றாா்கள்.

அந்தணா்களாக இருப்பவா்கள் பெரும்பாலும் ஸ்மிருதி கிரியை விதி களையே பின்பற்றுகின்றனா். ஸ்மிருதிக் குள்ளும் பல வகைகள் உள்ளன. அவை கள் ஆபஸ்தம்பஸ்மிருதி, போதாயன ஸ்மிருதி, ஆஸ்வாலாயன ஸ்மிருதி போன்ற பல இவற்றுள் உள்ளன. இதன் காரணமாகவே அந்தணா்களின் கிரியை களும் அந்தணா் அல்லாதோாின் கிரியைகளும் வேறுபடுகின்றன. திரு மணக் கிரியையினை எடுத்துக்கொண் டாலே இது நன்றாகப் புலனாகின்றது. அரசாணி, நவக்கிரக கும்பம், சிவகும்பப் பூசையானது ஆரம்பத்திலே நிகழும். ஆனால் அந்தணா்களின் மணவறைகளில் இவற்றைக் காணமுடியாது. இவற்றுக்கு மாறாக அவா்கள் திருமணநிகழ்வின்போது மணமக்களுக்கு இடுப்பில் தருப்பைக் கயறு கட்டுவதுண்டு. மணப்பெண்ணின் மடியிலே ஒரு ஆண்குழந்தையை இருத்தி பழம் உண்ணச் செய்தல் நடைபெறும். இவ்வாறான பல வேறுபாடுகளைக் கொண்டுள்ளது. இதற்குக் காரணம் கிரியைகளின் வேறுபாடுதான். அந்தணா் கள் கடைப்பிடிக்கும் ஸ்மிருதி விதிகளும் நாங்கள் கடைப்பிடிக்கும் சிவாகம விதிகளுமே இவ்வேறுபாட்டினைத் தரு கின்றது. பூா்வக் கிரியைகளில் வேறுபாடு காணப்படுவதனைப் போலவே அபரக் கிரியைகளிலும் வேறுபாடு காணப்படு கின்றது. நாம் கடைப்பிடிக்கும் பூா்வக் கிரியை அபரக்கிரியைகள் ஆகமங்களி லுள்ள கருத்துக்களை நெறிப்படுத்திக் கூறுகின்ற பதினெட்டு பத்ததிகளில் இரண்டு பத்ததிகள் மட்டும் தற்போது வழக்கில் உள்ளன. அவை ஒன்று அகோரசிவா சாாியாா் பத்ததி, மற்றையது சோமசம்பு சிவாசாாியாா் பத்ததி இவற்றுள் அகோர சிவாசாாியாா் பத்ததியே விாிவாகவுள்ள தன் காரணத்தால் பெரும்பாலானோரால் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றதுடன் சைவா்களாகிய நாமும் பூா்வக்கிரியை அபரக்கிரியைகளுக்கு இதனையே கைக் கொள்கின்றோம். இவ்வாறான இந்தக் கிரியைகளுக்கான முக்கிய தகுதியாக பிரதானமாகத் தீட்சையே கொள்ளப் படுகின்றது.

(தொடரும்...

உறுதியுள்ள மனிதனைக் கண்டு வேலையே அஞ்சும்.

உ

# தென்தமிழ்ப் புலவரும் சிவராசசிங்கமும்

ஆழ்கடலான் முருகவே பரமநாதன் அவர்கள்

தென்தமிழ்ப் புலவர்கள் சுப்பிரமணிய பாரதியார், சிவராஜசிங்கமாம் (தாயுமான சுவாமிகள்) ஆகியோர். சரசுவதிக்குப் பாரதியென்றோர் திருநாமம் உண்டு என்றனர். பாதாம்புயத்திற் பணிவார் தமக்குப் பலகலையும் வேதாந்த முத்தியும் தந்தருள் பாரதி என்று கம்பர் பாடியுள்ளார். தவராஜசிங்கமான தாயுமான சுவாமிகள்தான் சிவராஜசிங்கம். இவர் ஒரு அருட்கவி. இருவரின் பாடல்களையும் படிப்போர் அங்கேயோர் புரட்சி, மறுமலர்ச்சி இழையோடுவதைக் காண்பர். இரத்தின கசிதமாகச் சொன்னால் இருவரும் மகா கவிஞர்கள். பார காவியம் படைத்தவர்களே. பாரதிகாலம் பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியுமாம். தாயுமான சுவாமிகளின் காலம்பற்றிப் பல்வேறு கணிப்புண்டு. எனினும் பேராசிரியர் கா. சுப்பிரமணியபிள்ளையவர்கள் பதினேழாம் நூற்றாண்டு எனக்குறிப்பிடுகின்றார். பாரதி எட்டயபுரம் சமஸ்தானத்தில் அரச பணியாற்றிச் சுதந்திரக் கவியானார். தாயுமானவர் திரிசிரபுரம் விஜயரகுநாத சொக்கலிங்க நாயகரின் அரசபீடத்தில் முக்கிய பதவிவகித்து ஆத்மீக விடுதலையால் உந்தப்பட்டுத் துறவியானவர். இருவரும் தென்மொழியிலும் வடமொழியிலும் வல்லவர்கள். பாரதியும் தாயுமானவரும் பல இடங்களில் ஒத்துப்போகக் காணலாம்.

ஒருகட்டம்; இந்த மனிதமனம் கறைபடியாமல், அழுக்கேறாமல், மாசுறாமல் இருந்தாற்றான் புனிதமான வாழ்வை மேற்கொள்ளலாம். அதுதான் இனிதமான இதமான வாழ்க்கை. இன்று சுற்றுப்புறச் சுற்றாடல் விண்வெளி மாசுறாமற் காக்க விஞ்ஞானிகளும் அரசியற் துறையினரும் ஐ.நா மட்டத்திலே ஆய்வு செய்து வழிதுறை வகுத்துள்ளனர். இப்பார்வையிலே மனிதமனம் பரிசுத்தமாய் இருப்பது முக்கியமாம்

"மனத்தகத் தழுக்கறுத்திடாத மௌன ஞான யோகிகள்
வனத்தகத் திருக்கினும் மனத்தகத்தழுக்கு அறுத்திடார்
மனத்தகத் தழுக்கு அறுத்த மௌன ஞான யோகிகள்
முலைத்தடத் திருக்கினும் மனத்தகத் தழுக்கறுப்பாரே"

எனச் சிவவாக்கியர் பாடினார். இதுவுமொரு சாதிநோய்தான். இன்று உடுப்பைத் தோய்க்கச் சிறந்த விஞ்ஞான சாதனங்கள் உள. மனம் வெளுக்க வழியில்லாமல் மனிதசமுதாயம் மாசுறக் காண்கிறோம். வள்ளுவப் பெருந்தகை ஒரு உத்தி சொன்னார்.

"புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மையாற் காணப் படும்

குறளோவியம்- 298

உடம்பின் புறத்தோல் தண்ணீராற்றூய்மையடைகிறது. அதுபோல்,

அகத்தேயுள்ள மனம் வாய்மையால் தூய்மையடைகிறது. உண்மைபேசு என்றார் ஔவையார். அறங்கள் பலவாகப் பேசலாம். நடைமுறைதான் முக்கியம். ஆகவே வள்ளுவனார் மனம் சுத்தமாய் இரு என்கிறார்.

மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீரபிற

குறளோவியம் 34

ஒருவன் மனத்திற் குற்றம் இல்லாதவனாக இருக்கவேண்டும். அறம் அதுவே. மனத்தூய்மை இல்லாத மற்றவையெல்லாம் ஆரவாரத் தன்மையுடையன. எனவே மனந்தூய்மையாய் இருப்பதோடு நம் செயற்பாட்டிலும் அஃது பிரதிபலிக்கவேண்டும் என்கிறார் செந்நாப் போதார்.

மனத்தூய்மை செய்வினைத் தூய்மை இரண்டும்
இனந் தூய்மை தூவாவரும்

மேலது 455

வாழ்வியற்றுறையின் புனிதம் ஒரு கனதியான பண்பு. இந்தப் புனிதமில்லா வாழ்வில் இனிதம் துர்லபம் அன்றோ! இன்று அநீதிக்கு, உடந்தையாய் நியாயப்படுத்தும் ஒரு கூட்டம் இருக்கவே செய்கிறது. மகாகவி பாரதி மன உளைச்சலோடு "மனம் வெளுக்க வழியில்லையே" என முத்துமாரியிடம் விண்ணப்பிக்கிறார்.

உலகத்து நாயகியே எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்துமாரி
உன்பாதம் சரண்புகுந்தோம் - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்துமாரி.

கலகத் தரக்கர் பலர் - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்துமாரி
கருத்தி னுள்ளே புகுந்து விட்டார் - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்துமாரி

பலகற்றும் பல கேட்டும் - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்துமாரி
பய னொன்றும் இல்லையடி - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்துமாரி

நிலையெங்கும் காணவில்லை - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்துமாரி
நின்பாதம் சரண்புகுந்தோம் - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்துமாரி

துணிவெளுக்க மண்ணுண்டு - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்துமாரி

குழந்தை இல்லாதவனுக்கு அன்பு என்ன என்றே தெரியாது.

தோல் வெளுக்கச் சாம்பருண்டு - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்துமாரி

மணிவெளுக்கச் சாணையுண்டு - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்துமாரி
மனம் வெளுக்க வழியில்லை - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்துமாரி

பிணிகளுக்கு மாற்றுண்டு - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்துமாரி
பேதமைக்கு மாற்றில்லை - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்துமாரி

அரக்கர்- அரக்கத்தனமுள்ள தீயகுணமுள்ளோர். (உதாரணம்) காம குரோத லோப மோக மத மாற்சரியங்கள் எனவே தீய குணங்களையகற்றித் தூயகுணங்களை விதைக்க வேண்டும். அசுரர் உடனான சூரன்போர், கஜமுகாசூரன் போர், நரகாசுரன் போர், மகிடாசூரன் போர் ஏன் இயமசங்காரம் சந்ததி சந்ததியாகச் செய்கிறோமே. அரக்கத்தனங்கள் அழிந்தனவா, அகன்றனவா. நான் எனது அழிந்ததா. இதை நினைந்து பாரதியார் பல கற்றும் பலகேட்டும் பயனொன்றும் இல்லையடியென்று தன்னில் வைத்துத் தமிழ்ச் சமுதாயத்துக்கு ஏன் உலகத்துக்கே இடித்துரைத்தார். (தொடரும்....

## சக்தியே சகலதும் தருபவள்

சகலதும் தந்தாளென் தேவி
சர்வ சக்தியே அவளுருவாகி - எனக்குப்
புகழெலாம் சேர்த்திடுவாள் நாடி - இப்
புவனம் முழுதும் ஆளும் தேவி தேவி
(சகலதும்)

சிவனது சரிபாதி கொண்டாள்
சிவசக்தி உமையாகி நின்றாள் நின்றாள்
நவசக்தி உருமாறிக் கொண்டாள் - தாய்
நானென்று வந்தே எல்லாமே தந்தாள் தந்தாள்
(சகலதும்)

இயல் இசை நாடகம் மூன்றும்
இவளருள் கொண்டாலே ஓங்கும் ஓங்கும்
தயவின்றித் தந்தருள் கின்றாள்
சர்வ லோகமும் அவளாட்சி கொண்டாள் கொண்டாள்
(சகலதும்)

உல கெலாம் உயர்வு பெறச் செய்வாள் - நல்
உயிர்களுக்கே அவள் தாயாகிக் கொள்வாள் கொள்வாள்
நில விடும் துன்பங்கள் நீக்கி நீக்கி
நிம்மதி தந்துமே காப்பாள் காப்பாள். (சகலதும்)

*திரு சின்னப்பு தனபாலசிங்கம் அவர்கள்.*

**உடலின் அழிவு ஒருவனுக்கு அழியாத் தன்மையை அளிக்க முடியாது.**

உ

# இறுப்பை எண்ணி...

## திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்கள்

"மரண அவஸ்தை" என இறக்கும்போது ஏற்படும் வேதனையைக் கூறுவார்கள். இந்த மரண அவஸ்தையும் மரணமுந்தான் எமக்குப் பயத்தை ஏற்படுத்துகின்றன. இவற்றினின்று எம்மைக் காப்பார் எவருமில்லை. இறைவன் ஒருவனே காக்கக் கூடியவன்.

அப்பர் பெருமானும் "ஆக்கையை ஓலெடுத்து உழைஞர் கூடி ஒழிப்பதற்கு அஞ்சுகின்றேன்" என்றும், 'செத்தால் வந்து உதவுவார் ஒருவரில்லை. உயிர்கொண்டு போம்பொழுது குற்றாலத்துறை கூத்தனல்லால் எமக்கு உற்றார் ஆர் உளர்? காலன் வந்து அணுகும்போது அறியவொண்ணா ஒன்பது வாசல் வைத்தாய் ஒக்க அடைக்கும்போது உணரமாட்டேன். வெம்கூற்றங்கண்டு உம்மை மறக்கினும் எனைக் குறிக்கொண்மினே" என்று பலவாறும் இறைவனிடம் இறைஞ்சி நிற்பதை முன்னைய கட்டுரைகளில் கண்டோம்.

இறைவனின் அடியாருக்கு மரணம் பற்றி பயமிருக்குமா? என்றொரு வினாவை எழுப்பினால் "நிச்சயமாகப் பயமிருக்காது" என்பதுதான் பதில்.

"மரணம் வரும். அப்போது நீதான் துணைநிற்க வேண்டும்" என்ற வேண்டுதலைச் செய்தாலும்

இறுமாந் திருப்பன்கொலோ - ஈசன்
　　பல்கணத் தெண்ணப்பட்டுச்
சிறுமா னேந்திதன் சேவடிக் கீழ்ச்சென்று
　　இறுமாந் திருப்பன் கொலோ

தேடிக் கண்டுகொண்டேன் - திரு
　　மாலொடு நான் முகனும்
தேடித் தேடொணாத் தேவனை என்னுள்ளே
　　தேடிக் கண்டு கொண்டேன்.

என்று இறுமாந்திருக்கும் நிலையை அடைந்தபின் காலனைக் கண்டு பயங்கொள்வாரா? இறைவனைப் பாடிப்பரவி மனத்துள்ளே இருத்தியபின் அவரும் இறைவனின் பண்புகள் கொண்டவராகிறார். எண்குணத்தவராக அவர் மாறியபின் எதற்கும் யாருக்கும் பயப்படவேண்டியதில்லையே. அரசனாக இருந்தாற்கூட அச்சப்படத்தேவையில்லை. ஏன் கூற்றுவனே அரசனாகி வந்துநின்று ஏவல்செய்யப் பணித்தாலும் அதனைப் பொருட்டாக எண்ணப்போவதுமில்லை. அஞ்சப்போவதுமில்லை.

நாவார நம்பனையே பாடப் பெற்றோம்
　　நாணற்றார் நள்ளாமே விள்ளப் பெற்றோம்
ஆவாஎன் றெமையாள்வான் அமரர் நாதன்
　　அயனொடுமாற் கறிவரிய அனலாய் நீண்ட

தேவாதி தேவனவன் சிவனென் சிந்தை
சேர்ந்திருந்தான் தென்திசைக்கோன் தானேவந்து
கோவாடிக் குற்றேவல் செய்கென்றாலும்
குணமாகக் கொள்ளோம் எண் குணத்துள்ளோமே.

என **நாவுக்கரசர் பெருமானே** கூற்றுவனுக்கு அஞ்சாத தமது நிலையைப் பாடியுள்ளார்.

**சமண சமயத்தில**ிருந்து சைவத்திற்கு மாறிய திருநாவுக்கரசரை, தமது சமயத்தவரான அரசன் மூலம் பலவகைகளிலே துன்புறுத்தி, கொல்வதற்கு சமணசமயத்தவர் முயன்றனர். மரணத்திற்கும் அவர்களது துன்புறுத்தல்களுக்கும் அவர் பயப்படவில்லை. அவர் மதம்மாற மறுத்துநின்றார். கூற்றுவனே அரசனாக வந்துநின்றபோதும் அஞ்சாது நின்றவர் மரணத்திற்குப் பயந்தவரா?

இறைவனது மலர்ப்பதத்தை அடைந்தவர் அவர். அதுவும் என்றும் மீளா ஆளாய்க் கொய்மலர்ச் சேவடியைச் சேர்ந்தவர். நாம் இன்று ஒருவரை 'நண்பர்' என்போம். சிறிதுகாலம் போக ஒரு பிணக்கு வந்ததும் பகைமை பாராட்டுவோம். அதிகம் ஏன்? கேட்டவரம் கிட்டாதபோதும் துன்பப்பட்டு துயருறும் போதும் "கடவுள் எங்கே இருக்கிறார்? நான் இனிமேல் கடவுளைக் கும்பிடவேமாட்டேன்" என்று நாம் கூறுவதுண்டல்லவா? அப்படியெல்லாம் நேரத்திற்கு நேரம் மாறும் தன்மையில்லாது மீளாத ஆளாய் ஆனார். அதை மேலும் அழுத்தமாகக் கூறவிரும்பி 'என்றும் மீளா ஆளாய்' எனப் பாடியுள்ளார். அவ்வாறு இறைவனது பதமலர்களில் இணைந்தவர் எந்த அரசனுக்கும் கட்டுப்பட்ட குடிமகனல்ல. யாருக்கும் பணியமாட்டார். நமனுக்கு அஞ்சமாட்டார். நரகத்தில் இடர்ப்படமாட்டார். எந்தக் கஷ்டமுமில்லை. துன்பமுமில்லை. எந்தநாளும் இன்பந்தான். இறுமாந்திருப்பார்.

நாமார்க்கும் குடியல்லோம், நமனை யஞ்சோம்
நரகத்தி லிடர்ப்படோம் நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம்
இன்பமே எந்நாளுந் துன்பமில்லை
தாமார்க்குங் குடியல்லாத் தன்மையான
சங்கரநற் சங்கவெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
கொய்மலர்ச்சே வடியிணையே குறுகி னோமே.

என்ற அப்பரடிகளின் தேவாரத்திலிருந்தே அவரது பேரின்பநிலையைப் புரிந்துகொள்ளலாம்.

அப்படியென்றால் அவர் ஏன் மரணத்தைப் பற்றியெல்லாம் பாடினார்? அவரது பாடலின் உட்பொருளை நாம் உணரவேண்டும். நமக்கு அதை உணர்த்தவே தேவாரங்களை அவர் பாடியுள்ளார். "தென்திசைக் கோன் கோவாடிக் குற்றேவல் செய்கென்றாலும்" எனப் பாடியுள்ளதைப் பார்ப்போம். கூற்றுவன் வந்து ஏவல் கொண்டாலும் அதைப் பொருட்படுத்தமாட்டார் என்றுதான் கூறியுள்ளார். 'வந்தாலும்' என்று அவர் தன் அஞ்சாமையைப் புலப்படுத்தச் சொன்னாலும் கூற்றுவன் அப்படி

வரமாட்டான் என்பதே உண்மை. அப்படி வரும் துணிவு அவனுக்கிருக்காது. ஆனால் அவன் எம்மிடம் வருவான். அதை நாம் மனத்திற்கொள்ள வேண்டும். செம்பவளவண்ணர் சிந்தையிலிருப்பவருக்கு துன்பமுறுமாறு கூற்றுவன் வரான். அவரது கொடும் வினைகளும் மெல்ல நையும். எந்த இடுக்கண்ணும் இருக்காது. இதனை அவரே பாடியுள்ளார்.

வெம்பவரு கிற்பதன்று கூற்றம் நம்மேல்
வெய்ய வினைப்பகையும் பைய நையும்
எம்பரிவுந் தீர்ந்தோம் இடுக்கண் இல்லோம்
எங்கெழிலென் ஞாயி றெளியோ மல்லோம்
அம்பவளச் செஞ்சடைமேல் ஆறு சூடி
அனலாடி ஆன் அஞ்சும் ஆட்டு கந்த
செம்பவள வண்ணர்செங் குன்ற வண்ணர்
செவ்வான வண்ணரென் சிந்தை யாரே

என்பது அவரது தேவாரம். இதிலிருந்து இறையடியார்களைக் கண்டு கூற்றுவன் அஞ்சுவான் என்பதுவும் அவர்களுக்கு மரணத்தைக் கண்டு பயம் ஏற்படாதென்பதும் தெரிகிறது.

இறைவன் சிந்தையிலில்லாதவருக்கும் அவன் சேவடியை அடையாதவருக்கும் கூற்றுவன் அஞ்சமாட்டான். அவர்களுக்கு மரணவேதனையும் மரணமும் வருமென் பதையும் யாக்கை நிலையாமையையும் அப்பரடிகள் தம் தேவாரங்களிலே பாடி உணர்த்துகின்றார். அவரது தேவாரங்கள் கூறுவனவற்றைப் புரிந்து உணர்ந்து நாம் அவர் காட்டும் நெறியிலே நின்று உய்திபெறுவோமாக.

## காலவேறுபாடற்றவன் இறைவன்

இறைவா எல்லோரும் இன்புற்றிருக்க அருள்வாயே! என்று வேண்டுவது நல்லவர்கள், அறிஞர்கள் இயல்பாக இருந்து வந்தது. கடந்தகாலம். "இது கலியுகமப்பா" என்று சொல்லிக் கொள்பவர்கள் எத்தனையோபேர் ஞானிகளாகத் தங்களைக் காட்டிக்கொள்வதுமுண்டு. இத்தகையவரின் அறியாமைதானென்னே! காலங்கள் மாறிப்போனாலும் கடவுளுமா காலத்துக்குப் பின்னால் போகப்போகிறார். இந்தக் கேள்வி எழுமானால், கடவுள் தன்மை என்பதே இவைகளுக்கெல்லாம் அப்பாற்பட்டதன்றோ! என்பதை திருமூலர் இப்படிச் சொல்கிறார்.

"கெடுவதும் ஆவதும் கேடிப் புகழோன்
நடுவல்ல செய்தின்பம் நாடவும் ஒட்டான்
இடுவதும் ஈவதும் எண்ணுமின் இன்பம்
படுவது செய்யின் பசுவது வாமே"

இறைவன் ஒருவன் உள்ளான் அவன் நடுநிலை தவறாதவன். ஆகவே அவன் கெடுதி செய்து இன்பங் காண்பதை அனுமதிக்க மாட்டான். தற்காற்கு ஒன்றை இடுவதையும் வறியவர்க்கு ஈவதையும் நினையுங்கள். பிறருக்குத் துன்பம் விளைவிப்பதை மறவுங்கள். இறைவனை அடைய இதுவே வழி என்பதாம்.

உ

(தொடர்ச்சி...

# மனிதப்பிறவியின் மாண்பு

## ஸ்ரீ விசுவாம்பா விசாலாட்சி மாதாஜி அவர்கள்

ஒருமுறை முருகப்பெருமான், செந்தமிழ்ச்செல்வியின் தேனொழுகும் செந்தமிழ்ப் பாடலைக்கேட்க விரும்பினார். நாவற்பழம் கொடுத்தபோது உலகில் அரியது பெரியது சிறியது எவை எனக்கேட்டார். அப்போது ஔவையார்,

"அரியது கேட்கின் வரிவடி வேலோய்
அரிது அரிது மானுடராதல் அரிது
மானுடர் ஆயினும் கூன்குருடு செவிடு
பேடு நீங்கிப் பிறத்தல் அரிது
பேடு நீங்கிப் பிறந்த கலையும்
ஞானமும் கல்வியும் நயத்தலரிது
ஞானமும் கல்வியும் நயந்த கலையும்
தானமும் தவமும் தாம் செய்தலரிது
தானமும் தவமும் தாம் செய்வாராயின்
வானவர் நாடு வழிதிறந் திடுமே"

மனிதப் பிறவியின் பண்பு நலன்களை எல்லாம் தெரிந்த முருகப்பெருமானுக்குப் பாடிக்காட்டுவதுபோல எமக்கு அருளியுள்ளார். ஔவையார் அருளிய வாக்குப்போல மனிதரைக் காண்பது அரிதிலும் அரிது. ஔவையார் அருளியபடி அரிய மனிதராகப் பிறந்தவர்கள் தமது இறைவாழ்வின் தன்மையால் இறைவனிலும் மேலாக மதிக்கப்படுவர். இதனை வள்ளுவப் பெருந்தகை தமது திருக்குறளில்,

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்" என்று அருளியுள்ளார்.

மனிதவாழ்வின்படி வாழ்ந்தவர்கள் அதாவது மனுநீதிப்படி வாழ்ந்தவர்கள் தெய்வமாக வணங்கப்படுவர். இவ்வாறு வாழ்ந்தவர்களுக்குத் தெய்வமும் அடிமையாம் என்பதை நாம் இதிகாசங்கள், புராணங்கள் வாயிலாக அறிகின்றோம். "அடியார்க்கெளியவன் சிற்றம்பலவன்" என்னும் சொற்றொடர் இக்கூற்றை உறுதிப்படுத்துகின்றது. திருவிளையாடற்புராணம், பெரியபுராணம், திருவாதவூரடிகள் புராணம் சாட்சிகளாகவுள்ளன.

புராணகாலத்து மக்கள் தொண்டு செய்வதே கடனாகக் கொண்டனர். இக்காலம்போன்று பிரதிபலனை நோக்கித் தொண்டினை அவர்கள் செய்யவில்லை. தொண்டினை அறமெனக் கொண்டே செய்தனர். பெரியபுராண காலத்து நாயன்மாரின் தொண்டினைச் சேக்கிழார் பெருமான்,

கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்
ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்குவார்
கூடும் அன்பினிற் கும்பிட லேயன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்

தெய்வத்திடம் தம்மை முற்றாக ஒப்படைத்தோர் சாதிசமயம், உயர்வுதாழ்வு எதுவுமின்றி பிரதிபலன் நோக்காது ஒரே நோக்கில் இறைவனைக் கும்பிட்டுத் தொண்டினைப் புரிவார்கள். தொண்டுசெய்து வருவோரின் பெருமையை ஔவையாரிடம் முருகக் கடவுள் கேட்டபோது

"பெரியது கேட்கின் வரிவடி வேலோய்
பெரிது பெரிது புவனம் பெரிது
புவனமோ அரவினுக் கொருதலைப் பாரம்
அரவமோ உமையவள் சிறுவிரல் மோதிரம்
உமையோ இறைவர் பாகத் தொடுக்கம்
இறைவரோ தொண்டர் உள்ளத்தொடுக்கம்
தொண்டர் தம்பெருமையும் சொல்லவும் பெரிதே"

எனவே, மனிதப்பிறவியெடுத்தோர் சீரிய தொண்டினால் இறைவனையும் தம் அகத்தில் அடக்கி வழிபடுதலால் மனிதப் பிறவியின் பெருந்தன்மை சொல்லாமலே தெளிவாகின்றது.

"தினைத்தனை உள்ளதோர் பூவினில் தேன் உண்ணாதே
நினைத்தொறும் காண்தொறும் பேசுந்தொறும் எப்போதும்
அதனைத் தெலும்பு உன்நெக ஆனந்தத் தேன்சொரியும்
குனிப்புடை யானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ"

ஒரு பெரிய பூ. அதிற் காணப்படுவது ஒரு சிறு துளி தேன். அந்தத் தேனை உண்ண அரசவண்டு முயற்சி செய்கிறது. இதனைக் கண்டார் மாணிக்கவாசகப் பெருமான். அரசவண்டே சிறிய துளி தேனுக்காகப் இரீங்காரம் செய்து ஆரவாரம் செய்யாதே, இத்தேனைவிடத் தெவிட்டாத தேனிருக்கிறது அதனைக் கண்டாலும், பேசினாலும் எப்போதும் அனைத்து எலும்பும் உன்நெகப் பேரானந்தத் தேன் சொரியும் வளைந்த புருவங்கள் கொண்ட எம்பெருமானுக்கு இரீங்காரம் செய்வாயாக.

போகவாழ்வை நாடாது ஞான வாழ்வை எப்படித் தேட வேண்டும் என்பதைச் சேக்கிழார் சுவாமிகள், சுந்தரமூர்த்தி சுவாமிகள் புராணத்தில் சுந்தரமூர்த்தி நாயனார் தில்லையம்பல நடராசப் பெருமானைத் தரிசித்த நிலைபற்றி

"ஐந்துபேர் அறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே யாகக் குணம் ஒரு மூன்றும்
திருந்து சாத்து வீகமே ஆக
இந்துவாழ் சடையான் ஆடும்
ஆனந்த எல்லையில் தனிப்பெரும் கூத்தின்
வந்தபேர் இன்ப வெள்ளத்தில் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்.
தெண்ணிலா மலர்ந்த வேணியாய் உன்றன்
திருநடம் கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்த பிறவியே

எனக்கு வாலிதாம் இன்பமாம் என்று
கண்ணினால் ஆனந்த அருவிநீா் சொரியக்
கைம்மலா் உச்சிமேற் குவித்துப்
பண்ணினால் நீடி அறிவரும் பதிகம்
பாடினாா் பரவினாா் பணிந்தாா்

முன்பு நாம் மனிதப்பிறவி தவிர்த்த ஆறு பிறவிகளின் தர்மங்களை ஓரளவு அறிந்தோம். அவைகள் தம்மையும், தலைவனையும், உலகையும் வகுத்து உணரும் தன்மை இல்லையெனினும் ஒரு சில பயன்பாடுகள் உண்டென்று அறிந்தோம். மனிதனிடம், மற்றைப்பிறவிகளுக்கில்லாத ஆறாவது அறிவென்னும் பகுத்தறிவு உண்டு. இதனால் அவன் தன்னையும் இறைவனையும் உலகையும் உணர்ந்து மனித தர்ம சாஸ்திர விதிப்படி நடந்து கொள்ளுதல் வேண்டும்.

மனிதன் பிறக்கும்போது அறிவுடன் பிறப்பதில்லை. அவனுக்குச் சூழ்நிலையும் பெற்றோரும் குருவுமே நல்லறிவைப் புகட்டுகின்றனர். அவன் பிறக்கும் சூழ்நிலைகள் அவனை ஆக்குகின்றன. பழக்க வழக்கங்கள் நிறைந்த சூழ்நிலைகள் அமைந்த இடங்களில் குழந்தைகள் நல்ல பயபக்தி உள்ளவர்களாக வளர்ந்து வருவார்கள்.

“வானத்திலிருந்து மழை பெய்கிறது. அந்த நீர் மிகமிக நன்றாகவே உள்ளது. அப்படியான நீர் கிணற்றில் ஆற்றில் குளத்தில் விழுந்தாலும் நல்ல நீராகக் காணப்படும். செந்நிறமான நிலத்தில் விழுந்தால் செந்நிறமாகவும், சகதியான இடங்களிலும் உவர்நிலங்களிலும் விழுகின்ற நீர் அந்தந்த தன்மையினதாகவே காணப்படுகின்றது போல குழந்தையும் பிறக்கும்போது நல்ல குழந்தையே வளர வளர அது சூழ்நிலைக்கேற்ப மாறி விடுகின்றது.

சூழ்நிலைக்கேற்ப மாறுகின்ற மனித இயல்பை ஸ்ரீ இராமகிருஷ்ண பகவான் ஓர் சிறுகதைமூலம் விளக்குகிறார். வேட்டைக்குச் சென்ற வேடுவனுக்கு மிருகமோ பறவையோ அகப்படாமையால் களைத்துப்போய் ஒரு மரநீழலில் இருந்தான். அப்போது அந்த மரத்தின் பொந்தில் இரு கிளிக்குஞ்சுகள் காணப்பட்டன. வேடன் அவ்விரு குஞ்சுகளையும் எடுத்து விற்கச்சென்றான். அப்போது ஒரு பிராமணதீட்சிதர் ஒரு கிளிக்குஞ்சைப் பணம் கொடுத்து வாங்கிச்சென்று அதனை வளர்க்கத் தன் மகனிடம் கொடுத்தார். மற்றைக் கிளிக் குஞ்சை வேடனிடமிருந்து ஒரு கொலைகாரன் பணம்கொடுத்து வாங்கிச் சென்று தன் மகனிடம் கொடுத்தான்.

பிராமண தீட்சிதர் வீட்டில் வளர்க்கப்பட்ட கிளிக்கூடு அவரின் வீட்டுவாசலில் தொங்கவிடப்பட்டு இருந்தது. தீட்சிதரின் வீட்டிற்கு வருவோரை அக்கிளி சிறகுகளை அடித்து வணக்கம் வாருங்கோ வாருங்கோ என்று அழைத்து வரவேற்று வணக்கம் கூறியபின் கதையின் உபதேச மொழிகளைக் கூறக்கற்றுக் கொண்டது. கொலைகாரன் வீட்டுக்கு எடுத்துச்செல்லப்பட்ட கிளி அங்கு வருவோரைக் கண்டால் யாரடா நீ? ஏனடா வந்தாய்? கத்தியைக்கொண்டு வாடா வெட்டடா அவனை என்று சொல்லிக் கோபங்கொண்டது. ஒரே தாய்க் கிளிக்குப் பிறந்த இரண்டு கிளிக் குஞ்சுகளும் வளர்ப்புச் சூழ்நிலையால் மாறுபாடும் முரண்பாடும் உடையனவாகக் காணப்பட்டன. (தொடரும்...

**தன்னை முற்றும் இழந்த நிலையிலேதான் அன்பு தோன்றக்கூடும்.**

உ

# மனித மனமே மூலகாரணம்

செல்வி S.K. சிந்து அவர்கள்
(கிழக்குப் பல்கலைக் கழகம்)

நாம் இன்றைய காலகட்டத்தையும், சூழ்நிலைத் தாக்கங்களையும் மையமாக வைத்து நமது வாழ்க்கையை அமைத்துக்கொள்ளவேண்டியது அவசியமாகும். ஏனெனில், இயற்கையின் சீற்றமும், செயற்கையின் தாக்கமும் இன்று மிக வேகமாக மனிதனைத் தாக்கிக் கொண்டிருக்கின்றன. இவற்றிலிருந்து மனிதனை விடுவிப்பதற்காக விஞ்ஞான உலகம் புதிய ஆய்வுகளையும் கண்டுபிடிப்புக்களையும் மிக வேகமாக மேற்கொண்டு வருகின்றது. ஆனாலும், இயற்கையின் சீற்றத்தை மனிதனால் எதிர்கொள்ள முடியவில்லை. தினமும் பூகம்பம், சுனாமி, சூறாவளி, வெள்ளப்பெருக்கு, மண்சரிவு.... என்ற பாரிய அனர்த்தங்களைச் சந்திக்கின்றோம். இவை மாத்திரமன்றி வாகனவிபத்து, தீ விபத்து, குண்டு வெடிப்பு, கொள்ளை, துப்பாக்கிச்சண்டை, வாள்வெட்டு..... என எத்தனையோ அனர்த்தங்கள் தினம் தினம் நடைபெறுகின்றன.

இத்தனை அனர்த்தங்களும் மனித வாழ்க்கையைச் சின்னாபின்னமாக்குகின்றன. எனவே, இவைபற்றி ஒவ்வொரு மனிதனும் சிந்திக்கவேண்டும். ஏனெனில் எண்ணங்களின் பிரதிபலிப்பே நமது வாழ்க்கை. மனிதனின் மனத்திலே எழுகின்ற எண்ணங்கள் தாம் இவ்வுலகில் நடக்கின்ற நன்மைக்கும் தீமைக்கும் காரணமாகின்றன. மனித மனத்தினைத் தீயவழிக்கு இட்டுச் செல்கின்ற தன்மை கலியுகத்தைச் சார்ந்தது. ஆகவேதான் உலகம் முழுவதும் கொலை, கொள்ளை, ஒழுக்கக்கேடு, கற்பழிப்பு, குரோதம், இனவாதம்... என்பன நிறைந்து காணப்படுகின்றன. அன்பு, கருணை, விசுவாசம், நேர்மை, நம்பிக்கை, உண்மை.... என்பன பெருமளவிற் குறைந்துவிட்டன. உலகமெங்கும் மனிதப்பண்புகள் குறைந்து மிருகப் பண்புகள் அதிகரித்து வருகின்றன.

இதற்கான அடிப்படைக் காரணங்கள் மனிதனால் உருவாக்கப்பட்டவையே. அதாவது அன்றைய காலகட்டத்தில் நம் முன்னோர்கள் கண்ணாற் காணும் யாவற்றையும் வழிபட்டனர். பூமி, வாயு, அக்கினி, வர்ணன்... முதலான இயற்கைத் தெய்வங்களை வழிபட்டனர். அதனால் அவற்றின் பலாபலன் மனிதனுக்குக் கிடைத்தன. ஆனால் இன்று இயற்கையை வழிபடுகின்ற மரபு மனிதனிடம் மறைந்துவிட்டது. நன்றிகெட்டவர்களாக இயற்கைச் சமநிலையைக் குழப்புகின்ற செயல்களில் ஈடுபடுகின்றனர். ஒரு சில பழைமைவாதிகள் மட்டும் இயற்கையை வழிபடுகின்றனர்.

இனிய இசை, பக்திபரவசமான பாடல்கள், ஜெபம், தியானம்,...... என்பவற்றால் மனிதனின் உடலின் அதிர்வெண் நிலையை மாற்றமுடியும். மனித உடலில் மாற்றத்தை ஏற்படுத்தினால் இயற்கையிலும் மாற்றத்தை ஏற்படுத்த முடியும். இங்கு ஒலி முக்கிய இடத்தைப் பெறுகின்றது. "ஓம்" எனும் பிரணவ ஒலியில் பிரபஞ்சத்தின் தோற்றமும் ஒடுக்கமும் நிகழ்கின்றன. ஆனால் இன்றைய உலகில் ஒலியின் அதிர்வு தீமைக்கு வித்திடுவதாக அமைந்துள்ளது. இன்று

கா்நாடக இசை குறைந்துவிட்டது. தாலாட்டுப் பாடல் கேட்டுக் குழந்தைகள் உறங்கியகாலம் மலையேறிவிட்டது. இவற்றிற்குப் பதிலாக மனிதத்திற்கும் ஒழுக்கத்திற்கும் ஒத்துவராத டப்பாப் பாடல்கள் எங்கும் நிரம்பி வழிகின்றன.

இன்றைய இளைஞா் சமுதாயம் இவ் இசைகேட்டுச் சிலிா்த்தெழுகின்றது. மனிதமனம் அதில் இலயப்படுகின்றது. உடுக்கடிக்கும்போது மனிதன் உருக்கொண்டு ஆடுவதுபோல இன்றைய இசையினால் ஏற்படும் ஒலி அதிா்வெண்கள் இயற்கையின் சமநிலையைக் குழப்புகின்றன. இதனாலேயே மனிதனை இயற்கை அனா்த்தங்கள் தாக்குகின்றன. எனவே, இயற்கைச் சமநிலையைப் பேணுவது ஒவ்வொரு மனிதனதும் தலையாய கடமை.

இன்றைய இளைஞா்களை நாளைய தலைவா்களாக உருவாக்குகின்ற இடம் பாடசாலை. ஆகவே பாடசாலையில் பாீட்சைக்காக மட்டும் கற்பிக்காது மனித விழுமியங்களைக் கற்பிக்க வேண்டியது அவசியமாகும். மனத்தில் சத்தியம், தா்மம், அமைதி, அகிம்சை ஆகிய மனித விழுமியங்களை பதிய வைக்கவேண்டும். அதனாற்றான் சிறந்த சமுதாயமொன்றை உருவாக்க முடியும்.

இன்று கலை எனும் பெயரில் சினிமாப்படங்களும், சின்னத்திரையும்தாம் முன்னிலையில் நிற்கின்றன. இதனால் படுமோசமான ஆபாசக் காட்சிகளும், பாடல்களும் மனித மனத்தில் இடம்பிடித்துள்ளன. தரக்குறைவான எண்ணங்களால் மனிதமனம் நிரப்பப்பட்டுள்ளது. அதனால் சிறந்த நல்ல கலை உணா்வுகள், கற்பனைகள் அழிக்கப்பட்டுவிட்டன.

எனவே இவற்றிலிருந்து மனித மனம் விடுபடவேண்டும். நல்ல கலையுணா்வுகள் வளா்க்கப்படவேண்டும். பாடசாலைகள், சமயநிறுவனங்கள்மூலம் கலைகள் வளா்க்கப்பட வேண்டும். மனித மனம் பண்படுத்தப்பட வேண்டும். அப்போதுதான் ஓரளவாவது பண்பான சமுதாயத்தை உருவாக்கலாம். அந்த வகையில் இன்றைய இந்தக் காலகட்டத்தில், சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை மனித மனத்தினைப் பண்படுத்தக் கூடிய வகையில் மேற்கொண்டுவரும் இத்தகைய பணி பாராட்டத்தக்கது.

"நல்லாா் ஒருவா் உளரேல் அவா் பொருட்டு
எல்லாா்க்கும் பெய்யும் மழை"

என்பதுபோல நல்ல காாியங்கள் நடப்பதற்கு வித்தாக வாழ்கின்ற நல்ல மனிதா்கள் ஒரு சிலரால் ஓரளவாவது சிறந்த சமுதாயத்தை உருவாக்க முடியும். ஆகவே இன்று நாம் அனுபவிக்கின்ற துன்பங்களிற்கெல்லாம் மூல காரணம் மனித மனமே. ஒவ்வொருவரும் தமது மனத்தைத் தூய்மைப்படுத்தினால் நல்வாழ்க்கையை அமைத்துக்கொள்ளலாம்.

---

அவிழ்த்துவிடப்பட்ட யானை மரங்களையும், செடிகளையும் வேரோடு பிடுங்கிக்கொண்டு போகிறது. ஆனால் அதன் பாகன் அங்குசத்தால் யானையின் தலையில் குத்தியதும் அது அமைதியாகிவிடுகிறது. அதுபோல் அடக்கியாளாத மனம் வீண் எண்ணங்களில் ஓடுகிறது. விவேகம் என்ற அங்குசத்தால் இடிக்கப்பட்டதும் அது அமைதி அடைகிறது.

---

**பூரணமாகத் தெரிந்துகொள்ளாத விஷயம் நம் அறிவில் சேராது.**

உ

# விதியும் விதிப்பயனும்

திரு நா.நல்லதம்பி அவர்கள்

நமது இதிகாசங்களாக இராமாயணமும் மகாபாரதமும் விளங்குகின்றன. இராமாயணத்தில் இராமாவதாரஞ் செய்தவரும் மகாபாரதத்தில் கிருஷ்ணாவதாரஞ் செய்தவரும் விஷ்ணுபகவானே ஆவார்.

இராமாயணத்தில், முக்கியமாகத் தந்தைதாய் வாக்கிய பரிபாலனம், சகோதர ஒற்றுமை, நட்பு, ஏகபத்தினி விரதம், பெரியோரைப் பிழையாமை என்பன வற்புறுத்திப் பேசப்பெறுகின்றன. தீயவர்கள் எனக் கருதப்பெறுவோர் திருந்துவதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்பெறுகிறது; திருந்த மறுப்போர் அழிக்கப்பெறுகிறார்கள்.

மகாபாரதத்தில், பலவிதமான மாந்தர்களைச் சந்திக்கிறோம். கொடைக்குக் கன்னனும் வில்லுக்கு விஜயனும் அங்கே இருக்கிறார்கள். வலிமைக்கும் பெருந்தன்மைக்கும் பிதாமகன் என்று பேசப்பெறும் பீஷ்மரும், துரோணரும், விதுரனும் இருக்கிறார்கள். சகோதர ஒற்றுமைக்கு உதாரணமாகப் பாண்டவர்களும், அவர்களுடைய வீரபராக்கிரமங்களைக் கண்டு பொறாமையால் விரோதிகளாக மாறிய கௌரவர்களும் இருக்கிறார்கள்.

நல்லோர்களைக் காக்கவும் தீயோரை அழிக்கவும் அவதாரமெடுத்த பகவான்மூலம், ஒரே உறவுமுறையானவர்களுக்கிடையிலான பாரதப் போரைக் காணமுடிகிறது. ஆதலால் பகவத்கீதை என்ற அழியாச் சொத்து நமக்குக் கிடைக்கிறது!

இந்த இரண்டு இதிகாசங்களிலும், கதை மாந்தர்கள் சிலருடைய விதியும் விதிப்பயனும் எவ்வாறு அமைந்துள்ளன என்பதுபற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## பகுதி 1

## இராமாயணம்

அவதார புருடனான இராமன் பதினான்கு ஆண்டுகள் வனவாசஞ் செய்யப் புகுந்தமையால் வாலி இராவணன் முதலியோர் அழிக்கப்பெறுகிறார்கள். அவர்களால் துன்பப்பட்டோர் காப்பாற்றப் பெறுகிறார்கள்.

இதற்குச் சிறுபிள்ளையான இராமன் செய்த குறும்புத் தனத்தைப் பெரிதுபடுத்தி மந்தரை கொண்ட பழி தீர்க்கும் எண்ணம் விதியாக அமைகிறது.

முனிவர்கள் வசிக்கும் தண்டகாரண்யத்திலே மகிழ்ச்சியாக இருந்த இராமன், தன்தேவி சீதையை இராவணன் கவர்ந்து சென்றபின் மிகுந்த மனச்சஞ்சலத்துடனேயே காலங்கழிக்கிறான். தெய்வப் பிறவியான இராமன் துன்ப துயரங்கள் வரும்போது சாதாரண மனிதனாகவே தோன்றுகிறான். இலக்குமணன் எவ்வளவு ஆறுதல் கூறினாலும், "அரக்கரிடம் எனது அன்புத் தெய்வத்தைப் பறிகொடுத்த மாபாவி என்றே புலம்புகிறான் இராமன்.

இதேநேரம் இராவணனோ, தான் இராமனது வில்லால் அழிந்துபோகும்

விதியைத் தானே தேடிக்கொண்டவனா கின்றான்.

இதற்கு அனுகூலமாக, இராம இலக்குமணர்களால் கொல்லப்பெற்றுச் சாபவிமோசனம் பெறும் கபந்தன் என்ற அரக்கன், "சுக்கிரீவன் என்ற வானர இராசனுடன் நட்புக்கொண்டால், சீதையை நிச்சயம் திரும்பப்பெறுவாய்" என்று ஆசி கூறிப் போகிறான்.

வாலியினால் துரத்தப்பெற்ற சுக் கிரீவன், ரிஷ்யசிருங்க மலையில் மறைந்து வாழும் இரகசியத்தைச் சபரி என்னும் பெண்மணி இராமனிடம் சொல்லுகின்றாள். அம்மலைக்கு வாலி போனால் அவனுக்கு மரணம் நிச்சயம் என்பது மதங்க முனிவரின் சாபம்!

மனைவியை இழந்த இராமனின் மனோநிலையில், மனைவியை இழந்த சுக்கிரீவன் அம்மலையில் உலாவுகிறான். மற்றும், சுக்கிரீவனுடைய மந்திரியான அனுமனது பக்தியும் சேவையும் இராமா வதாரத்தில் வந்துசேரும் என்பதும் விதி!

வாலியிடமிருந்து தனது மனை வியை மீட்டுத்தந்தால், தான் சீதையை நிச்சயம் தேடித் தருவதாகச் சுக்கிரீவன் உறுதிகூறியதும் வாலிவதம் நிச்சய மாகிறது.

வாலியை நேருக்குநேர் நின்று போர்செய்து வெல்லமுடியாது என்ற உண்மையை இராமனுக்குச் சுக்கிரீவன் சொல்லுகிறான். அதனால், இராமனும் மறைந்துநின்றே வாலியைக் கொல்லு கின்றான். இராமன்தான் அம்பெய்து தன்னை வீழ்த்தினான் என்பதைக் கண்ட வாலி, "அரக்கனான இராவணன் உன் மனைவியை அபகரித்தமைக்காகக் குரங் கினத் தலைவனான என்னை மறைந்து நின்றுகொல்ல எந்த மனுநீதி சொன்னது" என்று கேட்ட கேள்விக்கு இராமன் என்ன பதில் சொல்லமுடியும்? அண்ணனுக் காகத் தம்பி இலக்குமணன் பதில் கூறு கின்றான்.

"வாலியே முன்பு உனது தம்பி வந்து எனது அண்ணனிடம் சரணடைந்த போது அவனது வேண்டுகோளின்படி, முறைதவறிநடந்த உன்னைக் கொன்று அவனது மனைவியை மீட்டுத்தருவதாகக் கூறிவிடுகிறார்.

அதேபோல நீயும் எனது அண்ண னிடம் சரண்புக எண்ணிவந்தால் அண்ண னுக்குப் பெரிய தர்மசங்கடம் ஏற்படுமல் லவா? அதனாற்றான் உன்னை மறைந்து நின்று கொன்றுவிடவேண்டும் என முடிபு செய்தார்" என்கிறான்.

இந்த நிலையில், தன் மனைவி தாரையின் புத்திமதியைத் தான் அலட்சி யஞ் செய்தமைக்காக வருந்துகிறான்; தனது தீயனவற்றைப் பொறுத்துக்கொள் வதோடு, தனது தம்பி சுக்கிரீவனையும் மகன் அங்கதனையும் நல்வழியில் நடக்கச்செய்யும்படியும் இலக்குமணனிடம் வேண்டுதல்செய்து தன் உயிரை விடுகின் றான் வாலி.

சுக்கிரீவனுடைய ஆசையும் வாலியின் கோபமும் வாலியின் இறப்புக்கு விதியாகின்றன.

இராவணன்தான் சீதையைக் கவர்ந்துகொண்டு போனவன் என்பது சடாயுவால் உறுதிப்படுத்தப் பெறுகிறது. என்றாலும் தனது இலங்கைத் தீவில்தான் சீதையை வைத்திருக்கிறான் என்பதை இலங்கை சென்று திரும்பிய அனுமான் உறுதிப்படுத்துகின்றான்.

பிறர் மனையாளை விரும்பிய குற் றம் இராவணனது இறப்புக்கு விதி யாகிறது. தான் செய்வது குற்றம் என்று

சிவபக்தனான இராவணனுக்குத் தெரியாமலா போகும்? தன்னை விஞ்சியவன் யார் என்ற ஆணவப்போக்கு அவனிடம் கோபக் கனலை மூட்டுகிறது. அதனால் இராமனது தூதுவர்களிடம் தனது போர் விருப்பத்தையே கூறி அனுப்புகிறான்.

தம்பி கும்பகர்ணன் இராவணனுக்காகப் போர்புரிய விரும்புகிறான்; விபீடணனோ இராமனிடம் அடைக்கலந் தேடுகிறான்.

இராம- இராவண யுத்தத்தில் இராவணனும் ஏனைய அரக்கரும் அழிகின்றனர். எவ்வளவு வல்லமையிருந்தும் என்ன? இராவணனது தவறு அவனது இறப்புக்கு விதியாய் அமைந்துவிடுகிறது.

## பகுதி 2

## மகாபாரதம்

அறநெறி வழுவாத பாண்டவர்கள் பக்கமே கிருஷ்ணபரமாத்மாவின் அருள் இருந்துவருகிறது.

அதேசமயம், பாண்டவர்களின் நல் வாழ்வுகண்டு, அவர்களிடத்தில் காழ்ப்புணர்ச்சியும் தீங்கு விளைவிக்கும் மனப்பான்மையுங் கொண்டவர்களாகத் துரியோதனனும் அவனது தம்பிமாரும் விளங்குகிறார்கள்.

துரியோதனன் முதலிய நூற்றொருவர் திருதராட்டினனுடைய பிள்ளைகள். திருதராட்டினனுடைய தம்பி பாண்டு மகாராசனது பிள்ளைகளே இந்தப் பஞ்ச பாண்டவர்கள் ஆவர். அரசியல் முறைப்படி அண்ணன் திருதராட்டினன் அரியணையில் அமர்ந்திருக்கிறான். அவன் பார்வையற்றவனான காரணத்தால் மூத்தவனான துரியோதனன் ஆட்சி அதிகாரத்தைத் தனது கையில் கொண்டிருக்கிறான்; வணங்காமுடியோன் என்று பெயர் பெற்றவன்.

இந்தக் கௌரவர்களுடைய ஆட்சியின்கீழ் மிகவும் வல்லவர்களான நல்லவர்களான பீஷ்மர், துரோணர், விதுரன் போன்றோர் இருக்கிறார்கள். அவர்களுக்கு இந்தப் பாண்டவர்களுடைய வாழ்வுமுறையிலும் வல்லமையிலும் நல்ல அபிப்பிராயம் இருந்தாலும், துரியோதனனுக்கு மாறாக எதனையும் செய்ய முடியாதவர்களானார்கள்.

பாண்டவர்களது குணாதிசயங்களிலும் வல்லமையிலும் நன்மதிப்புக்கொண்ட கிருஷ்ணபகவான் அவர்களோடு நண்பனாக, உறவுமுறை கொண்டவராகப் பழகுகின்றார். அவர்களது உதவியோடுதான் தனது அவதார நோக்கத்தை நிறைவேற்றப் போகிறார்.

இதற்காக, பொறுமைக்கும் நீதிக்கும் புகழ்பெற்ற தருமனை மாயச் சகுனியின் சூதாட்ட வலைக்குள் சிக்கவைக்கிறார் கிருஷ்ணர். அப்பொழுது தருமன் நினைப்பதும் சொல்வதும் செய்வதும் எல்லாம் கிருஷ்ணனுடைய விதிப்படி அமைந்து விடுகின்றன! விதியே மதியாய் விடுகிறது!

இனிமேல், தருமன் எதுசெய்தாலும் அவன் வழியிலே அடங்கிப்போவார்கள் தம்பிமார்கள் என்பது கிருஷ்ணனுக்குத் தெரிந்ததுதானே!

துரியோதனன் முதலியோரை அழிப்பதற்குப் பாண்டவரிடம் இயல்பாகவுள்ள மனிதநேயம் மறையவேண்டும்; இவர்களுக்கு ஈயிருக்கும் இடங்கூட ஈயமறுத்தானே துரியோதனன் என்ற

ஊர்ப்பேச்சு எழவேண்டும். அதற்காக எழுந்தது சூதாட்டவிதி.

சூதாட்டத்திலே தம்மைத்தாமே இழந்ததுமன்றிப் பாண்டவர்கள் சொத்துச் சுகங்கள் சொந்தபந்தங்கள் அனைத்தையும் இழந்து அடிமைகளாயினர். பாஞ்சாலியின் கற்புநிலை காப்பாற்றப்படுவதோடு பாஞ்சாலி சபதம் பிறக்க விதி வகுக்கப்படுகிறது. அதற்கும் விதிசமைத்தவன் கிருஷ்ணன்தான்!

கௌரவர்களுடைய அநீதிகளுக்கெல்லாம் தலைமைதாங்கி வழிநடத்துகின்ற துரியோதனனுடைய இரத்தம் எடுத்துப் பூசியபின்பே கூந்தலை முடிப்பேன் என்று சபதம் செய்கிறாள் பாஞ்சாலி! இரத்தத்தை துரியோதனனுடைய தொடையிலிருந்து எடுத்துத் தருவேன் என்று வீமன் சபதம் செய்கிறான். இப்படி அடுத்தடுத்து விதிகள் உண்டாகியே பாரதப்போர் ஆரம்பமாகிறது.

பாஞ்சாலியும் பாண்டவர்களுமாகிய ஆறுபேரும் வனவாசஞ் செய்யப் புறப்பட்டுச் செல்லும்போது, தௌமிய முனிவரும் உடன் செல்கிறார். இவர்களை வழியனுப்பி வைத்த விதுரன், இந்தக் காட்சியைத் திருதராட்டின மன்னனுக்கு விளக்கிக் கூறுகிறான்.

"தருமன் தன் முகத்தைத் துணியினால் மூடிக்கொண்டு போகிறான்; வீமன் தனது இரு கைகளையும் பார்த்தவாறு போகிறான்; அர்ச்சுனன் மணலை அள்ளித் தூவிக்கொண்டும், நகுல சகாதேவர்கள் புழுதியை உடலிற் பூசிக்கொண்டும் நடக்கிறார்கள். பாஞ்சாலி தன் விரித்த கூந்தலினால் முகத்தை மறைத்துக் கண்ணீர் விட்டவாறு தருமனைப் பின் தொடர்ந்து செல்லத் தௌமியர் சாமகீதங்களைப் பாடிக்கொண்டு போகிறார்"

இதனைக்கேட்ட கபோதியான திருதராட்டினன் கலக்கமடைகிறான். அச் சமயம் அங்கே நாரதமுனிவர் தோன்றுகிறார். "திருதராட்டினனே நின் மகன் செய்த பிழையால், இன்றிலிருந்து பதினான்காவது வருசம் கௌரவர்கள் அழிந்து போவார்கள்" என்றுகூறி மறைகிறார்.

இதனால், துரியோதனனும் அவனது தோழர்களும் பயந்து நடுங்கித் துரோணாச்சாரியாரிடம் தஞ்சமடைந்து தம்மைக் காக்கும்படி வேண்டுகிறார்கள்.

அதற்கு அவர், "தேவாம்சம் பெற்றவர்களான பாண்டவர்கள் நீதிநெறி வழுவாதவர்கள்; பராக்கிரமசாலிகள்; அறிஞர்கள் பலரதும் அபிப்பிராயமும் இதுவே. ஆயினும், நீங்கள் தஞ்சமடைந்த வகையில் உங்களுக்காகப் பாடுபடுவேன். ஆனால் விதி வலியது; கொடியது என்பதனையும் மறவாதீர்கள்" என்கிறார்.

மேலும் அவர், பாண்டவர்களோடு சமாதானமாக வாழ இனிமேலாவது முயற்சிசெய்வது நல்லது; தானதர்மங்களைச் செய்வதும் நல்லது என்று புத்திமதியுஞ் சொல்லி வைக்கிறார். அந்த நேரத்திலும் வணங்காமுடியோன் என்று பேசப்படும் துரியோதனன், தனது மனத்தை மாற்றியவனாகத் தோன்றவில்லை.

பின்பு ஒருநாள், மைத்ரேய முனிவர் அவனுக்கு அறிவுரை கூறியபொழுது, தனது அகம்பாவத்தால், துரியோதனன் தனது தொடையில் தட்டி ஏளனமாகச் சிரிக்கிறான். இதனால் கோபங்கொண்ட முனிவர், "நீ இப்பொழுது உன் தொடையைத் தட்டினாயே, அந்தத் தொடை வீமன் கதையால் பிளக்கப்பட்டுப் போர்க்களத்திலே நீ மரணமடைவாய்" என்று சபிக்கிறார்.

ஆக, பாண்டவர்கள் சூதிலே

**எளிமையைப் பின்தொடர்ந்து மகிழ்ச்சி வருகிறது.**

தோற்றுக் கட்டுண்டு கிடக்க, தன் தொடையைத் தட்டிக்காட்டிப் பாஞ்சாலியை அங்கே வந்து இருக்கும்படி சொல்கிறதும், ஆத்திரமடைந்த வீமன், "காலநேரம் வரும்போது யுத்தஞ்செய்து உன் தொடையைப் பிளப்பேன்; இரத்தம் எடுத்துப் பாஞ்சாலி கூந்தலுக்குப் பூசக்கொடுப்பேன்; இது சத்தியம்" என்று கர்ச்சனை செய்வதும் காண்கிறோம்.

தனது முடிவு தனது தொடை மூலமே ஆகும் என்பதைக் கோடிட்டுக் காட்டுவதுபோன்ற துரியோதனனது செயற்பாடுகள் விதிப்பயனேயன்றி வேறென்ன?

பதினெட்டாம்நாட் போரிலே, துரியோதனனுக்கும் வீமனுக்கும் இடையில் கதாயுத்தம்! போர்முறையிலே கதையால் தொடையில் தாக்குவது அறமாகாது. வீமன் அறப்போர் செய்கிறான். ஆயினும் விதித்தவன் எச்சரிக்கையாகவே விளங்குகிறான்! தர்மம் நிலைநாட்டப்பட வேண்டுமே என்கிற கவலை கிருஷ்ணனுக்கு! போராட்டத்தைக் கண்டுகளிக்கும் சிறுவன் போல ஏதேச்சையாகத் தன் தொடையிலடித்து விளையாடுகிறான் மாயக்கிருஷ்ணன். அவ்வளவுதான் வீமனது கதை துரியோதனனது தொடையைப் பதம் பார்க்கிறது! சாபமும் சபதமும் விதிப்பயனாய் வந்து சம்பவிக்கின்றன.

## தேரேறும் நாகபூஷணிக்கோர் விண்ணப்பம்

போரை மண்ணில் ஓய வைக்கத் தேரிலேறி வருக தாயே
புதிய வாழ்வை மலர வைக்கத் தேரிலேறி வருக தாயே
சேரும் பகையை விலக்கி வைக்கத் தேரிலேறி வருக தாயே
செல்வ வாழ்வைச் செழிக்க வைக்கத் தேரிலேறி வருக தாயே
கோரும் உரிமை கிடைக்க வைக்கத் தேரிலேறி வருக தாயே
கொள்கை காத்து உழைக்க வைக்கத் தேரிலேறி வருக தாயே
பாரில் மக்கள் நலனைக் காக்கத் தேரிலேறி வருக தாயே
பஞ்சம் நாட்டில் தீர்ந்து போகத் தேரிலேறி வருக தாயே.

*மதுரகவி காரை எம்.பி. அருளானந்தன் அவர்கள்.*

## தொழுவோம் சக்தியினை

இறைவன் தன்னைத் தாயாக
இருத்தி வழிபடும் பக்தியெனும்
முறையும் சைவசம யத்தில்
முன்பே இருந்து வருகிறது
நிறைவாய் எதையும் பெறுவதற்கு
நித்தம் தொழுவோம் சக்தியினை
குறைகள் எல்லாம் போக்கிடுவாள்
குணத்தில் தாயை விஞ்சிடுவாள்.

*கவிஞர் வ. யோகானந்தசிவம் அவர்கள்.*

வீட்டில் குழந்தைகள் போல தோட்டத்தில் மலர்கள்.

உ

# ஔவையார் அருளிச்செய்த

# ஆத்திசூடி

## மூலமும் உரையும்

### காப்பு

***ஆத்தி சூடி அமர்ந்த தேவனை***
***ஏத்தி ஏத்தித் தொழுவோம் யாமே.***

பதவுரை: ஆத்தி- திருவாத்திப் பூமாலையை, சூடி- தரிப்பவராகிய சிவபெருமான், அமர்ந்த- விரும்பிய, தேவனை- பிள்ளையாகிய விநாயகக் கடவுளை, ஏத்தி ஏத்தி- துதித்துத் துதித்து, தொழுவோம்- வணங்குவோம், யாம்- நாங்கள் என்றவாறு.

தேவன்- பிள்ளை, ஏ- ஈற்றசை.

### சூத்திரம்

***1. அறஞ் செய விரும்பு.***

ப-ரை. அறம்- தருமத்தை, செய- செய்வதற்கு, விரும்பு- நீ ஆசை கொள்ளு.

***2. ஆறுவது சினம்.***

ப-ரை. ஆறுவது- (உன்னுள்ளே) தணிய வேண்டுவது, சினம்- கோபமே ஆம்.

***3. இயல்வது கரவேல்***

ப-ரை. இயல்வது- (கொடுப்பதற்கு) இசைவதை, கரவேல்- (நீ வறுமையினாலே இரப்பவர்களுக்கு) ஒளியாதே.

***4. ஈவது விலக்கேல்.***

ப-ரை. ஈவது- (தருமத்தைக் குறித்து ஒருவருக்கு ஒருவர்) கொடுப்பதை, விலக்கேல்- நீ தடுக்காதே.

***5. உடையது விளம்பேல்.***

ப-ரை. உடையது- (உனக்கு) உள்ள பொருளை, விளம்பேல்- (நீர் பிறர் அறியும்படி) சொல்லாதே.

***6. ஊக்கமது கைவிடேல்.***

ப-ரை. ஊக்கமது- (செய்தொழிலில்) மனஞ் சோராமையை, கைவிடேல்- நீ கைவிடாதே.

***7. எண் எழுத்து இகழேல்.***

ப-ரை. எண்- கணித நூலையும், எழுத்து- இலக்கண நூலையும், இகழேல்- நீ இகழ்ந்து தள்ளாதே. (புகழ்ந்து கல் என்பது கருத்து) கணிதம்- கணக்கு.

***8. ஏற்பது இகழ்ச்சி.***

ப-ரை. ஏற்பது- (ஒருவரிடத்திலே போய்) இரப்பது, இகழ்ச்சி- பழிப்பாகும்.

(தொடரும்...

உ

(தொடர்ச்சி...

# காலத்தின் தேவை

**சொல்லின் செல்வர் இரா. செல்வவடிவேல் அவர்கள்**

வாழ்க்கை அருமையானது. வாழ்க்கை இன்பமானது. வாழ்க்கை வாழ்வதற்கே. வாழ்வாங்கு வாழுதல் வேண்டும் என்பது தமிழ்நெறி; தமிழர் கோட்பாடு. வாழ்வாங்கு வாழ்வதற்குச் சிந்தனை தேவை; தெளிவு தேவை; அறிவுதேவை "சிந்தையும் தெளிவுமாகித் தெளிவினுள் சிவமுமாகி" என்பது திருமுறை. மானிடத்தை மற்றைய உயிர்களிலிருந்து பிரித்துக் காட்டுவது சிந்திக்கும் திறனும் சிரிப்புமாகும. சிந்திக்கின்றபோது உயிர் தன் மதிப்பீடு செய்துகொள்கிறது. தன்னை அறிந்து கொள்கிறது. தன்னுடைய குற்றங் குறைகளைத் தெரிந்து உணரும் உயிர், மேம்பாட்டை நோக்கி அலாவுவது இயற்கையின் நிகழ்வு. இது அறிவியல் சார்ந்த உண்மை. குறைகளை உணர்தலே நிறைகளைப் பெறுவதற்குரிய வாயில்! மனிதன் விலங்கல்ல; மனிதனுமல்ல; விலங்குத் தன்மையும் மனிதத் தன்மையும் சேர்ந்து செய்யப்பட்ட கலவை; விலங்குத் தன்மையில் இருந்து விடுபட்டு பூரணமான மனிதத் தன்மையை முயன்று பெற்று, அதனினும் உயர்ந்த கடவுட் தன்மையை அடைதலே வாழ்க்கையின் பரிணாமவளர்ச்சி இந்த முயற்சி எளிதில் கைகூடுவதே.

மானிடன் தன் புலன்களின் அழுக்கை நீக்கித் தன்னை பக்குவப்படுத்த உதவுவது சமயநெறி ஆகும். புறக்கருவிகளாக இருக்கின்ற பொறிகளையும் அகக் கருவிகளாக இருக்கின்ற புலன்களையும் அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச் சொல் இவற்றோடுள்ள தொடர்பிலிருந்து விலக்கி - அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை ஆகியவற்றோடு இயைபுபடுத்தி, உயிரை வளர்த்து உயர்த்துவதே சமயத்தின் குறிக்கோள். உயிர் வாழ்க்கை அகநிலையிலும் புறநிலையிலும் வளம்பெறச் சமயவாழ்க்கை தேவை. சமயம் சார்ந்த வாழ்க்கையே வாழ்க்கை. "பேசாத நாளெல்லாம் பிறவா நாளே" என்று அருளாளர் கூறியது அறிக.

சமய வாழ்விற்கு இறைவழிபாடு அவசியம். இந்நோக்கினைப் பூர்த்தி செய்வதற்காகத் திருக்கோயில்கள் அமைக்கப்பட்டுள்ளன. கடவுள் எங்கும் நிறைந்தவர்; எல்லாப் பொருட்களிடத்தும் தங்கியிருப்பவர்.

"வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யான் எனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என் சொல்லி வாழ்த்துவனே"

என்பது மணிவாசகர் வாக்கு. எங்கனும் நீக்கமற நிறைந்திருக்கும் இறைவனுக்குத் திருக்கோவில் ஏன்! திருக்கோவில் கடவுளுக்கு அல்ல! மானிடர்களுக்கே 'திருக்கோவில் ஆகும். மானிடர் இறைவனைக் காண்பதற்கும், கலந்துரையாடுவதற்கும், நலன்களைப் பெறுவதற்கும் துணையாக இருப்பது திருக்கோவில்.

திருக்கோவிலை மையப்படுத்தி சமுதாய மேம்பாட்டுப் பணிகள் நடை

**இன்பம் கனவில் இல்லை, வாழ்க்கையில்தான் இருக்கிறது.**

பெற்றன. தமிழர்களின் எந்தவொரு செயலும் பொழுதுபோக்குக்குரியதல்ல. ஆழமான நல்ல எண்ணங்களை அடித்தளமாகக் கொண்டதாகவே இருக்கும். திருக்கோவில் சமுதாய இயக்கத்தை ஏற்றுக் கொண்டிருக்கின்ற பாங்கின் அடிப்படையில்த்தான் "கோயில் இல்லா ஊரிற் குடியிருக்க வேண்டாம்" என்ற மூதுரை பிறந்தது.

மனிதன் வளர்ச்சியடைய கல்வி தேவை; கேள்வி தேவை. கல்வியும் கேள்வியும் எளிதில் பெறும் சமுதாயமே மேம்பாடடைய முடியும். "கற்றல் கேட்டல் உடையார் பெரியார்" என்று திருஞான சம்பந்தர் அருளிச் செய்துள்ளார். இத்தகைய அருமையான கல்வியினைத் திருக்கோயில் வழங்கியது. திருக்கோயில்களில் நூலகம் அமைக்கப்பட்டது. பண்ணிசை வகுப்புக்கள், பட்டிமன்றங்கள் நிகழ்ந்துள்ளன.

வாழ்க்கை சாப்பிடுவதற்கு மட்டும் உரியதன்று. ஆன்மாவிற்குக் களிப்பும் மகிழ்ச்சியும் தேவை. அழகுணர்வு தேவை. திருக்கோயில் ஒரு சிறந்த கலை பயில்கூடம். தமிழ்நாட்டிலுள்ள பல திருக்கோயில்கள் சிற்பக்கலையின் உறைவிடமாகத் திகழ்கிறது. தஞ்சையை அண்டிய ஆலயங்கள் அனைத்தும் சிற்பக்கலைக்கு சிகரமாகத் திகழ்கின்றன. தமிழரின் கட்டிடக் கலைக்கு தஞ்சைப் பெருவுடையார் ஆலயம் சாட்சியாகக் காணப்படுகிறது. கலைகளை வளர்ப்பதற்கு பெருநிதி ஒதுக்கப்பட்டிருந்ததை ஆலயங்களில் உள்ள கல்வெட்டுக்கள் இன்றும் வெளிக்காட்டி நிற்கின்றன.

மானிட வாழ்க்கை இனிதே அமைவதற்கு மருத்துவமும் தேவை. திருக்கோயில் சூழலில் வாழ்ந்த சித்தர்கள் சித்தமருத்துவம் கண்டார்கள். சித்த மருத்துவத்துறையில் நோய்வருமுன் காக்கும் நெறிகளும், வந்தபின் செய்வதற்குரிய மருத்துவமும் உண்டு. ஏன் இறைவனே மருத்துவனாக நின்று அருள்பவன் தானே! இறைவன் ''மருந்தீசன்'' என்றும் "வைத்தியநாதன்" என்றும் பெயர்பெற்று விளங்குகின்றான். திருக்கோயில் வளாகத்தில் சிறந்த மருத்துவசாலைகள் இருந்தன.

திருக்கோயில் சமுதாய நோக்குடையது என்று பார்த்தோம். நம் சிவபூமியாம் இலங்கையில் குறிப்பாக யாழ் மாவட்டத்தில் உள்ள திருக்கோயில்கள் எப்படியுள்ளன? நமது திருக்கோயில் களுக்கு வளமில்லையா? ஆடம்பரத்தில் உச்சத்திலுள்ள திருக்கோயில்கள் எத்தனை?

காரைநகர், திருக்கோயில்கள் பல சிறப்பாக அமைந்துள்ள இடமாகும். வியாவில் காரைநகரின் ஒரு முனையில் அமைந்துள்ள இடம். அங்கு அமைந்துள்ள ஐயனார் ஆலயத்திற்கு சென்றுவரும் ஒவ்வொரு தடவையும் ஆலய நிர்வாகத்தின் புதிய சிந்தனைகளைப் பார்த்துவருகிறேன். ஆலயச்சூழல் மணல்மண் கொண்டதாகும். திருக்கோயிலின் முன்பகுதியில் குறிப்பிட்ட ஆழத்திற்கு மணல் அகற்றப்பட்டு தோட்ட மண் நிரப்பப்பட்டிருப்பதை- நிரப்பப்பட்டுக் கொண்டிருப்பதைக் காண்கிறேன். இந்த மாற்றத்தினால் ஆலயத்தின் முன் பகுதியில் தென்னைகளும் அழகான பூந்தோட்டமும் அமைக்கப்பட்டுச் செழிப்பாக் கப்பட்டு வருகிறது. இங்கு மணல் எடுக்கப்பட்டது. சிலரால் விமர்சிக்கப்படுவதையும் அரசாங்கத் தடைகள் ஏற்படுவதையும் அறியமுடிந்தது. இங்கு மணல் அகழ்வினால் ஏற்படக்கூடிய புவியியல் ரீதியான பிரச்சனைகள் ஏதாவது

உள்ளதா? என அறியவிரும்பி யாழ்ப் பாணத்தின் மூத்த புவியியற்றுறை பேரா சிரியர் திரு பொ. பாலசுந்தரம்பிள்ளை அவர் களுடன் உரையாடினேன். மணல் அகற்றப்பட்டு வயல்மண் இடப்படுவத னால் ஆலயக்கட்டிடம் உறுதிபெறுவதை யும் இம்முயற்சியை வரவேற்றும் பல கருத்துக்களை முன்வைத்தார். காலத் திற்கு ஏற்ப உருவாகும் புதிய முயற்சி களை வரவேற்கவேண்டும்.

முன்னாள் இந்துகலாச்சார அமைச் சர் அமரர் தி. மகேஸ்வரன் பல ஆலயங் களுக்குப் பசுக்களை வழங்கினார் என்பது சகலரும் அறிந்த விடயம். இவ்வாறு வழங் கப்பட்ட பசுக்களில் கசாப்புக்கடைக்குப் போனவற்றுக்கு தனிக்கணக்கு உண்டு. வழங்கப்பட்ட பசுவை நல்லமுறையில் பராமரித்து, பசுக்களின் எண்ணிக்கையை யும் அதிகரித்து பசுக்களிலிருந்து உச்ச மான பயனைப்பெறும் திருக்கோயிலாக வும் வியாவில் ஐயனார் தேவஸ்தானம் திகழ்வதைக் கண்டேன். பசுக்கள் மூலம் பெறப்படும் பால் அருகிலுள்ள மற்றைய கோயில்களுக்கும் வழங்கப்பட்டு வரு கிறது. பசுவின் சாணம் கொண்டு கோயில் வளவினுள் விபூதி தயாரிக்கும்பணி நடைபெறுகிறது. சரியான முறையில் விபூதி தயாரிக்கப்படுவது அவசியம். யாழ்ப் பாணத்தில் முறைப்படி தயாரிக்கப்பட்ட விபூதி இல்லாதிருப்பது குறையாகும். விபூதி தயாரிப்பை ஒழுங்குபடுத்துவதன் மூலம் பலருக்கு வேலைவாய்ப்பு வழங்கப் படுவதுடன் தரமான விபூதியையும் தயாரித்து வழங்கமுடியும். இப்பணியை தேவஸ்தான நிர்வாகம் சரியான முறை யில் முன்னெடுத்து முன் உதாரணமாகத் திகழவேண்டும்.

வியாவில் ஐயனார் தேவஸ்தானத் தின் நிர்வாகம் ஏழைப் பிள்ளைகளுக் கான கல்விக்கு இயன்றளவு உதவுகிறது. அருகிலுள்ள பாடசாலைக்கான விளை யாட்டு மைதானம் அமைவதற்கும் உதவி யுள்ளது. மருத்துவசேவையும் சிறிய அளவிலாவது ஆரம்பிப்பதற்கு முயற்சி மேற்கொண்டு காலத்தின் தேவையை அறிந்து செயற்படும் திருக்கோயில் களுக்கு முன்னுதாரணத்துடன் திகழ வேண்டும்.

காரைநகர், திருக்கோயில் கும்பா பிஷேகங்களைச் சிறப்பாக நடாத்து வதற்கு "பெயர்போன" இடமாகும். வியா வில் ஐயனாருக்கும் பாலஸ்தானம் நடை பெற்று கும்பாபிஷேகத்திற்கான திருப் பணிகள் நடைபெற்று வருகின்றது. கும்பா பிஷேகத் திருப்பணியிலும் கிரியை களிலும் காலத்தின் தேவை என்ன என்பதற்கு முன் உதாரணமாக வியாவில் ஐயனார் திருக்கோயில் அமையும் என நம்புகிறேன்.

(தொடரும்.....

## உன்னையே நீ உயர்த்திக்கொள்

முற்றாத மூங்கிலை எளிதில் வளைக்கலாம். முற்றிய மூங்கிலைப் பலவந்தமாக வளைக்கமுயன்றால் ஒடிந்துபோகும். அதுபோல் இளைஞர்களின் மனதை இறைவனிடம் செல்லும்படி திருப்புவது எளிது. வயது முதிர்ந்தவனுடைய பழக்கப்படாத மனமோ அப்படி திருப்ப முயற்சி செய்யும்போதெல்லாம் பிடியை மீறிச் செல்லும்.

ஏழைகளின் துயரத்தைத் துடைக்காத வாழ்க்கையும் ஒரு வாழ்க்கையாகுமா?

# அன்பு

**வாரியார் சுவாமிகள்**

*புத்தி மெத்த காட்டும் புனவேடன்:*

கண்ணப்பனுடைய சிறந்த அன்பு நெறியை இதில் விளக்குகின்றார். கண்ணப்பருடைய அன்பும் அவருடைய புனித வரலாறும் மாற்றம் மனங்கழிய நின்றவையாம். மானுடராகப் பிறந்த ஒவ்வொருவரும் கண்ணப்பருடைய கதையை ஓதவேண்டும். உன்னுதல் வேண்டும். உணருதல் வேண்டும். அன்பால் உருகுதல் வேண்டும். அன்புக்கு கட்டளைக்கல் கண்ணப்பராவார்.

*"வாளா பொழுது கழிக்கின்றார் மானிடவர்*
*கேளார்கொல் அந்தோ கிறிபட்டார்- கீளாடை*
*அண்ணற் கணுக்கராய்க் காளத்தி யுள்நின்ற*
*கண்ணப்ப ராவார் கதை"*

என்கிறார் தக்கோர் புகழும் நக்கீரதேவர், "கண்ணப்பனொப்பதோர் அன்பின்மை கண்ட பின்" என்பார் அன்புக் களஞ்சியமான மாணிக்கவாசகனார்.

இறைவனை அடைவதற்கு அன்பு மார்க்கம், விதி மார்க்கம் என்ற இரு வழிகள் உள. அவற்றுள் அன்பு மார்க்கம் சிறந்தது. மண்வழியே நடந்து செல்வதுபோல விதிமார்க்கம். விண் வழியே பறந்து செல்வதுபோல அன்புமார்க்கம்.

விதி மார்க்கமானது முறையே வேதாகமங்களை ஓதியுணர்ந்து அவற்றில் கூறியவாறு ஒழுகி முறைப்படி இறைவனை வழிபட்டு மாறுபாடன்றி நிற்றலாம்.

அன்பு மார்க்கமாவது ஒரே அன்புமயமாக நிற்றலாம். அன்பு நெறியில் கலைஞானங் கூறும் விலக்குகள் எல்லாம் தீ முன் எரியும் பஞ்சுபோல பறந்தொழியும்.

விதி மார்க்கத்தில் நின்றவர் சிவகோசரியார்.

அன்பு மார்க்கத்தில் நின்றவர் கண்ணப்பர்.

விதி மார்க்கத்தில் செல்பவர் அன்பு மார்க்கத்தினை அடைதல் வேண்டும். அதனாலேதான், சிவபெருமான் கண்ணப்பர் கனவிலே போய், "திண்ணப்பா! நீ ஊன் நிவேதிப்பதும், வாயிலுள்ள நீரை உமிழ்வதும், செருப்பணிந்த காலுடன் திருக்கோயிலுக்குள் வருவதும் நமக்கு அருவருப்பை விளைவிக்கின்றன. அவைகளை இனி செய்யற்க. நமது அன்பன் சிவகோசரியார் வந்து பூசைசெய்யும் விதியையும் மதியையும் எனக்குப் பின் ஒளிந்திருந்து நீ தெரிந்துகொள்" என்று கூறியருளினாரில்லை. ஏன்? அன்பு மார்க்கத்துக்கு விதி மார்க்கத்தைக் காட்ட வேண்டியதன்று.

அன்பும் அறிவும் உடைய அருமை நேயர்கள் உற்று நோக்குமின்; சிவபெருமான் என்ன செய்தார்? விதி மார்க்கத்துக்கு அன்பு நெறியைக் காட்டுவாராகி, சிவகோசரியார் கனவிலே போய் உரைத்தருளுகின்றார்.

*"வன்திறல்வே டுவனென்று மற்றவனை நினையேல்"*
*அவனுடைய வடிவெல்லாம் நம்பக்கல் அன்பென்றும்*
*அவனுடைய அறிவெல்லாம் நமையறியும் அறிவென்றும்*

*அவனுடைய செயலெல்லாம் நமக்கினியன வாம் என்றும்*
*அவனுடைய நிலைஇவ்வா றறிநீஎன் றருள்செய்வார்.*

அன்பனே! திண்ணனாகிய அண்ணல் வேடன் வந்து என் மீதுள்ள பழைய மலர்களைச் செருப்பணிந்த காலால் நீக்குகின்றனன்; அது எனது இளங்குமரன் திருமுருகன் செய்ய திருவடியினும் சிறப்பாக நமக்கு இன்பத்தைத் தருகிறது.

*“விருப்புறுமன் பெனும்வெள்ளக் கால்பெருகிற் றெனவீழ்ந்த*
*செருப்படிஅவ் விளம்பருவச் சேயடியிற் சிறப்புடைத்தால்”*

அவன் நமக்கு நீராட்டும் பொருட்டு உமிழும் எச்சில் நீரானது கங்கை முதலிய புண்ணிய நீரினும் புனிதமானது.

*“ஒருமுனிவன் செவியுமிழும் உயர்கங்கை முதல்தீர்த்தப்*
*பொருபுனலின் எனக்கவன்றன் வாயுமிழும் புனல்புனிதம்”*

அவ்வேடர் கோமான் தனது அழுக்கடைந்த தலைமயிராகிய குடலையில் கொணர்ந்து நமக்கு அன்புடன் சூட்டும் மலர்களுக்கு மாலயனாதி வானவர்கள் மந்திரத்துடன் சூட்டும் மலர்கள் யாவும் இணையாகமாட்டா.

*“செம்மலர்மேல் அயனொடுமால் முதல்தேவர் வந்துபுனை*
*எம்மலரும் அவன்தலையால் இடுமலர்போல் எனக்கொவ்வா”*

அவன் “வெந்துளதோ” என்று மெல்ல கடித்தும், “சுவையுளதோ” என்று நாவினால் அதுக்கியும் பார்த்துப் படைத்த ஊனமுது வேள்வியின் அவியமுதினும் இனியதாகும்.

*“செய்யுமறை வேள்வியோர் முன்புதருந் திருந்தவியில்*
*எய்யும் வரிச் சிலையவன்தான் இட்டஊன் எனக்கினிய”*

முனிவர்கள் கூறும் வேதாகம மந்திரங்களிலும், அச்சிலை வேடன் நெக்குருகி அன்புடன் கூறும் கொச்சை மொழிகள் மிகவும் நன்றாக என் செவிக்கு இருக்கின்றன.

*“மன்பெருமா மறைமொழிகள் மாமுநிவர் மகிழ்ந்துரைக்கும்*
*இன்பமொழித் தோத்திரங்கள் மந்திரங்க ளியாவையினும்*
*முன்பிருந்து மற்றவன்தன் முகமலர அகநெகிழ்ந்த*
*அன்பில்நினைந் தெனையல்லால் அறிவுறா மொழிநல்ல”*

என்று சிவபெருமான் கூறியருளிய திருமொழிகள் கல்மனத்தையுங் கரைந்துருக்குவனவாம்.

சிவபெருமானை வழிபடுவதற்கு மலர்களே வேண்டுமென்பதில்லை. ஏதாவது ஒரு பச்சிலை போதும்.

*“போதும் பெறாவிடில் பச்சிலை யுண்டு”*
*“................................ பல் பச்சிலையால்*
*எண்ணுண்டு சாத்த எதிர்நிற்க ஈசன் இருக்கையிலே*
*மண்ணுண்டு போகுதையோ கெடு வீரிந்த மானிடமே”*

*-பட்டினத்தடிகள்-*

*“யாவர்க்கு மாம்இறை வர்க்கொரு பச்சிலை”*

*-திருமந்திரம்-*

மனிதன் எதை அறிகின்றானோ அதுவே அவனுக்குச் சொந்தம்.

பூவும் இலையும் எடுத்துப் பூசிப்போர் முறைப்படி நீராடி விடியற்காலையில் குடலையை நாபிக்குக் கீழ் தொங்கவிடாமல் உயர்த்திச் சிறையளி புகுதா முன்னம் நந்தனம் புக்கு பத்திர புட்பங்களை எடுக்க வேண்டும்.

அன்பு மார்க்கத்தில் நின்ற கண்ணப்பர், மலர்களையும் இலைகளையும் எடுத்துத் தன் தலைமயிராகிய குடலையில் வைத்துக்கொண்டு போயினார்.

***வாய்க்குள் எச்சிலுக்கும்:***

திருமஞ்சனத்துக்கு நீர் கொணர்வோர் எச்சில் தெறிக்குமென்று வாய்கட்டி குடத்தில் நீர் கொணர்வது மரபு. கண்ணப்பர் வாயில் நீரை முகர்ந்து கொண்டனர். அன்றியும் இறைவனுக்கு ஊனை மென்றும் தின்றும் சுவை பார்த்துக்கொண்டு போயினார். இந்த உயர்ந்த வழிபாட்டைப்பற்றி அன்பின் கருவூலமாகிய மாணிக்கவாசகனார் கூறுவதைக் காண்க.

*பொருட்பற்றிச் செய்கின்ற பூசனைகள் போல்விளங்கச்*
*செருப்புற்ற சீரடி வாய்க்கலச மூனமுதம்*
*விருப்புற்று வேடனார் சேடறிய மெய்குளிர்ந்தங்கு*
*அருட்பெற்று நின்றவா தோணோக்கம் ஆடாமோ"*

*"கூசாது வேட னுமிழ்தரு நீராடி யூனு ணெனுமுரை*
*கூறாம னீய அவனுகர் தருசேடங்*
*கோதாமெ னாம லமுதுசெய் வேதாக மாதி முதல் தரு*
*கோலாக நாத குறமகள் பெருமாளே"*

*-திருப்புகழ்-*

அன்பு அதிகப்பட்டுவிடுமானால் அன்புடையாருடைய எச்சில் அன்புடையாருக்கு அமிர்தமாகத் தோன்றுகின்றதன்றோ? அதுபோல், அன்பின் வடிவாகிய கண்ணப்பர் கொப்பளித்து உமிழ்ந்த நீர் மிகமிகப் புனிதமாகவும் குளிர்ச்சியாகவும் இறைவனுக்கு இன்பத்தை நல்கியது.

*"............................................ சிலைவேட்டுவனெச்*
*சிறுமிக்குமர வணிமுடியான்"*

என்று கந்தரந்தாதியிலும் எடுத்துப் பாராட்டுகின்றார்.

***வீக்கு பைச்சிலைக்கும்:***

கண்ணப்பர் இரவு வந்ததும் எம்பெருமானுக்கு விலங்குகளால் துன்பம் நேரும் என்று கருதி, விடியுமளவும் கண் இமைக்காது வில்லை வளைத்து இறைவன் அருகில் நின்றார்.

*"அவ்வழி அந்தி மாலை அணைதலும் இரவு சேரும்*
*வெவ்விலங் குளவென் றஞ்சி மெய்ம்மையின் வேறு கொள்ளாச்*
*செவ்விய அன்பு தாங்கித் திருக்கையில் சிலையுந் தாங்கி*
*மைவரை என்ன ஐயர் மருங்குநின் றகலா நின்றார்"*

சிறு துணிவு இல்லாத காரணத்தால் உலகில் பல திறமைகள் சிதறிப் போகின்றன.

கண்ணப்பருடைய அன்பு கடலினும் பெரியது. இமயமலையினும் உயர்ந்தது. எண்ணுதற்கரியது. உரைக்கும் அடங்காதது. திருஞானசம்பந்தர் தமது தேவாரப் பதிகத்தில் கண்ணப்பரது அருந்தொண்டினை வியந்து கூறியது ஈண்டு சிந்தித்தற்கரியது.

*"வாய்கலச மாகவழி பாடுசெயும் வேடன் மல ராகுநயனம்*
*காய்கணையி னாவிடந் தீசனடி கூடுகா ளத்திமலையே"*

கண்ணப்பனுடைய ஒப்பற்ற பெருமையை ஆதிசங்கரர் பின்வருமாறு கூறி மகிழ்கின்றார்.

சிவபெருமானுடைய திருமேனிக்கு வழிகளில் நடந்து தேய்ந்த பழஞ்செருப்பு புருவங்களின் நடுவிடம் போலாகிறது. கொப்பளித்த உமிழ்ந்த நீரானது கங்கை நீரால் ஆட்டியது போலாகிறது. சிறிது கடித்து எச்சில் செய்த இறைச்சித் துண்டுகள் புதிதான நைவேத்தியம் போலாகின்றன. வேடன் உயர்ந்த பக்த சிரேட்டனாக ஆகின்றான். ஆதலால், பக்தியானது எதைத்தான் செய்யாது?

"தொண்டு செய்து நாளாறில் கண்ணிடந்து அப்பவல்லேனல்லன்" என்று பாராட்டுகிறார் முற்றுந் துறந்த பட்டினத்தடிகள்.

## விதைப்பு

ஓர் உழவன் விதைநெல்லோடு வயலுக்குள் இறங்கினான். முதலில் வலப்புறமும் பின்னர் இடப்புறமுமாக நெல்மணிகளை விசிறினான்.

சில மணிகள் கடினமான ஒற்றையடிப் பாதையில் விழுந்தன அவை முளைக்கவில்லை. பறவைகள் அவற்றைப் பொறுக்கின. கடவுள் தம்மோடு பேசியபோதும் அவருக்குச் செவி சாய்க்காதவர்களைப் போன்றவை அவை!

சில விதைகள் கற்பாறைகள்மீது விழுந்தன. முளைக்கவும் செய்தன. ஆனால் வேர் கொள்ளவில்லை. வெய்யிலில் சிறிய முளைகள் கருகிப்போயின. கடவுள் உரையைக் கேட்டும் விரைவில் அதை மறந்துவிடுவோரைப் போன்றவை அவை!

சில மணிகள் முள்ளுப் பற்றைக்குள் விழுந்தன. அவை வளர்ந்து வரும்போது, முள்ளுச் செடிகளால் மூடுண்டு திணறிச் செத்தன. கடவுள் வாக்கைக் கேட்டு அதன்படி நடக்கச் சித்தம் கொண்ட சிலர், நாளடைவில் பொன், பொருள் இவற்றின் மீது கொண்ட ஆசையில் மயங்கி விடுகிறார்களே அவர்களைப் போன்றவை அவை!

ஆனால் பல விதைகள் பண்படுத்தப்பட்ட நல்ல மண்ணில் விழுந்தன. உயர வளர்ந்தன. கதிர் வந்து முற்றி மஞ்சள் நிறமாகிக் காற்றில் ஆடின. வயலைப் பார்த்தான் உழவன். விதைத்தவன் அவனேயாயினும் கடவுள் தந்த மழையும் வெய்யிலும் மண்ணுமே அச்செழிப்புக்குக் காரணம் என்பதை அவன் உணர்ந்தான். இவ்விதைகள் கடவுள் ஆணையைக்கேட்டு அதன்படி நடக்கும் மக்களைப் போன்றவை.

பூரண ஞானம் ஏற்படும்போது மனிதன் மௌனமாகிவிடுகிறான்.

உ

# துர்க்கா துரந்தரிக்கு சமர்ப்பணம்



## ஞான பண்டித கலாவித்தகி அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்

## 07.01.1925 - 15.06.2008

இன்று சைவ உலகிலே சமய சமூகப் பணிகள் பல்வேறு வகையிலும் மேம்பாடடைந்துகொண்டு வருகின்றது. அவ்வளர்ச்சிக்கு மனிதனை சிந்தித்து செயற்பட வைப்பதற்கு இறைவனால் ஆசீர்வதிக்கப்பட்ட ஒருசில அன்புள்ளங்களே காரணமாகும். அவ்வகையான அம்சமாகவே துர்க்கா துரந்தரி, ஞானபண்டித கலாவித்தகி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையார் விளங்கினார் என்றால் மிகையாகாது.

சைவ மக்களுக்கு சமய சமூக அறிவுத் துறைகளில் இவர் ஆற்றிவந்த பன்முகப்பட்ட சேவைகள் மக்கள் சேவைகளாகவே அமைந்திருப்பதனை நாம் கண்கூடாகக் காணலாம். இவர் தன்னால் இயன்ற வகையில் தான் ஆற்றும் பணிகளுக்கு ஆணிவேராக நின்று உழைத்தமை சைவ உலகிற்கே பெருமையைத் தேடித் தந்துள்ளது.

அன்னையவர்களின் இழப்பு சாதாரணமானதன்று. இனிவரும் காலங்களில் இவரைப்போன்று சைவ சமய அறப்பணிகள் பலவற்றையும் தன்னலம் கருதாது தூய நோக்கோடு முன்னெடுத்துச் செல்லக்கூடிய ஒருவரை நாம் இந்த உலகில் காண்பது அரிது. தொடர்ந்தும் அன்னையாற்றிய பணியினை தூயநோக்கோடு செயலாற்றுவதற்கு எல்லாம் வல்ல ஸ்ரீ துர்க்கை அம்பாளை வேண்டுதல் செய்வதோடு அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!


**சந்நிதியான் ஆச்சிரமம்**

உ

(தொடர்ச்சி...

# சந்நிதியான்

திரு ந. அரியரத்தினம் அவர்கள்



தனது தினப்பூசை நாளான 06.05.2007 ஞாயிற்றுக்கிழமை சாயரட்சைப் பூசையின்பொழுது ஆறுமுகசாமி ஐயர் சந்நிதியானுக்கு இராசவள்ளிக்கிழங்குக் களியினை நைவேத்தியமாகப் படைப் பதற்கு எல்லா ஆயத்தங்களையும் மேற் கொண்டிருந்தார்கள். இந்நிலையில் ஆறு முகசாமி ஐயருடைய மகள் விஜயதர்சினி சந்நிதியான் வெளிப்படுத்திய கனவினால் கட்டுண்டவராக அன்றைய சாயரட்சைப் பூசையின் பொழுது பிட்டினை நைவேத் தியமாகப் படைக்க வேண்டுமென்ற விருப் பத்தை தனது பெற்றோரிடம் வெளிப்படுத் தியிருந்ததை சென்ற மலரில் குறிப்பிட் டிருந்தோம்.

இந்த நிலையில் எதனை நைவேத் தியமாகப் படைப்பது என்று முடிபு எடுப் பதில் ஆறுமுகசாமி ஐயர் மட்டுமல்ல அவரது குடும்பத்தில் உள்ளவர்கள் அனை வருமே குழப்பத்துடன்தான் காணப்பட்ட னர். உண்மையில் சந்நிதியான் மீது கொண்ட பக்தியினால் எதனை நைவேத் தியமாகப் படைக்க வேண்டுமென்பதில் தந்தைக்கும் மகளுக்கும் ஒருவித போட்டி நிலவியதென்றே கூறவேண்டும். இரு வருடைய விருப்பங்களிலும் எதனை நிறைவேற்றுவது எதனை நிராகரிப்பது என்று முடிபு எடுக்கமுடியாத நிலையில் அவர்கள் காணப்பட்டனர்.

தந்தைக்கும் மகளுக்கும் இடையே ஏற்பட்ட இந்தப் போட்டியில் சந்நிதியான் யாருடைய விருப்பத்தை நிறைவேற்ற சித் தம் கொண்டுள்ளான் என்பதைத் தெரிந்து கொள்ள அந்தக் குடும்பத்தில் உள்ளவர் களே ஆவலுடன் எதிர்பார்த்திருக்கும் ஒரு சூழ்நிலை அங்கே நிலவியது.

ஆறுமுகசாமி ஐயர் அவர்கள் தற்பொழுது வாழ்ந்துகொண்டிருக்கின்ற பூசகர்களில் மூத்த பூசகர் ஆவார். ஏதோ ஒன்றினை நைவேத்தியமாகப் படைப்பது

பணம் எவனுக்கு அடிமையோ அவன்தான் உண்மையான மனிதன்.

என்று இல்லாமல் சந்நிதியான்மீது கொண்டுள்ள ஆழமான பக்தியின் வெளிப்பாட்டினால் சுவை நிறைந்த இராசவள்ளிக் கிழங்குக் களியினை நைவேத்தியமாகப் படைக்க விரும்பியது மட்டுமன்றி அதனை எப்படியும் நிறைவேற்றிவிட வேண்டுமென்று மனம் தளராது செயற்படுவதை நாம் பார்க்கின்றோம். இரண்டு நாள் உடுப்பிட்டிச் சந்தைக்கு சென்றும் இராசவள்ளிக்கிழங்கு கிடைக்காத நிலையில், இருக்கின்ற ஒரு நாள் இடைவெளியில் நெல்லியடிச் சந்தையிலேனும் அதனை வாங்குவதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுகின்றார்கள். உண்மையில் சந்நிதியான்மீது கொண்டுள்ள ஆழமான பக்தியின் ஒரு உச்சமான வெளிப்பாட்டை இங்கே நாம் காணமுடிகிறது.

அவருடைய இரண்டாவது மகள் விஜயதர்சினி சந்நிதியானைத் தினமும் உள்ளத்தில் நிறுத்தி அழகான பூமாலை தொடுத்து சந்நிதியானைப் பூசிக்கின்ற வஞ்சகமில்லா உள்ளங்கொண்ட இள வயது நங்கை. சந்நிதியான் வெளிப்படுத்திய கனவினால் கட்டுண்டு அதனை எப்படியும் நிறைவேற்றிவிட வேண்டுமென்று விரும்பி அதனைத் தனது பெற்றோருக்கும் வெளிப்படுத்தி அதற்காக ஆவலுடன் எதிர்பார்த்திருப்பதைப் பார்க்கின்றோம்.

சந்நிதியான் தனக்குப் பசிக்கிறதென்றும் அந்தப் பசியைப் போக்குமாறு கேட்டுக்கொண்டதுடன் தனக்குப் பிட்டு விருப்பமாக இருக்கிறதென்று தனது விருப்பத்தையும் வெளிப்படுத்திய நிகழ்வு அங்கே நடந்தேறுகிறது. இதனால்தான் விஜயதர்சினி சந்நிதியானுக்கு விருப்பமான பிட்டை நைவேத்தியமாகப் படைத்து அவனது பசியைப் போக்கவேண்டுமென்று விருப்பம் கொள்ளுகின்றார். அதுவும் தன்னுடைய தந்தையாருடைய தினப் பூசை நடைபெற இருக்கின்ற இந்தச் சந்தர்ப்பத்தில் தன்னிடம் சந்நிதியான் அதனை வெளிப்படுத்தியமையால் எப்படியும் நிறைவேற்றிவிடலாமென்ற உளப்பூர்வமான விருப்பம் அவருக்கு ஏற்படுகின்றது.

மகள் விஜயதர்சினியினுடைய இத்தகைய நிலைப்பாடுகளை எல்லாம் ஆறுமுகசாமி ஐயர் நன்கு புரிந்துகொண்டு தான் இருந்தார்கள். அதேநேரம் நீண்டநாட்களுக்கு முன்பிருந்தே தான் கொண்டிருந்த விருப்பத்தையும் அதற்காக தான் மேற்கொண்டுள்ள முயற்சிகளையும் இன்னொரு பக்கம் சிந்தித்துப் பார்த்தார்கள். இவ்வாறு தங்கள் இருவரது நிலைப்பாடுகளையும் சீர்தூக்கிப் பார்த்த ஆறுமுகசாமி ஐயர் அவர்கள் இது சந்நிதியானது திருவிளையாடல் என்பதை நன்கு உணர்ந்துகொண்டார்கள். ஆகவே சந்நிதியானது திருவுள்ளம் எதுவோ அதுவே நிறைவேறும் என அவர் புரிந்துகொண்டார். இதனால்த்தான் இத்தகைய எதிர்பார்ப்புக்கள் ஆதங்கங்கள் மத்தியிலும் ஆறுமுகசாமி ஐயர் அமைதியாகவும் மௌனமாகவும் தனது தினப்பூசைக்குரிய ஏனைய செயற்பாடுகளில் இயல்பாக ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள்.

05.05.2007 சனிக்கிழமை நேரம் காலை 9.30மணியை நெருங்கிக் கொண்டிருந்தது. பழனிகடை உரிமையாளர் நெல்லியடிச் சந்தையிலிருந்து திரும்பி வருகின்ற நேரத்தை நெருங்கிவிட்டதனால் பழனிகடைக்கு சென்று தான் வாங்கி வருமாறு கூறியிருந்த இராசவள்ளிக் கிழங்கினைப் பெற்றுக்கொள்வதற்காக ஆறுமுகசாமி ஐயர் புறப்படுவதற்கு ஆயத்தமானார்கள். தற்பொழுது நேரம் காலை 10.00 மணியை அண்மித்துக்

கொண்டிருந்தது. ஆறுமுகசாமி ஐயர் பழனிகடையைச் சென்றடைந்தார்கள். அங்கே கடை உரிமையாளர் திரு பழனி வேல் அவர்கள் வழமைபோல தான் வாங்கிவந்த மரக்கறிச் சாமான்களை தனது கடையிலிருந்து வேறுவேறாகப் பிரித்துக் கொண்டிருந்தார்கள்.

ஆறுமுகசாமி ஐயரைக் கண்ட தும் பழனிகடை உரிமையாளர் திரு பழனிவேல் அவர்கள் "ஐயா வாருங்கோ நீங்க சொன்ன கிழங்கை நெல்லியடிச் சந்தை முழுவதும் தேடிப்பார்த்தனான். அங்கை ஒருத்தரட்டையும் அது இல்லை ஐயா. அதனால அதை வாங்க முடிய வில்லை" என்று கவலையுடன் எடுத்துக் கூறினார்கள்.

ஆறுமுகசாமி ஐயர் தனக்கும் தனது மகள் விஜயதர்சினிக்கும் இடை யில் நடைபெற்ற போட்டியில் மகள் விஜயதர்சினியை சந்நிதியான் தனது திருவிளையாடல்மூலம் வெற்றியடையச் செய்துவிட்டான் என்பதை இப்பொழுது தெளிவாக உணர்ந்துகொண்டார்கள்.

இவ்வாறு சந்நிதியானது திருவுள் ளத்தை நன்கு தெரிந்துகொண்டதனால் மகள் விஜயதர்சினி கேட்டுக்கொண்டது போலவே சந்நிதியான் கனவில் வெளிப் படுத்திய அந்தப் பிட்டை தந்தையும் மகளும் ஒரே மனதுடன் நைவேத்திய மாகப் படைத்தனர். அதுவும் சாதாரண பிட்டாக இல்லாமல் மிகவும் சுவை நிறைந்த பிட்டு படைக்கப்பட்டது. மகள் விஜயதர்சினி விரும்பியதைவிட இன்னு மொருபடி உயர்வாகவே அந்தப்பிட்டு ஆறுமுகசாமி ஐயரால் தயாரிக்கப் பட்டது. ஆம் வெங்காயம், மிளகாய் என்பவற்றை சிறிதுசிறிதாக அரிந்து அவற்றினையும் பிட்டுக்குள் கலந்து அவித்த உறைப்புச்சுவை நிறைந்த அந்தப்பிட்டு சந்நிதியானுக்கு நைவேத்திய மாகப் படைக்கப்பட்டது.

சந்நிதிமுருகன் மருதர் கதிர் காமரை ஆட்கொண்டு தனக்கும் தன் னுடன் வருகின்ற அறுபத்து மூவருக்கும் அமுதுபடைக்குமாறு கேட்டுக்கொண்டார் கள். அதுபோலவே இன்றும் அந்த மருதர் கதிர்காமர் பரம்பரையில் செயற்பட்டுக் கொண்டிருக்கின்ற அந்தப் பூசகர்களிடம் கனவுகள் காட்சிகளை வெளிப்படுத்தி தனது விருப்பங்கள் தேவைகளை நிறைவு செய்கின்ற கலியுகக்கந்தனாக சந்நிதியான் திருவிளையாடல்களைப் புரிந்தவண்ணம் உள்ளான்.

ஓம் முருகா!

---

**சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னப்பணிக்கும் மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப்பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர் கீழே உள்ள முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.**

| காசுக்கட்டளை | காசோலை |
|---|---|
| செ. மோகனதாஸ் | செ. மோகனதாஸ் |
| சந்நிதியான் ஆச்சிரமம், | க. இல. 7342444 |
| தொண்டைமானாறு. | இலங்கை வங்கி, |
| T.P.NO. 021-2263406 | பருத்தித்துறை. |
| 060-2219599 | |

**www. sannithiyan. org**

உ

# அருணகிரிநாத சுவாமி விழா– 2008

சந்நிதியான் ஆச்சிரமத்தால் மேற்கொள்ளப்படும் விழாக்களில் அருணகிரிநாதர் விழாவும் குறிப்பிடத்தக்கது. இவ்விழாவானது வருடாவருடம் யாழ்ப்பாணம் புதிய விஞ்ஞானக்கல்வி நிலையத்தின் அனுசரனையுடன் நடைபெறும்.

மேற்படி குருபூசை நிகழ்வு 20.06.2008 வெள்ளிக்கிழமை காலை வழமைபோல ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் நடைபெற்ற விஷேட அபிஷேக பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து ஆச்சிரம மண்டபத்தில் அமைதியாகவும், பக்திபூர்வமாகவும் ஆரம்பமாகியது.

இவ்விழாவின் ஆரம்ப நிகழ்வாக கலாபூஷணம் இசைமணி வ. செல்லத்துரை அவர்களால் திருப்புகழ் பாக்கள், அடியார்கள் மெய்ம்மறந்து இரசிக்கும் வண்ணம் பக்கவாத்திய சகிதம் பாடப்பட்டது.

இதனைத் தொடர்ந்து சிறப்புரை ஆற்றவந்த வல்வை சிவகுரு வித்தியசாலை அதிபரும், ஆச்சிரமத்தின் சகல பணிகளுக்கும் ஒத்துழைப்பு வழங்குபவருமாகிய திரு ஆ. சிவநாதன் அவர்கள் "ஆறுமுகமான பொருள்" எனும் விடயம் பற்றி சிறப்புரை ஆற்றினார்.

அவர்தம் உரையின்போது, அருணகிரிநாத சுவாமிகளின் வாழ்க்கை வரலாற்றையும் உரைத்ததோடு அவரது வரலாற்றின்மூலம் மனிதராகிய நாம் பலவிதமான படிப்பினைகளைக் கற்றுக்கொள்ளவேண்டியதன் அவசியத்தையும் பல எடுத்துக்காட்டுக்கள்மூலம் விளக்கிக் கூறினார்கள்.

நிகழ்வின் இறுதியாக கூடியிருந்த அடியார்களின் பஜனை வழிபாடும் இடம்பெற்றன. மேற்படி இவ்விழா ஆச்சிரமத்தினால் மேற்கொள்வதற்கு காரணமாயிருந்த திரு சிவத்தமிழ் வித்தகர் சிவ மகாலிங்கம் அவர்கட்கு அவரோடு கரணவாயைச் சேர்ந்த திரு ம. கதிரிப்பிள்ளை அவர்கட்கும், இந்நிகழ்வினை முன்னெடுத்துச் செல்வதற்கு வழிகோலிவரும் புதிய விஞ்ஞானக்கல்வி நிலைய நிர்வாகிக்கும் நன்றி தெரிவித்ததோடு இவ்விழா தொடர்ந்தும் நடைபெற வேற்பெருமான் அருள்வேண்டி அன்றைய நிகழ்வு சிறப்புற முற்றுப்பெற்றது.

அதனைத் தொடர்ந்து வழமைபோன்று வெள்ளிக்கிழமை நடைபெறும் அறுபத்துமூவர் குருபூசையும் இடம்பெற்றது.

உ

(தொடர்ச்சி...

# 2007ஆம் ஆண்டு உற்சவம் தொடக்கம் நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம்

| | | |
|---|---|---|
| Dr சின்னத்தம்பி மூலம் M. பிரதீபன், M. லக்ஷின் நெதர்லாந்து | | 5000. 00 |
| S. வசந்தி | ஊரெழு கிழக்கு | 1500. 00 |
| சச்சியா இரும்பகம் | வட்டுக்கோட்டை | 1மூடை அரிசி |
| பாலன் மில் | வட்டுக்கோட்டை | 20k. அரிசி |
| திருமதி வே. ஈஸ்வரி | கரணவாய் கிழக்கு | 10000. 00 |
| மு. அருட்செல்வி | தோப்பு அச்சுவேலி | 5000. 00 |
| சுந்தரலிங்கம் அன்னம்மா | | 2000. 00 |
| ந. குமாரதாசன், ந. தையல்நாயகி நினைவு நி. விநாயகமூர்த்தி கோப்பாய் | | 3000. 00 |
| திருமதி செல்வராஜன் | டென்மார்க் | 2000. 00 |
| S. ரூபபாலன் காசிப்பிள்ளையார் கோவிலடி தெல்லிப்பளை | | 2000. 00 |
| ப. கதிர்காமநாதன் குரும்பைகட்டி புலோலி | | 10000. 00 |
| சி. தர்மலிங்கம் மூலம் கா. நந்தகோபன் அவுஸ்திரேலியா | | 5000. 00 |
| சு. சுரேந்திரரத்தினம் டச்வீதி | கோப்பாய் தெற்கு | 5000. 00 |
| சி. விதுஷணசர்மா | நாகர்கோவில் | 5000. 00 |
| திருமதி பொ. இரத்தினசோதி | கதிரவேற்பிள்ளை வீதி தம்பசெட்டி | 14000. 00 |
| அ. சாவித்திரி அம்மா தும்பளை | பருத்தித்துறை | 2000. 00 |
| ஞானசௌந்தரி | அளவெட்டி | 500. 00 |
| சுகன்யா சுதாகரன் | அளவெட்டி | 5000. 00 |
| கனகரெத்தினம் சண்முகசுந்தரம் குடும்பம் அமெரிக்கா | | 10000. 00 |
| அருளப்பா சிவஞானம் குடும்பம் | அமெரிக்கா | 10000. 00 |
| R. மணிவாசகன் | அவுஸ்திரேலியா | 10000. 00 |
| தர்ஷினி மகேந்திரம் | திருநெல்வேலி | 2000. 00 |
| அ. சக்திவேல் நாவலர்வீதி | யாழ்ப்பாணம் | 3000. 00 |
| செ. அரியானந்தம் வன்னியசிங்கம் வீதி | தாவடி | 2000. 00 |
| விவேகானந்தராசா | சித்தங்கேணி | 500. 00 |
| தேவந்தி சந்திரப்பிரகாசம் | ஆத்தியடி பருத்தித்துறை | 5000. 00 |
| சி. நவநீதன், சி. நந்தகுமார் | அளவெட்டி | 2000. 00 |
| க. இரத்தினம் G.S | கரணவாய் | 1000. 00 |
| T. ரெட்ணசபாபதி புலவனார் வீதி | கல்வியங்காடு | 5000. 00 |
| வே. செல்வராசா வண்ணங்கிராஞ்சி | துன்னாலை தெற்கு | 1000. 00 |
| சி. கதிர்காமநாதன் (அவுஸ்திரேலியா) நவிண்டில் | | 5000. 00 |
| க. முத்துவேலு ஆசிரியர் | இமையாணன் உடுப்பிட்டி | 1000. 00 |
| சி. சிறிஸ்கந்தராசா | நவிண்டில் | 3000. 00 |
| ஐ. வேலாயுதர் | கோப்பாய் | 1000. 00 |

பறவையும் துறவியும் நாளைக்கு என்று ஒன்றையும் சேகரித்து வைப்பதில்லை.

| | | | |
|---|---|---|---|
| தாமோதரம்பிள்ளை கோகிலவதனி | மாதகல் கிழக்கு | | 10000. 00 |
| செல்வமாணிக்கம் தாட்ஷாயினி | உடுப்பிட்டி | | 5000. 00 |
| Dr G. பவானி மகப்பேற்று நிபுணர் | யாழ்ப்பாணம் | | 20000. 00 |
| S. சிறீரங்கநாயகி தாதி உத்தியோகத்தர் | யாழ்ப்பாணம் | | 2000. 00 |
| தி. தவபாக்கியராசா | அச்சுவேலி | பொருட்கள் வகை | 10000. 00 |
| சு. சிவனேசராசன் ஆசிரியர் | கோப்பாய் வடக்கு | | 1000. 00 |
| T.M. வேதாரணியம் ஆசிரியர் | கரணவாய் | | 600. 00 |
| N. கருணாநிதி | லண்டன் | | 3000. 00 |
| திரு சுந்தரலிங்கம் | நீர்வேலி மேற்கு | | 1000. 00 |
| பி. நகுலேந்திரன் குடும்பம் | நவாலி | | 2000. 00 |
| வே. முருகையா | கொழும்பு | | 1000. 00 |
| சிவகுரு பேரம்பலம் | வெள்ளவத்தை | | 1000. 00 |
| சீதா வேலுப்பிள்ளை | உடுப்பிட்டி | | 4000. 00 |
| செல்வி அ. கந்தையா | யாழ்ப்பாணம் | | 2000. 00 |
| விக்னேஸ்வரமூர்த்தி சிந்துஷன் (லண்டன்) | அச்சுவேலி | | 2000. 00 |
| சி. கிருபாகரன் | அச்சுவேலி | | 2000. 00 |
| சண் கந்தையா | மூளாய் | 1மூடை அரிசி | 2000. 00 |
| இ. திருநாவுக்கரசு | நீர்வேலி | 30k அரிசி | 1000. 00 |
| S. மாணிக்கவாசகர் மூலம் (அச்சுவேலி வடக்கு) | | | |
| சுசீந்திரன் சுரேக்கா | கனடா | | 70000. 00 |
| ஸ்ரீ கிருஸ்ணமேனன் சுஜிதா | லண்டன் | | 15000. 00 |
| ந. ஜவர்கர்லால்நேரு | லண்டன் | | 80000. 00 |
| T. குகன் இராமநாதன் வீதி | யாழ்ப்பாணம் | | 3000. 00 |
| N. சிவராசா கொட்டேனா | கொழும்பு | | 1000. 00 |
| சி. குமாரசாமி ஆசிரியர் நினைவு | பத்தமேனி | | 1000. 00 |
| லவன் குடும்பம் | பத்தமேனி | | 2000. 00 |
| பிரபாகரக் குருக்கள் | யாழ்ப்பாணம் | | 500. 00 |
| வை. துரைராசா ஒஸ்காவீதி | உரும்பராய் | 1மூடை அரிசி | 2500. 00 |
| தேவதாஸ் பராசக்தி சம்பியன்லேன் | கொக்குவில் | | 1000. 00 |
| தவராசா தங்கராணி (சுவிஸ்) | மயிலங்காடு | | 5000. 00 |
| வை.க. சிற்றம்பலம் ஆசிரியர் | கொக்குவில் | | 1000. 00 |
| சி. சிவஞானராசா ஆசிரியர் குடும்பம் | கொக்குவில் | | 1000. 00 |
| சுந்தரமூர்த்தி குடும்பம் யாமாவளவு | தெல்லிப்பளை | | 2500. 00 |
| சுப்பராங் தொலைத்தொடர்பு | கதிரிப்பாய் | | 1மூடை அரிசி |
| முருகவேள் குகேசன் குடும்பம் | வல்வெட்டித்துறை | | 10000. 00 |
| சண்முகலிங்கம் இராசலெட்சுமி | இணுவில் | | 1மூடை அரிசி |
| செல்லையா ரீச்சர் பெற்றோல் செட் | புன்னாலைக்கட்டுவன் வடக்கு | | 3000. 00 |

(தொடரும்....

நல்லவற்றையே கேட்காதவன்தான் செவிடன்.

உ

தமிழகத் திருக்கோயில் வரிசை:

# திருச்செங்காட்டங்குடி

*திரு வல்லையூர் அப்பாண்ணா அவர்கள்*

திருவாரூர்- திருமருகல் சாலையில் "செங்காட்டங்குடி" என்கிற பெயர்ப் பலகை உள்ள இடத்திலிருந்து மூன்று கி.மீ தூரத்தில் வருகிறது இத்தலம். விநாயகர் கஜமுகாசூரனைக் கொன்றபோது அவனது உடற்குருதி நிலமெங்கும் படிந்து அப்பகுதி செங்காடாக மாறியதால் "செங்காட்டங்குடி" எனப்பெயர் வந்தது. போரில் கஜமுகனைக் கொன்ற பழிதீர விநாயகர் இறைவனை வழிபட்ட ஸ்தலமாகையால் "கணபதீச்சுரம்" என்றும் பெயர் பெற்றது.

இறைவன் பைரவ வேடத்தில் வந்து, சிறுத்தொண்டரிடம் பிள்ளைக்கறியமுது கேட்டு அவருக்கும், அவர் மனைவி திருவெண்காட்டு நங்கை, மகன் சீராளன், வேலைக்காரி சந்தனத்தி ஆகியோருக்கும் அருள்புரிந்த புண்ணிய ஸ்தலம்.

ஊரின் நடுவே காணப்படும் இத்தலம் ஐந்து நிலைகள்கொண்ட இராஜ கோபுரத்தைக் கொண்டது. பரஞ்சோதியார் (சிறுத்தொண்டர்) பல்லவ மன்னனின் தளபதியாக வாதாபி சென்று சாணக்கியரோடு போர்செய்து வெற்றிவாகை சூடி வந்தபோது கொண்டுவந்த "வாதாபி கணபதி" உள்ளே பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

இறைவன்: உருத்திராபதீஸ்வரர். இறைவி: திருக்குழல்நாயகி. உள்ளே வலதுபக்கமாக அம்பிகை நின்ற கோலத்தில் அருள்பாலிக்கிறார். மறுபக்கத்தில் கல்லில் வடித்துள்ள பிச்சாடனர் வேடத்தில் இறைவன். இறைவன் அருள்பெற்ற சிறுத்தொண்டரதும் ஏனையோரதும் திருவுருவங்கள், அறுபத்துமூவர், மற்றும் பரிவார மூர்த்திகள் ஆகியோரதும் திருவுருவங்கள் பிரகாரத்தில் காணப்படுகின்றன.

பிரகாரத்தில் ஒரு அத்திமரம். அதன்கீழ் பைரவ வேடத்தில் பிள்ளைக்கறி கேட்ட இறைவனதும், உணவு உண்ண வருமாறு அழைக்கும் கோலத்தில் சிறுத்தொண்டரதும் சிற்பங்கள் காணப்படுகின்றன.

மேற்கு வீதியில் சிறுத்தொண்டர் திருமடம் உள்ளது. இத்திருமடத்தில் ஆண்டுதோறும் சித்திரைப் பரணியில் உருத்திராபதீஸ்வரருக்கு சிறுத்தொண்டர் அளித்த பிள்ளைக்கறி அமுது செய்த விழா நிகழ்கிறது. மாவுடன் சில மூலிகை மருந்துகளும் சேர்த்து செய்யப்படும் பிள்ளைக்கறி பிரசாதம் வழங்கும் வைபவம் "அமுது படையல் விழா" என வழங்கப்படுகிறது.

*பி.கு:* இறைவன் சிறுத்தொண்டரிடம் "பிள்ளைக்கறி" கேட்டு திருவிளையாடல் புரிந்த இடம்.

"பைங்கோட்டு மலர்ப்புன்னைப் பறவைகாள் பயப்பூரச்
சங்காட்டந்த விர்த்தென்னைத் தவிராநோய் தந்தானே
செங்காட்டங் குடிமேய சிறுத் தொண்டன் பணிசெய்ய
வெங்காட்டுள் அனலேந்தி விளையாடும் பெருமானே"

சம்பந்தர்.

முதுமை வருவதற்கு முன்னர் இறைவனை உணரவேண்டும்.

# திருமருகல்

திருவாரூர்- மயிலாடுதுறை சாலையில் இடையே உள்ள ஸ்தலம் திருமருகல். "மருகல்" என்பது ஒருவகை வாழை. அதுவே ஸ்தலவிருட்சமாதலால் இத்தலம் திருமருகல் எனப்பட்டது. கோச்செங்கட் சோழன் கட்டிய கோயில்களில் இதுவும் ஒன்று.

கோயிலுக்கு அருகே இருந்த மடத்தில், பாம்பு தீண்டி இறந்த செட்டி மகனை, ஞானசம்பந்தர் "சடையாயெனுமால்" பதிகம்பாடி உயிர்பெற்று எழுப்பியருளிய ஸ்தலம் இது. இந்த வரலாற்றினை பெரியபுராணத்தில் சேக்கிழார் பெருமான் மிகச் சிறப்பித்துப் பாடியுள்ளார். இந்த வரலாற்றுச் சிற்பம் இராசகோபுரத்திலும் இடம்பெற்றுள்ளது.

ஐந்து நிலைகள் கொண்ட இராசகோபுரம். கோபுரம் தாண்டி உள்ளே போனால் வன்னிமரம். அதன் அருகே ஒரு மேடை காணப்படுகிறது. இந்த மேடையிற்றான் பாம்பு தீண்டி எழுந்த செட்டி மகனுக்கும், செட்டிப் பெண்ணுக்கும், திருஞானசம்பந்தர் திருமணத்தினை நடாத்தி வைத்ததாக ஸ்தலபுராணம் கூறுகிறது.

இறைவன்: மாணிக்கவண்ணன். இறைவி: வட்டுவார்குழலி. கொடிமரம், பலிபீடம், நந்தி இவைகளைத் தாண்டி உள்ளே போனால் நேரே கருவறை. மூலவர் சுயம்பு திருமேனியாக லிங்கவடிவில் கிழக்கு நோக்கியபடி உள்ளார். சதுர ஆவுடையார் பகுதி. "மடையார் குவளை மலரும் மருகல் உடைய" பெருமானை மனதாரத்தொழுது வணங்குகிறோம்.

உட்பிரகாரத்தில் அறுபத்துமூவர் சந்நிதி உட்பட நவக்கிரகம், பைரவர், சூரியன் மற்றும் பரிவாரத் திருமேனிகளுடன் செட்டி மகன்- செட்டி பெண்- ஞானசம்பந்தர் மூலத் திருமேனிகளும் காணப்படுகின்றன. அம்பாள் சந்நிதிக்கு எதிரே, தெற்கு வீதியின் கடைசியில் "விடம் தீர்த்த விநாயகர்" அமர்ந்திருக்கிறார். அருகே ஒரு பழைய மடம். இங்குதான் செட்டிமகன் விடம் தீண்டப்பெற்ற இடமாகும். இங்கு பொதுவாக பாம்பு கடிப்பதில்லை என்றும், அப்படிக் கடித்தாலும் ஒருவரும் இறப்பதில்லை என்பதும் ஒரு ஐதீகமாக உள்ளது.

சித்திரைப் பெருவிழாவின் ஏழாம் திருவிழா செட்டி மகன்- செட்டிப் பெண் திருக்கல்யாண உற்சவத் திருவிழாவாக நடைபெறுகிறது.

"விடம் தீர்த்த விநாயகரின்" இருபுறமும் உள்ள விநாயகர்கள் சீராளன் (சிறுத்தொண்டர் மகன்) வழிபட்டவை என்று சொல்லப்படுகிறது. முன்பு மடமாக இருந்த இடம் இப்போ அலுவலகமாக உள்ளது. இந்தப் பகுதிதான் சீராளன் படித்த இடம் என்றும், இதன் பின்புறம் உள்ள குளம் "சீராளன் குளம்" என்று இன்றும் வழங்கப்படுகிறது. (இத்தலத்திற்கு மிக அருகிலேயே உள்ள ஸ்தலம் திருச்செங்காட்டங் குடியாகையினாலும், சீராளன் சிறுத்தொண்டர் மகனாதலாலும் மேலே தரப்பட்ட தகவல்கள் பொருத்தமானவையாகவே உள்ளன)

கடன்பட்டோர் நெஞ்சம் எப்பொழுதும் கலக்கத்தில் இருக்கும்.

*பி.கு:* பாம்பு தீண்டிய செட்டி மகனை திருஞானசம்பந்தர் 'சடையாயெனுமால்' தேவாரம் பாடி உயிர்ப்பித்து, அவனுக்கும் செட்டிப் பெண்ணுக்கும் திருமணம் செய்து வைத்த புண்ணிய ஸ்தலம்.

"சடையாய் எனுமால் சரண் நீ எனுமால்
விடையாய் எனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவள் உள்மெலிவே"

சம்பந்தர்.

---

## எந்நிதியும் ஈயும் எமக்கு

பள்ளி விடுமுறையில் பெற்றா ருடனிருக்கத்
துள்ளிவந்த வர்மனுடன் சேர்ந்துமே - வள்ளிபங்கன்
சந்நிதிக் கோயிலண்டை சார்ந்தநல் லாச்சிரமம்
வந்தோம் ஒருக்கால் விரும்பி

எம்மைத் தெரியாதென் றாலும் சுவாமியார்
தம்மிடம் விட்டெழுந்தார் சால்புடனாம் - நாமிருவர்
நன்றாய் நயந்தோம் நலமுசாவித் தேநீரும்
நன்பழமும் தந்தார் நமக்கு

நல்லுப சாரமும் நாட்டும் பணியுமெலாம்
எல்லாரும் செய்வாரோ என்றமைய - வல்லாரும்
வேல்முருகன் பாதம் வணங்கி விருந்தார்ந்து
செல்வீ ரெனப்பணித்தார் சேர்ந்து

அன்னதானஞ் செய்வதோ டான பணிகளும்
என்ன வெனநாளும் ஓர்ந்திடலாம் - மின்னுலகில்
சந்நிதியான் பேரிலே சாற்றும் பெரும்பணியோ
எந்நிதியு மீயு மெமக்கு

வாழ்கநும் ஆச்சிரமம் வாழ்கநும் தொண்டெலாம்
வாழ்கநன் மக்களும் வாழ்கவே - வாழுலகில்
சந்நிதியான் பேர்சொல்லிச் சந்நிதிக்கு வந்தார்க்கே
எந்நிதியு மாகு மியைந்து.

*பண்டிதர் ம.ந. கடம்பேசுவரன் அவர்கள்*

---

நல்லவற்றையே கேட்காதவன்தான் செவிடன்.

உ

# ஆடிமாத வாராந்த நிகழ்வுகள்

04-07-2008 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்
விடயம்:- "சேக்கிழார் போற்றும் மகளிர்"
வழங்குபவர்:- செஞ்சொற் செம்மல் இரா. கேதீசன் அவர்கள்

---

11-07-2008 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்
பாடசாலை மாணவர்கள் நிகழ்வு
(யா/ தொண்டைமானாறு வீ.ம. வித்தியாலயம்)

---

18-07-2008 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்
சொற்பொழிவு:- "பெரியபுராணம்" (தொடர்)
வழங்குபவர்:- அ. குமாரவேல் அவர்கள்
(சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ் கல்லூரி வட்டுக்கோட்டை)

---

25-07-2008 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

## ஞானச்சுடர் 127ஆவது மாத வெளியீடு

## ஆடி - 2008

வெளியீட்டுரை:- திருமதி புனிதவதி சண்முகலிங்கம் அவர்கள்
(ஆசிரியர்)
மதிப்பீட்டுரை:- திருமதி கௌரி சுரேசன் அவர்கள்
(விரிவுரையாளர் யாழ் தேசியக் கல்வியியற் கல்லூரி)

பதிவு இல. Q.D/60/NEWS/2008

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த நிகழ்வுகள் 2008

## ஜனவரி

01.01.2008 மார்கழி 16 செவ்வாய்
மங்களப்புத்தாண்டு ஆரம்பம்
15.01.2008தை 1 செவ்வாய்
தைப்பொங்கள்
18.01.2008தை 4 வெள்ளி
கார்த்திகை விரதம் விசேட உற்சவம்
22.01.2008தை 8 செவ்வாய்
தைப்பூசம் விசேட உற்சவம் பகல்

## பெப்ரவரி

14.02.2008மாசி 2 வியாழன்
கார்த்திகை உற்சவம்
21.02.2008 மாசி 9 வியாழன்
மாசி மகம்

## மார்ச்

06.03.2008மாசி 23 வியாழன்
மகாசிவராத்திரி விரதம்
விசேட உற்சவம் மாலை 7 மணி
12.03.2008மாசி 29 புதன்
கார்த்திகை உற்சவம்
18.03.2008பங்குனி 5 செவ்வாய்
வருடாந்த சகஸ்ர மகாசங்காபிஷேகம்
காலை 8 மணி சங்குப்பூஜை
பகல் 10 மணி சங்காபிஷேகம்
பகல் 11 மணி சண்முக அர்ச்சனை
பகல் 12 மணி விசேட உற்சவம்
21.03.2008பங்குனி 8 வெள்ளி
பங்குனி உத்தரம்
வைரவப் பெருமாள் கும்பாபிஷேக தினம்

## ஏப்ரல்

07.04.2008பங்குனி 25 திங்கள்
ஆலய கும்பாபிஷேக தினம்
சகஸ்ர மகாசங்காபிஷேகம்
காலை 8 மணி சங்குப்பூஜை
பகல் 10 மணி சங்காபிஷேகம்
பகல் 11 மணி சண்முக அர்ச்சனை
பகல் 12 மணி விசேட உற்சவம்
09.04.2008பங்குனி 27 புதன்
பகல் 10 மணி கார்த்திகை உற்சவம்
13.04.2008சித்திரை 1 ஞாயிறு
தமிழ் இந்துப் புத்தாண்டு (சர்வதாரி)
மாலை 6.30 விசேட உற்சவம்
22.04.2008 சித்திரை 8 ஞாயிறு
சித்திரா பூரணை

## மே

06.05.2008 சித்திரை 24 செவ்வாய்
பகல் 10 மணி கார்த்திகை உற்சவம்
19.05.2008 வைகாசி 6 திங்கள்
வைகாசி விசாகம், விசேஷட உற்சவம்

## ஜூன்

02.06.2008 வைகாசி 20 திங்கள்
கார்த்திகை உற்சவம்
30.06.2008 ஆனி 16 திங்கள்
கார்த்திகை உற்சவம்

## ஜூலை

03.07.2008 ஆனி 19 வியாழன்
கதிர்காமம் கொடி, பயணப்பூஜை
07.07.2008 ஆனி 23 திங்கள்
தீர்த்தமெடுப்பு
09.07.2008 ஆனி 25 புதன்
ஆனி உத்தரம் விசேட உற்சவம்
13.07.2008 ஆனி 29 ஞாயிறு
சின்ன ஆண்டியப்பர் பூஜை
14.07.2008 ஆனி 30 திங்கள்
வருடாந்த குளிர்ச்சிப் பொங்கல்
27.07.2008 ஆடி 12 ஞாயிறு
கார்த்திகை உற்சவம்

## ஆகஸ்ட்

01.08.2008 ஆடி 17 வெள்ளி
ஆடி அமாவாசை
23.08.2008 ஆவணி 7 சனி
கார்த்திகை உற்சவம்
30.08.2008 ஆடி 28 திங்கள்
ஆலய மகோற்சவ ஆரம்பம்
இரவு 2.15 கொடியேற்றம்

## செப்டெம்பர்

03.09.2008 ஆவணி 18 புதன்
காலைத்திருவிழா ஆரம்பம்
08.09.2008 ஆவணி 23 திங்கள்
பூங்காவனம்
09.09.2008 ஆவணி 24 செவ்வாய்
கைலாய வாகனம்
13.09.2008 ஆவணி 28 சனி
சப்பறம்
14.09.2008 ஆவணி 29 ஞாயிறு
தேர்
15.09.2008 ஆவணி 30 திங்கள்
காலை - தீர்த்தம்
மாலை - மௌனத் திருவிழா
22.09.2008 புரட்டாதி 6 திங்கள்
பிராயச்சித்த அபிஷேகம்
30.09.2008 புரட்டாதி 19 செவ்வாய்
நவராத்திரி விரதாரம்பம்

## அக்டோபர்

08.10.2008 புரட்டாதி 22 புதன்
சரஸ்வதி பூஜை
09.10.2008 புரட்டாதி 23 வியாழன்
விஜயதசமி
17.10.2008 ஐப்பசி 1 வெள்ளி
கார்த்திகை உற்சவம்
27.10.2008 ஐப்பசி 11 திங்கள்
தீபாவளி தினம்
29.10.2008 ஐப்பசி 13 புதன்
கந்தஷஷ்டி விரதாரம்பம்

## நவம்பர்

04.11.2008 ஐப்பசி 19 செவ்வாய்
சூரசங்ஹாரம்
05.11.2008 ஐப்பசி 20 புதன்
பாரணை, தெய்வானை அம்மன்
திருக்கல்யாணம்
13.11.2008 ஐப்பசி 28 வியாழன்
கார்த்திகை உற்சவம்

## டிசம்பர்

11.12.2008 கார்த்திகை 26 வியாழன்
திருக்கார்த்திகை உற்சவம்
குமாராலய தீபம்
14.12.2008 கார்த்திகை 29 ஞாயிறு
ஆண்டியப்பர் பூஜை

சுபமங்களம்
நன்றி